Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 29-7-2019 Issued : 29-7-2019

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 8, 2019—தொகுதி 53—எண் 2**

**Tuesday the 8th January 2019—Volume 53—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

# 8-1-2019

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **வினாக்கள்–விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | *695-740* |
| 2. | **தகவல் கோரல்—** | |
| | *(அ)* பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது | *741-745* |
| | திரு. மு.க. ஸ்டாலின் | *741-743* |
| | மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | *743-745* |
| | *(ஆ)* ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது | *743,746-747* |
| | திரு. மு.க. ஸ்டாலின் | *743,746-747* |
| | மாண்புமிகு திரு. பி. தங்கமணி | *747* |
| | *(இ)* எழும்பூர் தொகுதி, திடீர் நகர் மற்றும் பி.கே. காலனி பகுதிகளில் குடிசைகளுக்கு மாற்றாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் | *745-750* |
| | திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் | *745-746* |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | *747-750* |

பக்கங்கள்

**2. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(ஈ) ஆயிரம் விளக்கு தொகுதி, பாலப் பணிகள் தொடங்குதல் 751

திரு. கு.க. செல்வம் 751

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 751

(உ) மேலூர் தொகுதி, மேலவளவு கிராமம், மதுரை மத்திய சிறையில் பல ஆண்டுகளாக சிறையில் உள்ளவர்களை முன்விடுதலை செய்தல் 752-754

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் 752

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 752-754

(ஊ) திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளில் அமெரிக்கன் படைப் புழுவின் தாக்குதலால் மக்காச்சோளப் பயிர்கள் பாதிப்பு 754-760

திரு. இ. பெரியசாமி 754-757

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 757-759

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் 759-760

(எ) கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படாதது, நெய்வேலி, மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டும் திட்டத்தைக் கைவிடக் கோருதல் 760-761

திரு. துரைமுருகன் 760-761





பக்கங்கள்

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019 762

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் 762

திரு. மு. திராவிடமணி 762

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 763-764

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 763-764

திரு. கு. பிச்சாண்டி 763

திருமதி எஸ். விஜயதரணி 763

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் 763

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 764-765

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 764-765

திரு. தா.மோ. அன்பரசன் 764

திருமதி எஸ். விஜயதரணி 764

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் 765

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019 782-783

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 783

**4. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2018–2019, அளித்தல்**—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 765-774

பக்கங்கள்

5. **அரசினர் தீர்மானங்கள்—**

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்றுவாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளுதல் — *775*

(ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — *1011-1012*

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுதல் — *1035-1036*

6. **அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2018–2019, முன்மொழிதல் (ஆ.செ.) — *776*

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.) — *782*

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.) — *1014*

7. **கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2018–2019, வாக்கெடுப்பு** — *776-782*

8. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்–விவாதத்திற்கான பதிலுரை—** — *783-1011*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — *959-997, 1006-1008*



பக்கங்கள்

8. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்–விவாதத்திற்கான பதிலுரை—** தொடர்ச்சி

திரு. துரைமுருகன் — *989*

திரு. மு.க. ஸ்டாலின் — *995-996*

திரு. கரி. இராமசாமி — *997*

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் — *998*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — *998-999*

திரு. இரா. குமரகுரு — *999-1000*

திரு. அ. பிரபு — *1000*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் — *1000,1003*

*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — *1000-1001*

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — *1001*

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் — *1002,1010*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் — *1002-1003*

*மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் — *1003-1004*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — *1004-1006*

திரு. சே. கருணாஸ் — *1008-1010*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன் — *1010*

பக்கங்கள்

**9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019 — 1012-1014

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 1012-1014

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019 — 1014-1016

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 1015-1016

(இ) தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019 — 1016-1018

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் — 1016-1018

(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 — 1018-1020

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 1018-1020

(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 — 1020-1022

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 1020,1022

(ஊ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019 — 1022-1024

*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 1022, 1024

(எ) தமிழ்நாடு தொழில் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2019 — 1024-1026

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 1024-1026





பக்கங்கள்

**9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019 — 1026-1028

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு — 1026-1027

(ஐ) தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு, 2019 — 1028-1029

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி — 1028-1029

(ஒ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 — 1030-1031

மாண்புமிகு திரு. கேசி. வீரமணி — 1030-1031

(ஓ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2019 — 1032-1033

மாண்புமிகு திரு. கேசி. வீரமணி — 1032-1033

(ஔ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019 — 1033-1035

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் — 1034-1035

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 1036-1040

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விளம்பி, மார்கழி 24, திருவள்ளுவர் ஆண்டு 2049

## 2019 ஜனவரி 8, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றை சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**31—**

**கம்பிவட ஊர்தி**

***30894—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மலைப் பகுதியிலிருந்து ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள், வால்பாறை தொகுதி, வால்பாறை மலைப் பகுதியிலிருந்து ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை எழுப்பியிருக்கின்றார்கள். ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கம்பிவட ஊர்திப் பாதை அமைக்கக் கோரியுள்ள பகுதியில் மட்டுமே வாழும் மற்றும் அழிவின் விளிம்பில்-endemic and endangered ஆக உள்ள Hornbills என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மிகப் பெரிய இருவாட்சிப் பறவைகள் காணப்படுகின்றன. இப்பறவைகள் கேரளா மற்றும் தமிழ்நாடு எல்லைப் பகுதிகளில் உள்ள காப்புக் காடுகளில் மட்டுமே காணப்படுகின்ற அரிய வகை பறவை இனமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வால்பாறை மலைப் பகுதி முதல் ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்கும்பட்சத்தில் ஆனைமலை புலிகள் காப்பகம், டாப்சிலிப் பகுதிகள் மற்றும் பரம்பிக்குளம் புலிகள் காப்பகப் பகுதிகளிலிருந்து வால்பாறை பகுதிகளுக்கு அட்டக்கட்டி பள்ளத்தாக்கு வழியாக இனப்பெருக்கம் செய்வதற்குச் செல்லும் பறவைகளுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வால்பாறை மலைப் பகுதியிலிருந்து ஆழியாறு வரை கம்பிவட ஊர்தி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்ற சொல்லைச் செயலாக்கிக் காட்டுகின்ற வகையிலே, அம்மா அவர்களின் கருணை உள்ளத்தை மனதில் வைத்தும், புரட்சித் தலைவரின் வள்ளல் தன்மையை ஒருங்கே பெற்றும்



2019 ஜனவரி 8]

அம்மா அவர்கள் வழியிலே தமிழக ஏழையெளிய மக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் வரும் 'தை' பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும்விதத்தில் அரிசி, கரும்பு, சர்க்கரை, முந்திரி, திராட்சையோடு ஆயிரம் ரூபாயை அள்ளித் தந்து மக்களின் மனதிலே நீங்கா இடம் பெற்ற எங்கள் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குத் துணையாக இருந்து வழிநடத்தி வரும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை எனது சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட ஆனைமலைப் பகுதியை தனி வருவாய் வட்டமாக அறிவித்ததோடு, அதைச் செயல்படுத்தும்விதமாக காணொலிக்காட்சிமூலம் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பரிந்துரை செய்த, கோவைக்குப் பெருமை சேர்க்கின்ற எங்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், இந்த வட்டத்தை அறிவிக்க என்னோடு சேர்ந்து குரல் கொடுத்து வந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், அன்புச் சகோதரர் அண்ணன் மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களுக்கும், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு. சி. மகேந்திரன் அவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதி 40 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட ஒரு மலைப் பிரதேசமாகும். சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டவர்கள் அதிகமாக வந்து செல்கின்ற பகுதி. வாகனங்களில் பொள்ளாச்சியிலிருந்து செல்ல சுமார் மூன்று மணி நேரம் ஆகும். சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி ரோப் கார் வசதி செய்து கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அதனைச் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த வினாவிற்கு முதலிலேயே தெளிவாக பதில் கூறியிருக்கிறேன். இருந்தாலும், வால்பாறை முதல் ஆழியாறு வரை வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளில் புதியதாகப் பாதை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமாயின், சாலை அமைக்கும் துறைகளான நெடுஞ்சாலைத் துறை அல்லது PWD போன்ற user agencies ஆக உள்ள துறைகள் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி, இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அப்படி விண்ணப்பிக்கும்பட்சத்தில், வனத் துறையானது அனுமதி வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதிக்குச் செல்ல ஒரு பாதைதான் உள்ளது. மழைக் காலங்களில் மரங்கள் சாய்ந்தாலோ அல்லது மண் சரிவு ஏற்பட்டாலோ போக்குவரத்து நிறுத்தம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. அங்குள்ள மக்களுக்கு எந்தப் பொருட்களையும் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, சேத்துமடை–சர்க்கார்பதி வழியாக மாற்றுப் பாதை ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், வனத் துறைக்குச் சொந்தமான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் செல்லும் சின்ன கல்லாறு, பெரிய கல்லாறு, Ryan Division மற்றும் சின்கோனா ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அந்தச் சாலைகள் வனத் துறைக்குச் சொந்தமானவை. வனத் துறை அனுமதி அளித்தால்தான் அந்தச் சாலைகளைச் செப்பனிட முடியும். எனவே, வால்பாறை மலைப் பகுதிக்குச் செல்ல மாற்றுவழிப் பாதையையும், மேற்படி பகுதிகளில் உள்ள சாலைகளைச் சீரமைத்துத் தருவதற்கு வனத் துறையின் அனுமதியையும் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பிவடப் பாதைகள் அமைக்கக் கோரியுள்ள பாதைகளில் அமைந்துள்ள புதுத் தோட்டம் எஸ்டேட் காடுகளில் மிகவும் அரிய வகை குரங்குகளான சிங்கவால் குரங்குகள் அதிகளவில் காணப்படுகின்றன. மேலும், கம்பிவடப் பாதை அமைக்கக் கோரியுள்ள பாதையில் குரங்கருவி–நவமலை, ஆனைமலை–பூனாட்சி, ஆனைமலை–Water falls, ஆனைமலை–Mount Stuart ஆகிய பகுதிகளில் யானைகள் செல்லும் பாதைகளும் உள்ளன. தேயிலைத் தோட்டங்களான water falls–ஐயர்பாடி வரை யானைகள் செல்லும் பாதைகளானது குறுகி பாதிப்படைந்துள்ளன. வால்பாறை, ஆழியாறு வழித்தடத்திலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடத்திலும் கம்பிவடப் பாதைகளை அமைக்கின்றபோது, மரங்களை வெட்டி சுத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். இப்பகுதி புலிகள் காப்பகத்தின் உள் மண்டலப் பகுதியாக இருப்பதால், வனங்களைச் சுத்தம் செய்தல் மற்றும் மரம் வெட்டுதல் போன்ற செயல்பாடுகள் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தால் தடை செய்யப்பட்டுள்ளன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை அமைக்கின்ற பணியைப் பொறுத்தவரையில், user agencies மூலம் விண்ணப்பித்தால் அதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தர முடியும். அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**32—**

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***35659—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, கேத்தி பேரூராட்சி, எல்லநள்ளி பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

உதகமண்டலம் தொகுதியைச் சார்ந்திருக்கிற கேத்தி பேரூராட்சி, எல்லநள்ளி பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இது அரசினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு இல்லாத காரணத்தால், இந்த ஆண்டு அந்தப் பள்ளியைத் தரமுயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்தின் வாயிலாக மரியாதைக்குரிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கூடுதலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக முதற்கண் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, கேத்தி பேரூராட்சி, எல்லநள்ளி உயர்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 100 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றார்கள். அங்கிருந்து என்.எஸ். ஐயா பள்ளி 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அதோடு அருவங்காடு காளிப்பேட் பள்ளியும் மற்றும் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளியும் கேத்தியில் இருக்கின்றன. அனைத்தும்



2019 ஜனவரி 8]

தனியார் பள்ளிகளாக உள்ளபோதிலும் மாணவர்கள் அங்கு சென்று கல்வி பயின்று வருகிறார்கள். கேத்தி பேரூராட்சி, எல்லநள்ளி பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும்பட்சத்தில், கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உதகைக்குச் சென்று படிக்கின்ற அந்த மாணவர்கள் நிச்சயமாக இங்கு வந்து சேருவார்கள். அதற்குத் தேவையான மைதானமும், இடமும் அங்குள்ளது. தாங்கள் கடந்த முறை தாழ்த்தப்பட்ட மக்களும், ஆதி திராவிட மக்களும் இருக்கின்ற என்னுடைய தொகுதியில் உள்ள எமரால்டு பகுதியில் உள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தந்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நிச்சயமாக அங்கு பள்ளி மாணவர்களுடைய வருகை அதிகமாகும். அந்தப் பள்ளிக்கு வேண்டியதை L&T என்கின்ற ஒரு தனியார் கம்பெனி செய்து வருகிறது. கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் compound wall அமைத்து, பழைய தகடுகளையெல்லாம் மாற்றி தகர Sheets ஆகப் போட்டு, நல்ல முறையில் maintenance செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் முடிந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து இந்தப் பள்ளியைத் தரமுயர்த்திக் கொடுக்க வேண்டும். மேலும், உதகை நகராட்சிக்குட்பட்ட ஓர் உருது ஆரம்பப் பள்ளி இருக்கின்றது. இங்கு ஐந்தாம் வகுப்பு வரை இருக்கின்றது. இங்கே உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 67. இந்தப் பள்ளியானது 1924 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்போது மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பள்ளியில்தான் முதன்முதலில் smart class–ஐ start செய்திருக்கின்றார்கள். 8–வது வரை உள்ள இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். இதனை நீங்கள் மனதில் வைத்து, தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்கள் வாழ்கின்ற இந்த மலை மாவட்டத்திற்கு இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றால் அங்கு 100 மாணவர்கள் தேவை. அந்தப் பள்ளியில் 9 ஆம் வகுப்பில் 17 பேர், 10 ஆம் வகுப்பில் 8 பேர்தான் பயில்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்கள். Infrastructure என்று சொல்லக்கூடிய அனைத்து வசதிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நிலையை மனதில் கொண்டு, 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எமரால்டு பள்ளியை இந்த ஆண்டு நாங்கள் தரமுயர்த்திக் கொடுத்திருக்கின்றோம். இருந்தாலும்கூட, மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற அந்த நிலையினை மனதில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி நல்ல முடிவினை மேற்கொள்வோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உருதுப் பள்ளியில் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் உருது போன்ற மொழிகள் சரியாகத் தெரிவது இல்லை. 8 ஆம் வகுப்பு வரை என்று இருக்கும்போது தமிழையோ, ஆங்கிலத்தையோ அவர்கள் கற்றுக்கொள்வார்கள். தயவுசெய்து அந்த உருதுப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நீங்கள் தரம் உயர்த்தித் தர வேண்டும். மற்றபடி, நமது காமராஜர் அவர்கள் கண்ட மதிய உணவுத் திட்டம், நமது மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டு, மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் அது தரம் உயர்த்தப்பட்டு, நமது மரியாதைக்குரிய ஐயா கலைஞர் அவர்களால் முட்டை வழங்க ஆணையிடப்பட்டு செவ்வனே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அன்றே பதில் சொல்லியிருந்தார். நானும் என்னுடைய கன்னிப் பேச்சில் சொல்லியிருக்கின்றேன். WHO சொன்ன மாதிரி, 80 சதவிகித நோய்கள் கையைக் கழுவாமையால்தான் ஏற்படுகின்றன என்று நான் என்னுடைய கன்னிச் பேச்சில் கூறியிருந்தேன். அதன் பிறகு நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் நிறைய இடங்களில் இதுசம்பந்தமாகப் பேட்டி கொடுத்திருந்தார்கள். இப்போது நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் என்றால், தயவுசெய்து சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே handwash அல்லது soap பயன்படுத்தி கையைக் கழுவக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு ஒரு குழந்தைக்கு 1 பைசா அல்லது 2 பைசாதான் செலவாகும். தயவுசெய்து இதனை நீங்கள் இந்த வருடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். Private schools–ல் குழந்தைகளுக்கு இந்த வசதியை செய்து தருகின்றார்கள். ஆனால், நமது அரசுப் பள்ளிகளில் அந்தக் குழந்தைகளுக்கு எதுவும் தெரிவதில்லை. விளையாடி முடித்துவிட்டு அப்படியே போய் கையினைக் கழுவாமல் சாப்பிட்டு விடுகின்றார்கள். ஆகையினால், தயவுசெய்து இதனை நீங்கள் implement செய்ய வேண்டுமென்று மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் இங்கே இரண்டு கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று, ஐந்தாம் வகுப்பு வரை இருக்கின்ற அந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்பது. அந்தப் பகுதியில் உருது பேசுகின்ற மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள் என்று உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகையினால், இந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பேசி ஒரு நல்ல முடிவினை நான் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, குழந்தைகள் கையைக் கழுவாமல் சத்துணவு சாப்பிடுகின்றபோது பல்வேறு தொற்று நோய்கள் வருவதாகத் தெரிவித்துள்ளார்கள். குழந்தைகள் அவர்களுடைய நகங்களை சுத்தமாக வைத்திருப்பதற்கும், கைகளை wash செய்வதற்கும் ஆசிரியர்களின் மூலமாக வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தத்தில் உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் உள்ளது. அது மிகவும் பழுதடைந்துள்ளது. அதனால் அங்கே வேலை செய்யக்கூடிய அதிகாரிகள் பயப்படுகின்றார்கள். ஆகவே, அருகில் உள்ள துரைக்கமலம் அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள கட்டடத்தில் அந்த அலுவலகம் இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். மேலும், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.70 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சம் வரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். இப்போது வினாக்கள்—விடைகள் நேரம் நடந்து கொண்டிருக்கின்றது. இப்படி தனித்தனியாகப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? உறுப்பினர், இப்பொழுது கேளுங்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SSA திட்டத்தில் பணம் ஒதுக்கி கட்டடம் கட்டப்படுகின்றது. ஆனால், அந்தப் பள்ளிகளுக்கு compound wall எங்குமே இல்லை. அதனைச் சிறப்புக் கவனமாக எடுத்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் உள்ளாட்சித் துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. தற்போது அந்தப் பராமரிப்புப் பணிகள் அனைத்தும் உள்ளாட்சித் துறையின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நானும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு



2019 ஜனவரி 8]

பேசி, எந்தெந்தப் பணிகளை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக, நகராட்சியின் மூலமாகச் செய்ய முடியுமோ, அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொள்வோம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில், தற்போது தரமுயர்த்தப்படுகிற உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்குமே சுற்றுச் சுவர்கள், கழிப்பிட வசதிகள், ஆய்வுக் கூடங்கள் உள்ளிட்டவை நபார்டு திட்டத்தின் மூலமாகக் கட்டப்படுகின்றன. எதிர்காலத்தில் அதுபோன்ற நிலைமை இருக்காது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

**திரு. பா. நீதிபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

எனது உசிலம்பட்டி தொகுதியில், டி. கிருஷ்ணாபுரம் என்ற இடத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை சென்ற ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியதற்காக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில், செல்லம்பட்டி ஒன்றியத்தில் நடுமுதலைக்குளம் என்ற கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியில் அதிக எண்ணிக்கையில் பள்ளி மாணவ, மாணவிகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 100 நடுநிலைப் பள்ளிகள், 100 உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதற்கு முந்தைய ஆண்டு, 150 நடுநிலைப் பள்ளிகள், 100 உயர்நிலைப் பள்ளிகள் என, உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் என்ற வகையில் மொத்தம் 450 பள்ளிகள் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தரமுயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாணவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில், அரசு விதிகளுக்குட்பட்டு இருக்குமேயானால், வருகின்ற கல்வி ஆண்டில் மாண்புமிகு முதல்வரோடும், மாண்புமிகு துணை முதல்வரோடும் கலந்தாலோசித்து அரசால் தேவைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் திருவாலங்காடு ஒன்றியத்தில் குறிப்பாக திருவாலங்காடு பகுதியில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. மணவூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி ஒன்றும் அதே பகுதியில் இருக்கிறது. இந்த இரண்டு பள்ளிகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். அதேபோல, கடம்பத்தூர் ஒன்றியத்திலுள்ள மணவாள நகர் பகுதியிலே கட்டட வசதிகள் இல்லாமல் கே.எம்.சி. பள்ளி இயங்கி வருகிறது. மணவாள நகர் மகளிர் உயர்நிலைப் பள்ளியிலும் இதேபோல போதிய கட்டடங்கள் இல்லாமல் இருப்பதால், மாணவர்கள் அவதிக்குள்ளாகிற சூழ்நிலை இருக்கிறது. இவை அனைத்திற்கும் போதிய நிதியை ஒதுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாள நகரிலுள்ள பள்ளிக்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்றும், திருவாலங்காட்டிலும் அதுபோன்ற நிலைகள் உருவாக்கப்படுமா என்றும் இரண்டு கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு பள்ளிகளிலும் நபார்டு திட்டத்தின் மூலமாக 8 வகுப்பறைகள் கட்டுவதற்காகவும், ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்காகவும், கழிப்பிட வசதி செய்து கொடுப்பதற்காகவும் இந்த ஆண்டு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில் அணைக்கரை, பந்தநல்லூர், திருபுவனம், ஆடுதுறை போன்ற ஊர்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அந்த மாணவர்கள் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பாடம் படித்துவிட்டு, 11 ஆம் வகுப்பில் Maths group, Science group அல்லது Arts group பாடங்களை விரும்பிப் படிக்கின்றபொழுது, மேல்நிலை வகுப்புகளில் ஆங்கில ஆசிரியர்களும், பாடப் பிரிவுகளும் இல்லாததால், அவர்கள் தத்தளிக்கின்ற நிலை இருக்கிறது. இந்த நிலைமை, என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கிற 234 தொகுதிகளிலும் உள்ளது. இந்த நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்றால், 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் கல்வியைக் கற்றுவிட்டு, மேல்நிலை வகுப்புகளில் அரசுப் பள்ளியிலே அவர்கள் ஆங்கில வழியில் கல்வி பயில முடியாததால், அந்த மாணவர்கள் தனியார் பள்ளிகளைத் தேடிப் போகிற ஓர் அவல நிலை தமிழகத்தில் நீடிக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி தருவதைப்போல, +2–விலும் ஆங்கில வழியில் கல்வி கற்பிக்க ஆசிரியர்களை நியமித்து, Chemistry, Physics, Zoology, Biology போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிக்க வேண்டும். 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பயில்கிற மாணவர்கள் மேல்நிலையிலும் ஆங்கில வழியில் கல்வியைத் தொடருவதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2019 ஜனவரி 8

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி வரையிலும் மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வியைக் கற்றுத் தருகிறோம், சில வகுப்புகளில் மாணவர்கள் கூடுதலாக இருப்பார்களேயானால், 2 வகுப்பறைகளாகக்கூட ஆங்கில வழிக் கல்வியைக் கற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களால், +1, +2 வகுப்பில் படிக்கின்ற மாணவர்களுக்கென தனியாக ஆங்கில ஆசிரியர்கள் போட முடியுமா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. மொழிப்பாடம் என்பது உயர்நிலைப் பள்ளி வரையிலும் கொண்டு வரப்படுகிறது. அந்த மாணவர்கள் ஆங்கிலம் கற்றதற்குப் பிறகு, ஆங்கில ஆசிரியர் தனியாகத் தேவையில்லை என்ற நிலைதான் இதுவரையிலும் நீடித்திருக்கிறது. உங்கள் கோரிக்கை என்ன என்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**33—**

## கூட்டுறவுப் பண்டகசாலை

***25347—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் கூட்டுறவுப் பண்டகசாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2019 ஜனவரி 8]

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு பகுதி, வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடி பிரிவு 2–5–1981–ல் அணைக்கட்டு பகுதியில் துவங்கப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில், போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால் 23–10–1997 அன்று மூடப்பட்டது. எனினும், ஏழையெளிய நடுத்தர மக்களின் நலன் கருதி புதிதாக அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகளை தமிழகம் முழுவதும் திறப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், அணைக்கட்டு பகுதியில் புதிதாக அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடி திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியானது, முழுக்க முழுக்க கிராமங்கள் சூழ்ந்த தொகுதியாகும். அணைக்கட்டு, ஒடுகத்தூர், ஊசூர் போன்ற பகுதிகளில் உள்ள, ஜார்தான்கொள்ளை, பாலாம்பட்டு, பீஞ்ஜமந்தை போன்ற மலைக் கிராமங்களில் மட்டும் சற்றேறக்குறைய 20,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். சற்றேறக்குறைய ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட அணைக்கட்டு, ஊசூர் போன்ற கிராமங்களில் சாலை வசதி இல்லாத காரணத்தினால், மலைவாழ் மக்கள் கீழே இருக்கக்கூடிய ஒடுகத்தூர் பகுதிக்கு வந்து, ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குத் தேவையான பொருட்களை மொத்தமாக வாங்கி இருப்பு வைக்க வேண்டிய நிலை இருக்கின்றது. மழைக்காலங்களில் அவர்கள் வந்துபோவதற்கு சிரமமாக இருக்கின்றது. திருவிழா, சுபநிகழ்ச்சிகள் போன்ற காலங்களில், அணைக்கட்டு, ஒடுகத்தூர் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள், சற்றேறக்குறைய 40, 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்ற வேலூர் மாநகருக்கு வந்து பொருட்களை வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணைக்கட்டு பகுதியில் ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்திருக்கிறார். ஒடுகத்தூர் பகுதி மற்றும் ஊசூர் பகுதியிலுள்ள ஏழையெளிய

மக்கள் பயன்பெறும் வகையில், மலிவான பொருட்களை வாங்கக்கூடிய வகையில் அந்த 3 பகுதிகளுக்கும் சேர்த்து கூட்டுறவுப் பண்டக சாலை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் 14 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 8 பண்டகசாலைகள் இலாபத்தில் இயங்குகின்றன. 3 நடப்பு இலாபத்திலும், 3 நட்டம் மற்றும் குவிந்த நட்டத்திலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தத் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலையை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் சார்பாக 100 அம்மா சிறப்பு அங்காடிகளைத் திறப்பதற்கு வழிவகை செய்கின்ற வகையில் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையில், வேலூர் மாவட்டத்தில் 3 அம்மா சிறு பல்பொருள் சிறப்பு அங்காடிகளை நான் திறந்து வைத்துவிட்டு வந்தேன். அந்தச் சிறப்பு அங்காடிகளில் என்ன சிறப்பு என்றால், 300 வகையான தரம் மிக்க சிறப்பான கம்பெனி பொருட்கள் விற்கப்படும். அந்தக் கடைக்கு pink colour பூச்சு அடிக்கப்படும். அங்கே பணியாற்றும் பணியாளர்களுக்கு, பல்பொருள் அங்காடியில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு எப்படி ஒரு சிறப்பான தகுதியை உருவாக்க பயிற்சி கொடுக்கப்படுகிறதோ, அதுபோன்று அந்தப் பொருட்களை விற்பதற்கும் அவர்களுக்குப் பயற்சியைக் கொடுத்து Blue colour–ல் அவர்களுக்கு uniform கொடுத்து, அந்தக் கடைகள் திறக்கப்படுகின்றன. இதன் மூலமாக அந்தக் கிராமப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு நகரங்களுக்குப் போய் பொருட்களை வாங்கினால் என்ன விலை இருக்குமோ அதைக்காட்டிலும் குறைந்த விலையில் வாங்குகின்ற ஒரு வாய்ப்பை அளித்து, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மிகப் பெரிய, ஓர் அற்புதமான சாதனையைச் செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10–25

இதன் மூலமாகக் குறைந்தபட்சம் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 300 வகையான பொருட்கள் அங்கே இருக்கும். இரண்டாவது, அந்தக் கடைகளின் வருமானம், வெறும் margin மட்டும்தான். ஒரு மாதத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்தால் ரூபாய் 15,000 மட்டும்தான் இலாபம் கிடைக்கும். அந்த 15,000 ரூபாய் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்திற்குப் போய்விடும். ஆக, அதிக இலாபம் இல்லாமல் இன்று முதல் தொடக்கமாக, இதுபோன்ற 100 பல்பொருள் அங்காடிகளைத் திறக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குள் அடங்கிய கனியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாப்பந்தோப்பு ஊராட்சி, அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புத்தூர், நாட்டார்மங்கலம், இறைவன்காடு, பள்ளக்கொல்லை, கழனிப்பாக்கம், கன்னிகாபுரம், மகமதுபுரம், பூஞ்சோலை, கரடிக்குடி, பிச்சாநத்தம், ஊனை, ஊனை பள்ளத்தூர் போன்ற ஊராட்சிப் பகுதிகளுக்கும், வேலூர் ஊராட்சியிலுள்ள சதுப்பேரி, தெள்ளூர், மேல்மணவூர் போன்ற ஊராட்சிப் பகுதிகளுக்கும் பகுதி நேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று நான் கேட்டபோது, தாய்க் கடையிலிருந்து பிரித்த பிறகு, தாய்க் கடையில் 481 குடும்ப அட்டைகளும், பிரிக்கப்பட்டிருக்கக்கூடிய கடையில் 165 குடும்ப அட்டைகளும் உள்ளன என்றும், அரசு வழிகாட்டு நெறிமுறையின்படி தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்றும் அரசு கூறுகிறது. கிராமப்புறப் பகுதிகள் என்பதால், சற்றேறக்குறைய நான்கு, ஐந்து கிலோ மீட்டர் தொலைவிற்குச் சென்று தாய்க் கடையிலே பொருட்கள் வாங்கக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால், அரசு மறுபரிசீலனை செய்து, தூரத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, விதிகளைத் தளர்த்தி, ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், பகுதி நேரக் கடைகளை அமைத்துத் தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னதாக பண்டகசாலை அமைக்க முடியுமா என்று கேட்டார். இப்போது பகுதி நேர நியாய விலைக் கடை கேட்கிறார். மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) இரண்டிற்கும் அமைச்சர் நான்தான். ஆனால், பண்டகசாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுவிட்டு, தற்போது பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென சம்பந்தம் இல்லாமல் கேள்வி கேட்கிறார். பகுதி நேர நியாய விலைக் கடையைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அல்ல. இன்றைக்கு நான்கு, ஐந்து கிலோ மீட்டர் தூரம் மக்கள் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய சூழ்நிலையை, அந்தமாதிரியான இடர்பாட்டினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உருவாக்கவில்லை. அதுபோன்று குறிப்பிட்ட எண்ணிக்கையில் குடும்ப அட்டைகள் நியாய விலைக் கடைகளில் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யவில்லை. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே சிறப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய சிரமங்களைக் கருத்தில்கொண்டு, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையைப் பார்க்காமல், அந்தப் பகுதியில் இருக்கின்ற சூழ்நிலை, சட்டம்–ஒழுங்கு போன்ற சமூகரீதியான பதற்றம் இருந்தால் அதைக் கருத்தில்கொண்டும், மக்கள் நீண்ட தூரம் சென்று பொருட்களை வாங்கி வரக் கூடாது என்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையை ஓர் அளவாக வைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், ஐந்தாறு கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்கும்பட்சத்தில், 10, 15 குடும்ப அட்டைகள் குறைவாக இருந்தால், நிச்சயமாக துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, பகுதி நேர நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வந்த பிறகு, கிராமங்களை உள்ளடக்கிய, போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளிலுள்ள மக்கள் பயனடைகின்ற வகையில் புது நகரும் நியாய விலைக் கடைகளை இன்றைக்குத் திறந்து, மக்களுக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக



2019 ஜனவரி 8]

அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இதுபோன்ற சிரமம் இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கவனத்தில் எடுத்துச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

## துணை மின் நிலையம்

***7253–திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி, அகரம் கிராமத்தில் 33/11 KV துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் 33/11 KV துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. மார்ச் மாதக் கடைசிக்குள் அந்தத் துணை மின் நிலையம் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

**திரு. ப. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவையின் மாண்பிற்கும், மரபிற்கும் சிறிதும் சேதாரம் ஏற்படாமல், நேர்மையோடும், நெறியோடும் பேரவையை நடத்திச் செல்லும் மேன்மைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவான வணக்கம்.

[2019 ஜனவரி 8

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசை நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை இன்று நாடே போற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாள் முழுவதும் உழைத்தாலும், இருநூறு ரூபாயை முழுமையாகப் பார்க்க முடியாத ஏழைகளுக்கு பொங்கல் பரிசுடன் முழுவதுமாக இரண்டு ஐநூறு ரூபாய் தாள்களைத் தந்து, அவர்கள் மனதிலே மகிழ்ச்சியைப் பொங்கச் செய்த மக்களின் முதல்வர் மாண்புமிகு அண்ணன் அவர்களை வணங்கி, நன்றி பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கும், கட்சிக்கும் உறுதுணையாக இருந்து, அம்மாவின் வழி தொடர உதவிடும் அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

பொன்னேரி தொகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, ஆரணி பேரூராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், ஆற்றல் மறவர், அருமை அண்ணன் மாண்புமிகு திரு. தங்கமணி அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கஜா' புயலின் தாக்கத்தால் இரவில் தவித்த டெல்டா மாவட்ட மக்களின் இல்லங்களிலும், அவர்கள்தம் உள்ளங்களிலும் ஒளியேற்றிவைத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், ஆற்றல்மிகு அண்ணன் திரு. தங்கமணி அவர்களுக்கும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்ட மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவையில் தனியாக ஒரு பாராட்டுத் தீர்மானமே கொண்டு வரலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு நாடும், நல்லோரும், பலரும் பாராட்டுகின்ற வகையில் இரவு பகல் பாராமல் களப்பணி ஆற்றியுள்ளனர். குறிப்பாக, பல நூற்றுக்கணக்கான அலுவலர்களையும், பல ஆயிரக்கணக்கான பணியாளர்களையும் களமிறக்கி, புயல் வேகத்தில் பணியாற்றி மின் விநியோகத்தைச் சீரமைத்துத் தந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், போற்றுதலுக்குரிய அண்ணன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கேள்விதான் கேட்கிறார்.



2019 ஜனவரி 8]

**திரு. ப. பலராமன்:** பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சியிலுள்ள மக்கள் பயன்பெறும் வகையில், 33/11 KV திறனுடைய துணை மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொன்னேரி தொகுதியில், பொன்னேரி பேரூராட்சிக்கு, 110/33/11 KV துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உறுப்பினருடைய தொகுதியில் 12 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. இப்பொழுது மின்னழுத்தத்தின் காரணமாக புதியதாக ஒரு 33/11 KV துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் மின் தேவை அதிகமாக இருப்பின், பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

**திரு. ப. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. பொன்னேரி தொகுதியிலுள்ள மக்களின் நலன் கருதி, பொன்னேரி பேரூராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஐந்து பஞ்சாயத்துகளில், சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 33/11 KV திறனுள்ள பொன்னேரி துணை மின் நிலையத்தினை 110/33/11 KV திறன் கொண்டதாகத் தரம் உயர்த்திட வேண்டுமென்று சென்ற கூட்டத்தொடரில் கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது அதற்குண்டான இடவசதியும் உள்ளதால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், கனிவோடு பரிசீலித்து, அதை மிக விரைவில் செய்து கொடுத்தால், என்னுடைய தொகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நன்றியுடன் அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லிவிட்டார், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

[*2019 ஜனவரி 8*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, 12–7–2017 அன்று, இதே அவையில், 33/11* KV *திறன்கொண்ட ஒரு துணை மின் நிலையத்தை பி.வி. ஐயர் கோவில் தெரு,* Anderson Street *பகுதிகளில் அமைக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்றார். மாதங்கள் பதினெட்டு உருண்டோடிவிட்டன. ஏற்கெனவே, பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு,* G.O.*மூலம் உறுதியான அந்த இடம், காவல் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால், காவல் துறைக்கு வண்ணாரப்பேட்டை பகுதியிலே மாற்றாக ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கின்றது. ஆகவே, இந்த இட மாற்றத்தை விரைவாகச் செயல்படுத்தி, தம்பு செட்டித் தெரு பகுதியிலே இருக்கின்ற துணை மின் நிலையத்தில் அதிகமான மின்னழுத்தம் இருக்கின்ற காரணத்தால், துணை மின் நிலையம் அவசியம் அங்கு தேவைப்படுவதால், உடனடியாக அமைச்சர் அவர்கள் அதை அமைக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். ஆனால், அவர் கேட்ட கேள்விக்கு அவரே பதில் சொல்லிவிட்டார். காவல் துறைக்குச் சொந்தமான இடத்தை மின்சார வாரியம் எடுத்துக்கொண்டு, மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடத்தைக் காவல் துறைக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த இடப் பரிமாற்றம் செய்யும் நேர்வில், இடத்தினுடைய நில மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். நான் அதைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கின்றேன். கூடிய விரைவில் அந்த இடமாற்றம் வந்தவுடன், அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



*2019 ஜனவரி 8*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**35—**

## பூங்கா

***9509—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் நகராட்சியிலுள்ள சின்னக்குளத்தைத் தூர்வாரி நடைபாதையுடன்கூடிய பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குச் சொந்தமான சின்னக்குளத்தைத் தூர்வாரி, பொதுமக்களின் உபயோகத்திற்காக நடைபாதையுடன்கூடிய பூங்கா அமைக்க 7 கோடி ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசாணை எண் 82, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23–8–2018–ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகரமானது வளர்ந்து வரக்கூடிய நகரம். ஒட்டன்சத்திரம் நகரின் மையப் பகுதியிலே சுமார் 27 ஏக்கர் பரப்பளவு கொண்ட சின்னக்குளம் என்ற குளம் இருக்கிறது. அந்தக் குளத்தினைத் தூர்வாரி நடைபாதையுடன்கூடிய பூங்கா*

[2019 ஜனவரி 8

அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே 2016 ஆம் ஆண்டு கேள்வி கேட்டிருந்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நிதி ஒதுக்கி, ஒப்புதல் வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பணியைச் செய்கின்ற நேரத்திலே, குளத்தைத் தூர்வார வேண்டும். அந்தக் குளத்தில் கழிவுநீர் வந்து கலக்கிறது. அந்தக் கழிவுநீரையும் சுத்தப்படுத்தும்விதமாக அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நகராட்சியைப் பொறுத்தளவிற்கு பூங்கா இல்லை. எனவே, பொதுமக்கள், சிறுவர்களின் பொழுதுபோக்கிற்காக அங்கு ஒரு பூங்காவினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் நகராட்சியிலே 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து வீடுகளுக்கு 50 விழுக்காடு என்றும் என்றும் வணிக நிறுவனங்களுக்கு 100 விழுக்காடு என்றும் வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். அங்கிருக்கின்ற பொதுமக்களும், வணிகர்களும் அந்த வரியைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அங்கு 400 விழுக்காடாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே, வணிகப் பெருமக்களோடு சென்று, நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களிடம் வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆனால், அப்படி கேட்டுக்கொண்டும் இதுவரையில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அங்கிருக்கின்ற வணிகர்களெல்லாம் ஒரு நாள் கடையடைப்பு செய்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், சின்னக்குளத்திற்கு உடனடியாக நிதி ஒதுக்கி, விரைவிலே அந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகரின் மையப் பகுதியில் 27 ஏக்கர் அளவில் சின்னக்குளம் அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால், புள்ளிவிவரப்படி 11.63 ஹெக்டேர் நிலப்பரப்பில் சின்னக்குளம் அமைந்துள்ளது. நகராட்சிக்குச் சொந்தமான சின்னக்குளத்தைத் தூர்வாரி கரையை



2019 ஜனவரி 8]

பலப்படுத்தவும் பொதுமக்களின் உபயோகத்திற்காக நடைபாதை அமைத்திடவும், குழந்தைகள் விளையாடுமிடம், செயற்கை நீரூற்று, மின்விளக்கு வசதிகள், விளையாடுமிடம் அமைத்து, பல்வேறு அம்சங்களுடன்கூடிய பூங்காவாக உருவாக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், இந்தக் குளத்தில் கழிவுநீர் சேராத வகையில் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, வடிகால் வசதிகள் அமைத்திடவும், இக்குளத்தினைத் தூர்வாரி மழைநீரை சேமிக்கும் வசதிகளையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட 7 கோடி ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள 7–2–2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் 400 சதவிகிதம் வரி உயர்த்தப்பட்டதாக ஒரு தவறான தகவலைத் தெரிவித்தார். ஒரு சில இடங்களில் Board–ல் முடிவு செய்யலாம். அப்படியே முடிவு செய்தாலும்கூட, துறைச் செயலாளர் மற்றும் நகராட்சி நிருவாக ஆணையரிடம் அனுமதி பெற வேண்டும். அரசு விதியை மீறி எதுவும் செய்யக் கூடாது. Board–க்கு அந்த அதிகாரம் இருக்கிறது. அது உங்களுக்கும் தெரியும். அரசு விதியை மீறி செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டுள்ளோம். இதுபோன்ற சூழ்நிலை எங்கிருந்தாலும், உடனடியாக அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். இதற்கு முன்பே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எந்தவிதமான சூழ்நிலையிலும் அம்மாவினுடைய அரசு அதிகமான வரியை மக்கள்மீது திணிக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதுபோன்று எங்கேயாவது இருந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

*முற்பகல் 10–40*

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் பேரூராட்சி 1971–ல் ஆரம்பிக்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு

அண்ணன் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோதுதான் நகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டது. பேரூராட்சியாக இருந்த சமயத்தில், சுமார் 2,550 குடிநீர் இணைப்புகள்தான் இருந்தன. இப்போது 5,100 குடிநீர் இணைப்புகள் இருக்கின்றன. அதில், 1975 ஆம் ஆண்டில் சுமார் 25 கிலோ மீட்டர் அளவில் பகிர்மான குழாய்கள் போடப்பட்டன. இப்போது, 40 கிலோ மீட்டர் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 45 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட குழாய்கள் எல்லாம் மிகவும் பழுதடைந்து விட்டன. அதுமட்டுமல்லாமல், 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று மட்டும் உள்ளதால் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, 45 ஆண்டுகளுக்கு முன்பாக 40 கிலோ மீட்டர் தூரத்திற்குப் போடப்பட்ட பழுதடைந்த பகிர்மானக் குழாய்களை மாற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரை பக்கம் 26—ல், 'வட மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டு இருக்கிறது' என்று சொல்லியுள்ளீர்கள். இந்த ஆண்டு வானிலை ஆய்வு மையம், முதலில், '112 சதவிகிதம் அதாவது இயல்பைக் காட்டிலும், 12 சதவிகிதம் மழை கூடுதலாகப் பெய்யும்' என்று சொன்னது. ஆனால் இப்போது, பல்வேறு மாவட்டங்களில் 24 சதவிகிதம், 40 சதவிகிதம், 50 சதவிகிதம் என்ற அளவில் மழை குறைவாகப் பெய்திருக்கிறது. எங்களது திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தளவில், கடுமையான வறட்சி. ஏற்கெனவே முன்னாள் அமைச்சர், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர், 2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான கூட்டத் தொடரின்போது குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த சமயத்தில், நீங்கள் சொன்னீர்கள், '31–8–2018–க்குள் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேடசந்தூர் தொகுதி முழுவதிலும், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம்' ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளிலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பூங்கா அமைப்பது குறித்து மூலக் கேள்வியைக் கேட்டுவிட்டு, இப்போது வேறு சப்ஜெக்ட்டில் கேள்வியைக் கேட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எப்படி பதில் இருக்கும்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) அதனால்தான் நான் பேசாமல் இருந்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு





உறுப்பினர் அவர்கள் வேறு சப்ஜெக்ட்டில் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) சீக்கிரம் கேள்வியை முடியுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** குடிநீர்ப் பிரச்சினை. (குறுக்கீடு) வனத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். திண்டுக்கல் மாவட்டத்தில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை நிலவுகின்றது. ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, திண்டுக்கல்லில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் இப்போதே குடிநீர்ப் பிரச்சினை ஆரம்பித்து விட்டது. தமிழ்நாடு முழுவதும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது. எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றிச் சொன்னார் அதேபோல், தமிழ்நாடு முழுவதும், எந்தெந்த மாவட்டத்தில், எந்தளவு வறட்சி நிலவுகிறதோ, அதற்குத் தகுந்தாற்போல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, ஏற்கெனவே நீங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கும் குடிநீர்த் திட்டங்கள் மட்டுமல்லாது, ஆழ்க்குழாய்க் கிணறுகள் எங்கெங்கு தேவைப்படுகின்றன என்பதைக் கண்டறிந்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தொடர்பு கொண்டு, குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களது திண்டுக்கல் மாவட்டத்திலும் குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. அதனைத் தீர்ப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அதற்காக சிறப்பு நிதி ஒதுக்க முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு) வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே, இதனை கவனத்தில் எடுத்துக்கொண்டு, உடனடியாக அந்தப் பணிகளில் ஈடுபட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், கூடுதலாக நிதி ஒதுக்க முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பூங்காவில் ஆரம்பித்து, மேல்நிலைத் தொட்டி வரை பல்வேறு

[2019 ஜனவரி 8

கேள்விகளைக் கேட்டுள்ளார்கள். நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் pipe line damage ஆகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மேல்நிலைத் தொட்டியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அவசியம் இருப்பின் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோல், குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தளவில், அம்மா அவர்கள் வழியில் நடக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், சென்னை மட்டுமல்ல, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், பல்வேறு திட்டங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உங்களுடைய மாவட்டத்திலும்கூட, நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 636 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, மிக வேகமாக அங்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, திண்டுக்கல் நகராட்சிக்கு 70 கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய மாவட்டத்தில், அதிகமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இயற்கையின் காரணமாக, மழை பெய்யாமல் இருக்கிறது. 142 ஆண்டு காலமாக இல்லாத கடுமையான வறட்சியைக்கூட நாங்கள் சமாளித்தோம். அங்கிருக்கும் பிரச்சினைகளை துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, கண்டிப்பாக, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதே பொருள் குறித்து நிறைய கவன ஈர்ப்பு அறிவிப்புகளை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை, வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. கொஞ்சம் பணிகள்தான் பாக்கியுள்ளன. எந்தெந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்க வேண்டும் என்பதை முதலில் முடிவு செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் தொகுதி, வேலூர் மாநகராட்சியாக இருக்கிறது. எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் உள்ள நேதாஜி மார்க்கெட் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில்



2019 ஜனவரி 8]

இருக்கிறது. அந்த மார்க்கெட்டில் 'Smart City'–ன்படி கடைகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநகராட்சி ஆணையர் அவர்கள், இருக்கிற கடைக்காரர்களை எல்லாம் அழைத்துப்பேசி, 'நீங்கள் எல்லோரும் உங்கள் கடைகளை காலி செய்து கொடுங்கள், நாங்கள் புதிதாகக் கடைகளைக் கட்டுகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் எங்களுக்கே கடைகளைத் தர வேண்டுமென்று கடைக்காரர்கள் கேட்டபோது, 'உங்களுக்கெல்லாம் கடைகள் கிடையாது. பொது ஏலம்மூலம் கடைகளை விடுவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். 50 ஆண்டுகாலம், 60 ஆண்டுகாலமாக மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்திலுள்ள கடைகளில்தான் வியாபாரம் செய்து வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலையில், கடையை திருப்பித் தந்துவிட்டு நீங்கள் சென்று விடுங்கள் என்று அவர்களிடம் சொன்னால், அவர்கள் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வார்கள்? இதை நீங்கள் கருத்தில்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

அதைப்போல், எங்களுடைய தலைவர் ஆட்சிக் காலத்தில், எங்களுடைய தளபதி அவர்கள் துணை முதலமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்த காலத்தில், அந்த வியாபாரிகளெல்லாம் என்னென்ன கேட்டார்களோ, அத்தனையையும் செய்து கொடுத்தோம். நம்முடைய மாநிலத்தில் பொது ஏலம் விட்டால், வெளி மாநிலங்களிலிருந்து வந்து கடைகளை ஏலம் எடுக்கிறார்கள். நம்முடைய ஏழையெளிய மக்கள் 50 ஆண்டுகாலம், 60 ஆண்டுகாலம் பரம்பரை பரம்பரையாக உள்ளூரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கடை எங்கே கிடைக்கும்? எனவே, இருக்கிற கடைகளை அவர்களுக்குத் தந்துவிட்டு, மீதி இருக்கிற கடைகளை பொது ஏலம் விட்டால் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு முற்றிலும் சம்பந்தமில்லாத கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது தொடர்பாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரியும். இந்தக் கடைகளை ஏலம் விடும்போது சில விதிமுறைகள் இருக்கின்றன. 50 ஆண்டுகாலமாக அவர்கள் இருக்கிறார்கள்; மாற்றுக் கருத்து இல்லை. சில இடங்களில் renewal செய்கிறோம். சில இடங்களில் குறிப்பிட்ட சிலருக்கு மறு ஏலம் வைத்துக் கொடுக்கிறோம். விதிமுறைகளுக்குட்பட்டுதான் அதைச் செய்ய முடியும். இருந்தாலும்கூட, அங்கே வெளி மாநிலங்களிலிருந்து வந்து ஏலம் எடுக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களைத் தவிர்த்துவிட்டு, உள்ளூரில் இருக்கிறவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, விதிமுறைகளுக்குட்பட்டு, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம்

***36618—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதியில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரிலே ஓர் ஆய்வகம் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் காஞ்சிபுரத்தில் புதிதாக ஆய்வகம் தேவையில்லை என்று அரசு கருதுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் துறைக்கான இரண்டு துறை அலுவலகங்கள், ஒன்று Engineering Wing, மற்றொன்று Scientists Wing என்று இருப்பதனை நாங்கள் அறிவோம். அந்த இரண்டு துறை அலுவலகங்களில் Engineering Wing என்ற துறை ஏற்கெனவே ஸ்ரீபெரும்புதூரில் ஒன்றும், மற்றொன்று மறைமலைநகரிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. Scientists Wing என்று சொல்லக்கூடிய ஆய்வுகளைச் செய்யக்கூடிய ஆய்வகம் மறைமலைநகரில் இருக்கிறது என்பதனை நாங்கள் அறிந்திருக்கிறோம். இருந்தாலும்கூட, காஞ்சிபுரத்தில் பெருகிவரக்கூடிய தொழில் வளங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார். அதிகளவில் பட்டுச் சேலையும், கைத்தறி, பருத்தி ஆடைக்கான நெசவுகளும் செய்யக்கூடிய ஒரு நகரமாக, தொகுதியாக காஞ்சிபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள உத்திரமேரூர் தொகுதி விளங்குகிறது. அங்கே பட்டுச்சேலை, பருத்தி நூலிலிருந்து வெளிவரக்கூடிய சாயக் கழிவுகள் பெருமளவில் நீர் ஆதாரத்தைப் பாதிக்கின்றன. ஆய்வகங்கள் மூலமாகத்தான் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதேபோல, Blue Metals என்று சொல்லக்கூடிய Quarries அதிகமாக இருக்கின்றன. அதன் மூலமாக பரவக்கூடிய Air Pollution–காற்று மாசுபடுதல் அதிகமாக இருக்கிறது. அதேபோல, எங்களுடைய ஊரில் அதிகளவில் அதாவது, 130 அரிசி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றினால் ஏற்படக்கூடிய Air Pollution, Water Pollution, அதில் வெளியேறக்கூடிய உமி, அதில் வரக்கூடிய சாம்பல் போன்றவையெல்லாம் அதிகளவில் சுற்றுப்புறத்தைப் பாதிக்கிறது என்பதனால், இவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், தொழிற்சாலைகள் பெருகி வரக்கூடிய பகுதியாகவும் இவை இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுகளை ஆய்வு செய்து, அவற்றை உடனடியாகத் தடுத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஆய்வகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஸ்ரீபெரும்புதூரில் ஒரு D.E. அலுவலகமும், இரண்டு A.E. அலுவலகங்களும், ஒரு A.W. அலுவலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, மறைமலைநகரிலும் ஒரு D.E. அலுவலகமும், இரண்டு A.E. அலுவலகங்களும், ஒரு A.W. அலுவலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10—50

அதேபோல், மறைமலைநகரில் சிறந்த ஆய்வகம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு வருடத்திற்கு 2,400 நீர் மாதிரிகளையும் 300 புகை போக்கிக் கழிவுகள் உள்ளிட்ட மற்ற கழிவுகளையும் ஆய்வு செய்கின்ற அளவுக்கு capacity இருக்கிறது. ஆனால், அந்தளவுக்குக்கூட இன்னும் அந்த ஆய்வகத்தில் மாதிரிகள் பரிசோதனைக்கு வருவதில்லை. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற இடத்தில் தற்போது ஆய்வகம் அமைக்கத் தேவையில்லை என்றே அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றபடி அங்கே ஆய்வகம் அமைக்க வேண்டிய தேவையிருப்பின், ஆய்வு செய்து கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலைநகரில் இருக்கக்கூடிய ஆய்வகத்திற்குப் போதுமான அளவில் மாதிரிகள் வருவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனென்று சொன்னால், ஸ்ரீபெரும்புதூரில் இருக்கக்கூடிய ஆய்வகமானது காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஒட்டுமொத்தத் தொகுதிகளையும் உள்ளடக்கிய பகுதிகளுக்கான ஆய்வகமாகச் செயல்படுகிறது. அங்கேதான் அதிகமான தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்குட்பட்ட





பகுதிகளில் மட்டுமே 5 industrial estates இருக்கின்றன. அவற்றில் அதிக அளவில் வாகனங்களினுடைய உதிரி பாகங்கள் தயாரிக்கக்கூடிய. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தேவையிருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார். மேற்கொண்டு என்ன கேட்கிறீர்கள்? கேள்வியை விரைவாக முடியுங்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** கேள்வியை முடித்துவிடுகிறேன். எனவே, அந்தப் பகுதிகளில் ஆய்வகத்தின் தேவை அதிகமாக இருக்கின்றது. எதை வைத்துச் சொல்கிறேன் என்று சொன்னால், அங்கேயிருக்கக்கூடிய அலுவலகத்திலிருந்து எடுக்கக்கூடிய மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக கிண்டியிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு கொண்டு செல்கின்ற காரணத்தால்தான் காஞ்சிபுரத்தில் நிச்சயமாக, கண்டிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வகத்தை அமைத்துத் தருவார் என்ற நம்பிக்கையோடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டார். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உட்காருங்கள்.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## கால்நடை மருத்துவமனை

***16617—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், கிடாரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கிடாரம் ஊராட்சியில் 3,096 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கே கால்நடை மருத்துவமனை துவங்கிட இயலாது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை அமைக்கக் கோரியிருக்கும் கிடாரம் கிராமத்தில், அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, புதிய கால்நடைக் கிளை நிலையம், 2 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவீட்டில் தோற்றுவிக்கப்பட்டு, 8–3–2018 அன்று முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

**திரு. எம். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை சிறப்பாக வழிநடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், கிடாரம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், ஏழூர்பட்டி ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தில், தொட்டியம், மேய்க்கல்நாயக்கன்பட்டி மற்றும் எம். புத்தூர் ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கோரும் ஏழூர்பட்டி கிராமத்திலிருந்து இவை சுமார் 8 முதல் 10 கிலோ மீட்டர் தூரத்தில் இயங்கி வருகின்றன. ஏழூர்பட்டி கிராமத்தைச் சுற்றியுள்ள ஏழூர்பட்டி, மகாலிப்பட்டி, குண்டுமணிப்பட்டி, உடையாகுளம்புதூர், பூசாரிப்பனையூர், அளியபுரம், தலைமலைப்பட்டி மற்றும் பாரதிபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 2,100 மாட்டினங்களும், 11,000 ஆட்டினங்களும் மற்றும் 4,400 கோழியினங்களும் ஆக மொத்தம் 17,500 கால்நடைகள் உள்ளன. ஏழூர்பட்டி கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் 3,200–க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் பராமரிக்கப்படுவதால் அங்கே புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. துறை அதிகாரிகளால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஏழூர்பட்டி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

**திரு. எம். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று ஏழூர்பட்டி கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலமாக எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் உலகப்புகழ்பெற்ற வேடந்தாங்கல் இருக்கிறது. அந்த வேடந்தாங்கலில் 5000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். வேடந்தாங்கல் ஊராட்சிக்கு அருகில் உள்ள கருக்கிளி ஊராட்சி, வெள்ளப்புத்தூர் ஊராட்சி, தண்டரைபுதுச்சேரி ஊராட்சி ஆகிய பகுதிகளில் 25,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 25,000–க்கும் மேற்பட்ட மக்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், இருளர் என்று சொல்லக்கூடிய பழங்குடியின மக்களும் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். 5000–க்கும் மேற்பட்ட ஆடுகள் மற்றும் மாடுகளை அவர்கள் வளர்த்து வருகிறார்கள். மாடுகளைப் பராமரிக்கக்கூடிய அந்த ஊர் பொதுமக்கள், பால் சொசைட்டி அமைத்து அதன்மூலம் அரசாங்கத்திற்குப் பாலை கொடுக்கிறார்கள். மேலும், கால்நடைகளை வளர்ப்பதற்காக வங்கிகளில் கடன் தொகை வேண்டுமென்று அவர்கள் கேட்டபோது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் இதுவரை 50 பேருக்கு ரூ.45,000/– வீதம் மாடுகள் வாங்குவதற்கு வங்கிகளில் பரிந்துரை செய்து, அவர்களுக்குக் கடனை பெற்றுக் கொடுத்திருக்கிறேன். மேலும், முறையாகக் கடனைச் செலுத்தினால், பலருக்கு மேலும் கடன் தருவதற்கு வங்கிகள் தயாராக உள்ளன. இதன்மூலம் நான் தங்களிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, நான் குறிப்பிட்ட அந்த ஊராட்சிகளையெல்லாம் மையப்படுத்தியிருக்கக்கூடிய வேடந்தாங்கலில் கால்நடை மருத்துவமனை இல்லை. அங்கே உள்ள பகுதிநேர மருத்துவமனைக்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள்தான் கால்நடை மருத்துவர் வருகிறார். நிரந்தரமான மருத்துவர் அங்கே இல்லை. கால்நடை மருத்துவமனைக்கென்று சொந்தமான இடமும் அங்கே இல்லை. வேடந்தாங்கல் ஊராட்சி அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற ஓர் அறையில்தான் அவர்கள் கால்நடை மருத்துவரை வரவழைத்து கால்நடைகளுக்கு சிகிச்சை பெறுகிறார்கள். எனவே, நிரந்தரமாக கால்நடை மருத்துவரை நியமித்து, அங்கே புதியதாக ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேடந்தாங்கல் பகுதிக்கு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினைப் பரிசீலித்து, அங்கே அரசுத் துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, தேவைப்படும் என்றால் அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

## புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்

***37523—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஆகிய இரு வட்டங்களையும் இணைத்து கந்தர்வக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் 37 வருவாய் கிராமங்கள் மற்றும் கறம்பக்குடியில் 50 வருவாய் கிராமங்கள் ஆக மொத்தம் 87

வருவாய் கிராமங்களும், மேலும் கந்தர்வக்கோட்டையில் 89,982 மக்கள்தொகையும், கறம்பக்குடியில் 1,10,604 மக்கள்தொகையும், ஆக மொத்தம் 2,00,586 மக்கள்தொகை மட்டுமே உள்ளது. புதிய வருவாய் கோட்டம் உருவாக்க அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி போதுமான மக்கள்தொகை மற்றும் வருவாய் கிராமங்கள் இல்லை. எனவே, கந்தர்வக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய வருவாய் கோட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்

**திரு. பா. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய தொகுதி கஜா புயலால் பாதிக்கப்பட்டது. அந்தத் தொகுதியில் பணியாற்றிய மாண்புமிகு அமைச்சர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது கேள்விக்குச் செல்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நீதி காத்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், ஏழைகளுக்காக உழைத்த பொன்மனச் செம்மல் தலைவர் அவர்களையும், முகவரி இல்லாமல் இருந்த ஏழைகளுக்கும், எனக்கும் முகவரியாய் இருந்து, தவ வாழ்க்கை வாழ்ந்து, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று அல்லும்பகலும் அயராது உழைத்த, மக்களின் வாழ்வு மலர தன் உயிரையே உரமாக்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை அம்மா அவர்களையும் வணங்கி, என் கேள்வியைத் தொடங்குகிறேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.





**திரு. பா. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவின் வழிகாட்டுதலில் கழகத்தின் இரு கண்களாம், பகையை தன் புன்னகையால் வெல்லும், அம்மாவின் புகழ் பாடும் வானம்பாடி, தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களையும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அய்யா அவர்களையும் வணங்குகிறேன்.

நமது கழகம் மற்றும் அரசு சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. நவம்பர் மாதம் கஜா புயலால் பாதிக்கப்பட்ட எங்கள் தொகுதி கடும் இயற்கைப் பேரழிவிலிருந்து மீண்டுவர, பல்வேறு வகைகளிலும் அல்லும்பகலும் அயராது உழைத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் திரு. கருப்பணன் அவர்களுக்கும், கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு கழகத்தின் சார்பில் 5 கிலோ அரிசியையும், துப்பட்டி, போர்வை உள்ளிட்ட அனைத்துப் பொருள்களையும் வழங்கி, அதைவிடச் சிறப்பாக 27 பொருட்களை தமிழ்நாடு அரசுமூலம் வழங்கி, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அற்புதமாகப் பணியாற்றிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய கந்தர்வக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை தாலுகாவினை, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகமாக மாற்றுவதற்கு நான் கோரிக்கை வைத்திருந்தேன். என்னுடைய தொகுதியில் கறம்பக்குடி தாலுகாவும், கந்தர்வக்கோட்டை தாலுகாவும் உள்ளன. கந்தர்வக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டை 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கறம்பக்குடியிலிருந்து 40 கிலோ மீட்டர் தூரம் ஆகும். ஆகையால், கந்தர்வக்கோட்டை தொகுதியில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அமைத்துக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைப் பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை மக்கள் நலன் கருதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். விதிமுறைகளின்படி, அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும்கூட மக்கள் நலன் கருதி, அதிக தொலைவு செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்து வைத்திருக்கின்ற அந்தக் கோரிக்கையை அவரோடு சேர்ந்து துறையின் அமைச்சர் என்ற அடிப்படையில் நானும் வலியுறுத்தி, சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து பரிசீலனை செய்வோம் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கஜா புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி கொடுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பணன் அவர்களையும் பற்றிச் சொன்னார்கள். அனைத்து அமைச்சர்களும்தான் அங்கு வந்து பணியாற்றினார்கள். ஆகவே, அதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்டும்படி கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பா. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலில் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்த அனைத்து அமைச்சர்களுக்கும், அனைத்து அரசு ஊழியர்களுக்கும் இந்த நேரத்தில் இந்த அவையில் நன்றியைச் சொல்லிக்கொண்டு, எங்களுக்கு வருவாய் கோட்டம் அமைத்துக் கொடுப்போம் என்று சொன்ன மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், எங்களுடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். நன்றி, வணக்கம்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, சொல்லுங்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் insurance பணம் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டம், ஒட்டுமொத்தமாக சென்ற ஆண்டு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு விவசாயிக்கு ஓர் ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்றும், ஒரு விவசாயிக்கு ஓர் ஏக்கருக்கு 5,000 ரூபாய் என்றும் பாகுபாடாக வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதுகுறித்துக் கேட்டால், மத்திய அரசு satellite மூலம் படம் எடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒரே ஊரில், பாதிப்பு ஒரே மாதிரியாக இருக்கின்றபோது, அங்கே கொடுக்கின்ற அந்த நிவாரணம், பயிர் பாதுகாப்பு insurance திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொகை சரிசமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே இதைக் கொண்டு வந்திருந்தார்கள். பாதிக்கப்பட்ட நிலப்பரப்பிற்கு ஏற்ற வகையில்தான் அது பகிர்ந்தளிக்கப்படுகிறது. Satellite மூலமாக எடுப்பது மட்டுமல்லாமல் வருவாய் மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகளும், அதை உரிய கணக்கீடு செய்து, அதன் பிரகாரம், பாதிக்கப்பட்ட பரப்பளவிற்கேற்ப அந்தக் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது குறித்து மாவட்ட நிருவாகத்திற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**39—**

## தொழிற்பேட்டை

***35968—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, தமிழ்நாட்டு மக்கள் மனதிலே நீக்கமற நிறைந்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகின்றேன்.

என்னுடைய பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியப் பகுதியில் வாழ்கின்ற படித்த மாணவர்கள், விவசாயக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள். இந்தப் பகுதியில் இருக்கின்ற படித்த பட்டதாரி மாணவர்களுக்கு சொந்தமாகத் தொழில் செய்வதற்கு ஏதுவாக, அந்தப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், படித்து வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்தி, அதை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியில் அமைந்துள்ள செம்பனார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகத்துடன், சிட்கோ நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட தரங்கம்பாடி வட்டம், சீர்காழி வட்டம், மயிலாடுதுறை வட்டம் மற்றும் குத்தாலம் வட்டம் ஆகிய வட்டங்களிலும் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும் நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உகந்த நிலம் கிடைக்கப்பெறாததால், அங்கு சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான 40 ஏக்கர் நிலம் திருக்குவளை ஊராட்சியில் அமைந்துள்ளது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, விளைநிலமாக இருக்கின்ற அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அங்கே தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், படித்த மாணவர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு வழங்க ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்திச் சொல்லி, இதைப்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

[2019 ஜனவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த இடத்தை மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***11890—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் மாவட்ட நிருவாகத்தின் பரிசீலனையில் உள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்டவுடன், உரிய நிதியைப் பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கேட்கப்பட்ட கேள்வி. அப்போது நாகர்கோவிலில் இயங்கிவந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தற்போது 20 கி.மீ. தொலைவில் உள்ள விசுவாசபுரம் என்கிற கிராமத்தில் இயங்கி வருகிறது. மாவட்டத்தின் தலைநகரமாகிய நாகர்கோவிலில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வந்தால்தான் முறையாகவும், வசதியாகவும் இருக்கும். மீண்டும் அந்த அலுவலகத்தை நாகர்கோவில் வட்டாரப் பகுதிகளில் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலம் அந்த இடத்தினுடைய நிலமாற்றம் செய்யும் பணிகளை விரைவாக முடித்துக் கொடுத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கப்படும்போது, அதற்குண்டான கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிவரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், அங்கு கடந்த 6 மாதங்களாக காலிப் பணியிடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இது அரசின் கவனத்திற்கு பலமுறை கொண்டுவரப்பட்டும், வட்டாரப்

போக்குவரத்து அலுவலர் பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அதேபோன்று, 4 ஆய்வாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் அந்த நான்கு பணியிடங்களுமே காலியாக இருக்கக்கூடிய நிலை உள்ளது. 2 கண்காணிப்பாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில், இரண்டு பணியிடங்களுமே காலியாக இருக்கின்றன. அங்கு தினந்தோறும் 100–க்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கக்கூடிய சூழ்நிலையில், வாரத்தில் ஒருநாள் மட்டும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும், மார்த்தாண்டம் பகுதியிலிருந்தும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் இங்கு வந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். 7 நாட்களில் பதிவு செய்ய வேண்டிய பணிகள், வாரத்தில் ஒரு நாள் மட்டுமே நடைபெறுகின்ற காரணத்தால், வாகனங்களைப் பதிவு செய்யக்கூடியவர்கள் மற்றும் புதுப்பிக்கக்கூடியவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, உடனடியாக காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, தற்போது தேர்வுகள் நடைபெற்றுள்ளன. முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், அதற்குண்டான ஆணையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்து, அந்தந்தக் காலிப் பணியிடங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்

### (அ) பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய வகுப்பிலிருக்கக்கூடிய பொருளாதாரத்திலே பின்தங்கி இருக்கின்ற மக்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்று நேற்றைய தினம் மத்திய அமைச்சரவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது இன்று நாடாளுமன்றத்திலும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. எனவே, அதுகுறித்து அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு சில செய்திகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

முன்னேறிய வகுப்பிலே இருக்கக்கூடிய பொருளாதாரத்திலே பின்தங்கி இருக்கக்கூடியவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க, மத்திய அரசு இன்றைக்கு முழு முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. இது சமூக நீதிக் கொள்கைக்கு முற்றிலும் முரணான வகையில் அமைந்திருக்கிறது. மத்திய அரசினுடைய இந்த முடிவு, நீதிமன்றப் பரிசீலனைக்குமுன் நிச்சயமாக இருக்காது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 15(4), 16(4) ஆகியவற்றில், சமூக நிலையிலும், கல்வியிலும் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு என்று தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று, 12–5–1989 அன்று அப்போதைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், இதே அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அந்த அடிப்படையில், தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்த ஊக்கத்தின் அடிப்படையில், அன்றைக்கு பிரதமராக இருந்த சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்கள், மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை அமல்படுத்தி, மிகப் பெரிய வரலாற்றைப் படைத்தார் என்பது நாடறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. மு.க. ஸ்டாலின்] [2019 ஜனவரி 8

அதையடுத்து, திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்றிருந்த அன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த திரு. அர்ஜுன் சிங் அவர்களின் முயற்சியினால் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாகியும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு, Group–A பிரிவில் 17 சதவிகிதமும், Group–B பிரிவில் 14 சதவிகிதமும், Group–C பிரிவில் 11 சதவிகிதமும், Group–D பிரிவில் 10 சதவிகிதமும் மட்டுமே மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கிய பிறகு, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட மத்திய அரசின் ஆணையை 9 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்புச் சட்ட அமர்வு இரத்து செய்திருக்கிறது.

முற்பகல் 11–15

இதிலே இன்னொன்றை குறிப்பாக நாம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த மாண்புமிகு நீதியரசர் மறைந்த திரு. ரத்தினவேல் பாண்டியன் அவர்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று தெளிவாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார். உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. B.P. ஜீவன் ரெட்டி அவர்கள், ‘சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியிருக்கக்கூடிய மக்களுக்கும், அந்த மக்களுடைய வாழ்வாதாரத்திற்கும் உதவிட கொண்டு வரப்பட்டதுதான் இட ஒதுக்கீடு. ஆகவே, ஒருவரின் வருமானம் அல்லது சொத்தின் அடிப்படையிலே இட ஒதுக்கீடு வழங்குவது அரசியல் சட்டத்திற்கு எதிரானது’ என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். ஆகவே. ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக, அரசியல் சட்டத்திற்கு மாறாக இப்படி ஓர் இட ஒதுக்கீட்டை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மனதிலே வைத்துக் கொண்டு மத்திய பா.ஜ.க. அரசு, பணியில் சேரும் உரிமை வழங்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின்



2019 ஜனவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

வாழ்வோடு விபரீத விளையாட்டைத் தொடங்கியிருக்கிறது. அதற்கான முதல் எதிர்ப்புக் குரல் ஆணித்தரமாக ஒலிக்கப்பட வேண்டும். 69 சதவிகித இட ஒதுக்கீட்டை வெற்றிகரமாக அமல்படுத்திய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, கர்ம வீரர் காமராஜர் ஆகியோர் பண்படுத்தித் தந்த வழியிலே சமூக நீதியின் நாற்றங்காலாகத் தொடர்ந்து இருந்து வரக்கூடிய இந்தச் சட்டமன்றத்தில் சமூக நீதியினுடைய கட்டமைப்பை அசைத்துப் பார்க்க எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## (ஆ) ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதே அவையிலே நான் பேசுகிறபோது ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினையைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இன்று வந்திருக்கக்கூடிய செய்தி, ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என்று உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் செய்தி வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி வந்திருந்தால் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

## (அ) பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசு கேபினட்டில்

வைத்தது பற்றி வந்திருக்கிற செய்தியைக் குறித்து சட்டமன்றத்திலே எழுப்பினார்கள். உங்களைப் போன்று அந்தச் செய்தியை நாங்களும் படித்தோம். ஆனால் ஒன்று, ஆண்டாண்டுக் காலமாக இட ஒதுக்கீட்டில் இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலம் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாடு என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

*1921*–லிருந்து communal G.O. போட்ட முதல் மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அப்படி அந்த இட ஒதுக்கீட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்போடுதான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இட ஒதுக்கீட்டிற்கு எந்தவித பாதிப்பும் வரக் கூடாது என்ற அடிப்படையிலே, மண்டல் கமிஷன் குறித்த விஷயம் ஒரு தீர்ப்பின் அடிப்படையிலே உச்ச நீதிமன்றம் சென்றபோது, *50* சதவிகிதத்திற்கு மிகைப்படக் கூடாது என்கின்ற அந்தக் கருத்து வந்தபோது முதன்முதலாகக் குரல் கொடுத்தது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அப்போது *1991–1996*–ல் Backward Classes Minister ஆக இருந்தேன். குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அன்றைக்கே அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் கூட்டி, டெல்லிக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, அன்றைக்கு பாரதப் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்களைச் சந்தித்து, *1921*–லிருந்து நாம் இட ஒதுக்கீட்டில் முன்னோடியாக இருந்ததையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதன் அடிப்படையிலே *69* சதவிகித இட ஒதுக்கீடு எங்களுடைய உரிமை என்பதை உறுதிப்படுத்திய ஒரே தலைவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் அரசமைப்புச் சட்டமும் திருத்தப்பட்டு, திருத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடிதம் எழுதி, அதையெல்லாம் நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று பாராளுமன்றத்திலே குரல் கொடுத்து, இன்றைக்கும் தமிழ்நாட்டிலே *69* சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் யாரென்று தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் அத்தனை பேரும் நினைத்துப் பார்க்கக்கூடிய ஒரே தலைவர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் சமூக நீதி காத்த





வீராங்கனை என்றுகூட நம்முடைய திராவிட கழகத் தலைவர் ஐயா வீரமணி அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டினார்கள். எனவே, அந்த வகையிலே *69* சதவிகித இட ஒதுக்கீடு என்பது நம்முடைய உரிமை. பிற்படுத்தப்பட்டோருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு, சீர்மரபினர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு, பழங்குடியினருக்கு என்று இட ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால், இப்போது மத்திய அரசு ஒரு கொள்கை முடிவுதான் எடுத்திருக்கின்றார்கள். அது சம்பந்தமான எந்தவோர் அறிவிப்பும் அரசுக்கு வரவில்லை. எனவே, அப்படி வரும்போது எங்களுடைய கருத்தை நிச்சயமாக நாங்கள் தெரியப்படுத்துவோம்.

*முற்பகல் 11–20*

## (இ) எழும்பூர் தொகுதி, திடீர் நகர் மற்றும் பி.கே. காலனி பகுதிகளில் குடிசைகளுக்கு மாற்றாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) அரசுக்குத் தகவல் வரவில்லை. (குறுக்கீடு) இருங்கள். இருங்கள். திரு. உ. தனியரசு, உட்காருங்கள். இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். இதையெல்லாம் முன்பே என்னிடம் கேட்க வேண்டும். இப்படி எல்லாம் வந்து திடீரென்று raise செய்தால் உங்களை allow செய்வதற்கு எனக்கு நேரமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வட்டம் *104*–ல், *800* குடிசை வீடுகளில் ஏறக்குறைய *40* ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் வசித்து வருகிறார்கள். கடந்த *20* ஆண்டுகளுக்கு முன்பு அந்த இடத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் மேயராக இருந்தபோதுதான் அவர்களுக்கு கல் நாரினால் வேய்ந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட அந்த வீடுகள் தற்போது குடிசை வீடுகளாக இருக்கின்றன. அந்த இடத்திற்குப் பின்னால் மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் *90* கிரவுண்ட் இடம் காலியாக உள்ளது. அந்த இடத்தை மாநகராட்சியிடமிருந்து வகைமாற்றம் செய்து, திடீர் நகரில் வசிக்கக்கூடிய அந்த மக்களுக்கு அந்த இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்] [*2019 ஜனவரி 8*

அதேபோல், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 77–வது வார்டில் பி.கே. காலனியில் சுமார் 594 வீடுகள் 19 பிளாக்குகளாக உள்ளன. அதேபோல், 104–வது வட்டத்தில் ஆர்.கே. புரம் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் 168 வீடுகள் உள்ளன. அந்த 168 வீடுகளோடு, அதற்கு ஒட்டினாற்போல் சுமார் 22 வீடுகளும் இருக்கின்றன. அவர்களுக்கும் அதே இடத்தில் புதிய வீடுகளைக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், 61–வது வட்டத்தில் சந்தோஷ் நகர் குடிசைப் பகுதியில் 272 வீடுகள் உள்ளன. அதை ஒட்டினாற்போல் 300 குடிசை வீடுகள் உள்ளன. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதாகக் கூறியிருந்தார்கள். ஆனால், இதுவரையில் அந்த இடத்தில் திட்டப் பணிகள் துவக்கப்படவில்லை. உடனடியாக அந்த இடத்திலும், அந்தத் திட்டப் பணிகளைத் துவக்கி, அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகளைக் காலி செய்யும்போது ஒருவருக்கு 8,000 ரூபாய் கொடுக்கின்றார்கள். எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் நேற்றையதினம் அந்த 8,000 ரூபாய் போதாது என்று கூறியிருந்தார்கள். ஆகவே, குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினுடைய வீடுகளைக் காலி செய்யும்போது அந்த இடத்திலிருந்த பயனாளிகளுக்கு மாதத்திற்கு 2,000 ரூபாய் வீதம் கூடுதலாக வழங்கும்படி தங்களை அன்புடன் வலியுறுத்தி கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி.

### (ஆ) ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது –தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் ஆலைப் பிரச்சினையை நான் இந்த அவைக்குக் கொண்டுவந்த நேரத்திலே அதுசம்பந்தமாக எந்தப் பதிலும் அரசுத் தரப்பிலிருந்து எங்களுக்குச் சொல்லவில்லை. வந்திருக்கிறதா, வரவில்லையா என்பதைப் பற்றியும் சொல்லவில்லை. ஆகவே,



*2019 ஜனவரி 8*] [திரு. மு.க. ஸ்டாலின்]

எங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய இந்தச் செய்தி இந்த அரசுக்கு இன்னும் தெரியவில்லை என்று நினைக்கிறபோது உள்ளபடியே வேதனைக்குரிய வகையில் அமைந்திருக்கிறது. எனவே, இதைக் கண்டிக்கக்கூடிய வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நாங்கள் பதில் சொல்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலிலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது இல்லை. அவையில் வந்தவுடனே சொன்னார்கள். இருப்பினும், முழுமையாக அந்தத் தீர்ப்பினுடைய விவரம் கிடைக்கவில்லை. அந்த விவரம் கிடைத்ததற்குப் பின்னால் அதற்குப் பதில் சொல்கின்றோம். அப்படி ஒரு தீர்ப்பு வந்திருந்தாலுங்கூட, மீண்டும் சீராய்வு மனுவாவது போட்டு, எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஆலையைத் திறக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் உங்களுடைய கருத்துதான் எங்கள் அரசினுடைய கருத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும், அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) எழும்பூர் தொகுதி, திடீர் நகர் மற்றும் பி.கே. காலனி பகுதிகளில் குடிசைகளுக்கு மாற்றாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. கே.எஸ். இரவிச்சந்திரனுக்குப் பதில் சொல்கிறார்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 4,546 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 13 திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாறுபட்ட தட்பவெப்ப நிலை,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

சுற்றுச்சூழல் மற்றும் இதர காரணங்களால் மிகவும் சிதிலமடைந்த குடியிருப்புகள் மக்களின் உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்தினை ஏற்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், இதுபோன்ற சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய அல்லது வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரை செய்ய அரசால் தொழில்நுட்பக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், வார்டு எண் 77 பி.கே. காலனி, வார்டு எண் 104 ஆர்.கே. புரம், வார்டு எண் 104 பங்கஜம் தெரு, வார்டு எண் 104 ஓசான்குளம், வார்டு எண் 107 எம்.எஸ். நகர், வார்டு எண் 107 வேம்புலியம்மன் தெரு, இப்போது, அதோடு சேர்த்து ஏழாவதாக 61–வது வட்டத்தையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் சேர்த்திருக்கின்றார். மேலே குறிப்பிட்ட திட்டப் பகுதிகளில் உள்ள சிதிலமடைந்த குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்டுமானம் செய்யும் திட்டப் பகுதிகளினுடைய தற்போதைய நிலையைச் சொல்கிறேன். சென்னை, பி.கே. காலனி திட்டப் பகுதியில் 594 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1975 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்ய பரிந்துரை செய்துள்ளது. இப்பகுதியில் 600 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.84 கோடி செலவில், Stilt + 5 மேம்பாட்டில் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது; மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டுவிட்டன. இத்திட்டப் பணிகளை 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின்கீழ் நிறைவேற்ற, மைய மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்று பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆர்.கே. புரம், சென்னை. ஆர்.கே. புரம் திட்டப் பகுதியில் 168 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1973 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய



2019 ஜனவரி 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

குடியிருப்புகள் கட்ட பரிந்துரை செய்துள்ளது. இப்பகுதியில் 168 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.24.50 கோடி செலவில் Stilt+7 மேம்பாட்டில் கட்ட வரைபடம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது; மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இத்திட்டப் பணிகளையும் 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின்கீழ் நிறைவேற்ற மைய மற்றும் மாநில அரசுகளுடைய ஒப்புதல் பெறுகின்ற நிலை இருக்கிறது. விரைவில் இந்தப் பணியும் தொடங்கப்படும்.

அடுத்து, எம்.எஸ். நகர், சென்னை. எம்.எஸ். நகர் திட்டப் பகுதியில் 224 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1971–1973 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, இக்குடியிருப்புகளுக்கு உரிய பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இத்திட்டப் பகுதி குடியிருப்புகளுக்கு 2012 முதல் 2018 வரை ரூ.22.86 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணிகளும், 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.6.54 இலட்சம் செலவில் சுவர்களுக்கு வர்ணம் பூசும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இக்குடியிருப்புகளுக்கு கூடுதலாக ரூ.1.50 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஓசான்குளம், சென்னை. ஓசான்குளம் திட்டப் பகுதியில் 288 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1976–1977 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு விரைவில் ஆய்வு செய்ய உள்ளது. இக்குழுவின் ஆய்விற்குப் பின்னர் அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து, மீண்டும் கட்டுதல் அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய நடவடிக்கைகள் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

பங்கஜம் தெரு, சென்னை. பங்கஜம் தெரு திட்டப் பகுதியில் 56 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1974 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளையும் வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்ய உள்ளது. இக்குழுவின் ஆய்விற்குப் பின்னர், அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து, மீண்டும் கட்டுதல் அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய நடவடிக்கைகள் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேம்புலியம்மன் திட்டப் பகுதி, சென்னை. வேம்புலியம்மன் திட்டப் பகுதியில் 144 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1976 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளையும் வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்ய உள்ளது. இக்குழுவின் ஆய்விற்குப் பின்னர் அதன் பரிந்துரையின் அடிப்படையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து, மீண்டும் கட்டுதல் அல்லது பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், உலக வங்கியினுடைய நிதி உதவியை கூடிய விரைவில் பெறக்கூடிய ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, சென்னை மெட்ரோபாலிட்டன் சிட்டி முழுமைக்கும் இருக்கின்ற குடிசைப் பகுதிகளை அகற்றிவிட்டு, அந்தந்தப் பகுதிகளிலேயே மறுகட்டுமானம் செய்வதற்கான கருத்துரு அரசினுடைய ஆய்வில், தீவிர பரிசீலனையில் இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், எங்கெல்லாம் குடிசைப் பகுதிகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு, குடிசைப் பகுதிகளற்ற சென்னை மாநகரத்தை உருவாக்குவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் முதல் நோக்கமாகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2019 ஜனவரி 8]

## (ஈ) ஆயிரம் விளக்கு தொகுதி, பாலப் பணிகள் தொடங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.

**திரு. கு.க. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆயிரம் விளக்கு தொகுதியில், மண்டலம் 9, 109–வது வட்டத்தில் நடைபாதை சேவை மேம்பாலம் அமைப்பதற்கு லயோலா கல்லூரி நிருவாகத்தின் அனுமதி பெறப்பட்டும், நடைபாதை அமைப்பதற்கான பணியை பல வருடங்களாக சென்னை மாநகராட்சி தொடங்காமல் உள்ளது. இதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், ஆயிரம் விளக்கு தொகுதி, 9–வது மண்டலம், 130–வது வட்டம், சூளைமேடு, நெல்சன் மாணிக்கம் ரோட்டில் படகம் பகுதியில் கூவம் ஆற்றின் மேற்பகுதியில் அமைந்துள்ள பாலம் எந்தநேரத்திலும் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது. பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் மிகுந்த அச்சத்துடனே செல்கின்றனர். இதனை விரைந்து சரி செய்ய வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு தங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட மண்டலம் 9, 109–வது வட்டம், சூளைமேடு, நெல்சன் மாணிக்கம் சாலையில் கூவம் ஆற்றில் இணையக்கூடிய விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலம் போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல நிலையில் வலுவுடன் உள்ளது. பாலத்தின் இருபுறமும் உள்ள கைப்பிடிச் சுவர்கள் மட்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. பாலத்தின் கைப்பிடிச் சுவர்களைப் புதுப்பித்து, பாலம் முழுமையும் வர்ணம் பூசுவதற்கு ஏதுவாக 25 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் துவங்கப்பட்டு, 3 மாத காலத்தில் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2019 ஜனவரி 8*

## (உ) மேலூர் தொகுதி, மேலவளவு கிராமம், மதுரை மத்திய சிறையில் பல ஆண்டுகளாக சிறையில் உள்ளவர்களை முன்விடுதலை செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

**திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

*எனது மேலூர் தொகுதி, சென்னகரம்பட்டி, மேலவளவு கிராமத்தைச் சேர்ந்த 13 நபர்கள் மதுரை மத்திய சிறையில் கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளனர். இந்த வழக்கில் 40 குற்றவாளிகள் சேர்க்கப்பட்டு, 17 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதில் 2008 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஏ1–அழகர்சாமி, முதல் குற்றவாளி உட்பட 3 பேர் முன்விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் விடுதலை செய்யப்பட்டதிலிருந்து சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையோ, வேறு எந்தப் பிரச்சினையோ இல்லாமல் கிராமத்தில் அமைதியாக, சகோதரர்களாக வாழ்ந்து வருகின்றனர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழக சிறைகளில் ஆயுள் தண்டனை பெற்று, 10 ஆண்டுகள் வரை சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் முன்விடுதலை செய்வதாக அறிவித்துள்ளார்கள். அதையொட்டி, கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக மதுரை மத்திய சிறையிலுள்ள 40–வது குற்றவாளி உள்ளிட்ட 13 நபர்களை முன்விடுதலை செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், எங்களுடைய இதய தெய்வம். . .* (குறுக்கீடு)



*2019 ஜனவரி 8*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்கார்ந்துகொண்டே இப்படியெல்லாம் பேச முடியாது.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு. . .* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Zero hour–*ல் நான் கூப்பிடாமல், உங்கள் சௌகரியத்திற்கு நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி அவையை நடத்துவது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை முடித்திருக்கின்ற சிறைவாசிகள், டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்விடுதலை செய்யப்படுவார்கள் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழகச் சிறைகளில் இருக்கின்ற 1,756 சிறைவாசிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மத்திய சிறையிலும் இருக்கின்ற மாவட்டக் குழுவின்மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, பிறகு மாநிலத்தில் இருக்கின்ற ஆலோசனைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு, இதுவரை 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை முடித்தவர்களும், 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை நிறைவு செய்தவர்களும், கடும் நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற சிறைக் கைதிகள் உட்பட, தமிழகத்திலே சிறைத் தண்டனைக் குற்றங்களுக்காக வெளி மாநிலங்களிலே சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற 6 சிறைவாசிகள் உட்பட மொத்தம் 1,619 பேர் முன்விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதிலே 50 முஸ்லிம் சிறைவாசிகளும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, மேலவளவு வழக்கிலே கைது செய்யப்பட்டு, சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றவர்களும் இந்த முன்விடுதலைக்கு மனு செய்திருந்தார்கள். 2008–ல் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டிருக்கின்ற முக்கிய குற்றவாளிகளான 1–ஆவது குற்றவாளி, 2–ஆவது குற்றவாளி ஆகியோர் சிறையில் 7*

[திரு. சி.வி. சண்முகம்] [2019 ஜனவரி 8

ஆண்டுக்காலம் நிறைவு செய்ததற்காக அவர்கள் முன்விடுதலை செய்யப்பட்டு, 10 ஆண்டுக்காலம் அந்தக் கிராமத்திலே அவர்கள் அமைதியான முறையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்; அது உண்மைதான். முதல் குற்றவாளி, இரண்டாவது குற்றவாளி எல்லாம் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 10 ஆண்டுக்காலம் அந்தக் கிராமத்திலே எந்தவித சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையும் இல்லாமல் அமைதியான நிலை உள்ளது. மனு செய்திருக்கின்ற 47–வது குற்றவாளி, 13 ஆண்டுக் காலம் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார். அவருக்கு கிட்னி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்திலும் அவருக்குப் பரிந்துரை செய்யச் சொல்லி தீர்ப்பு வந்திருக்கிறது. மாவட்ட நிருவாகமும், முன்விடுதலை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவும், அவர் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. ஆனால், மாநிலத்தில் இருக்கின்ற ஆலோசனைக் குழு அவரது மனுவை நிராகரித்திருக்கின்றது. ஆனால், அந்த மனு, நியாயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கோரிக்கையை கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, ஆவன செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஊ) திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளில் அமெரிக்கன் படைப் புழுவின் தாக்குதலால் மக்காச்சோளப் பயிர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

**திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம், ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளில் ஏறத்தாழ 40,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட மக்காச்சோளப் பயிர்கள், அமெரிக்கன் படைப் புழுவின் தாக்குதலுக்கு உள்ளானதோடு மட்டுமல்லாமல், எதிர்பாராதவிதமாக, கஜா புயலின் தாக்குதலினாலும், 40,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட அத்தனை மக்காச்சோளப் பயிர்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு தரையோடு தரையாகப் படுத்த காரணத்தால், விளைச்சல் பெறுவதற்கான நிலையை எட்ட முடியவில்லை. குறிப்பாக, வறட்சிப் பயிரான மக்காச்சோளம் எங்களது மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் பயிர்



2019 ஜனவரி 8] [திரு. இ. பெரியசாமி]

செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக ஒருதடவைதான் மருந்து அடிப்பார்கள். ஆனால், இந்த முறை 4 முறை மருந்து அடித்தும் அமெரிக்கன் படைப் புழுவினுடைய தாக்குதல் குறையாமல், முழுமையாகச் சேதம் ஏற்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் மக்காச்சோளம் பயிர் செய்யப்படுகிறது. குறிப்பாக, இன்றைக்கு ஓர் ஏக்கர் பயிர் செய்வதற்குக் குறைந்தபட்சம் ரூ.25,000/–லிருந்து ரூ.30,000/–வரை செலவாகிறது. ஆனால், National Disaster Response Fund–லிருந்து 2 ஹெக்டேர் நிலத்திற்குத்தான் நிவாரணம் தர முடியும் என்று கூறுகிறார்கள். அதேசமயத்தில் ஒரு ஹெக்டேருக்கு 7,410 ரூபாய்தான் தர முடியுமென்றால், ஓர் ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய்தான் relief கிடைக்கிறது. அந்த ரூ.3,000/– என்பது நிச்சயமாகப் போதாது. மாநில அரசினுடைய பங்கும் இதிலே இருக்க வேண்டும். காரணம், கடந்த 4 ஆண்டுக்காலமாக கடுமையான வறட்சியின் காரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் விளைச்சலே இல்லாமல் போய்விட்டது. அந்தப் பூட்டையோடு, முழுவதுமே பட்டுப்போய் விட்டது. மேலும், இந்த அமெரிக்கன் படைப் புழுவினுடைய தாக்குதலுக்கு உள்ளான மக்காச்சோளத் தட்டையை பால் மாடுகளுக்குப் போட்டதால், அந்த மாடுகளும் பல இடங்களில் இறந்துவிட்டன; இது உண்மை. நான் யாரையும் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இது ஒரு யதார்த்தமான உண்மை. காரணம் அந்த அளவுக்கு ஒரு தாக்குதல் இருக்கிறது.

முற்பகல் 11–40

இன்றைக்கு ஏதோ ஓர் அமெரிக்க நிறுவனம் இந்த விதை வழங்குவதில் முதல் இடத்திலே இருக்கிறது, அந்த விதையில் நுண்ணுயிர்கள் கலக்கப்பட்டு ஒருவேளை இந்தச் சேதம் ஏற்பட்டிருக்குமோ என்ற ஐயப்பாடு விவசாயிகளின் மத்தியிலே இருக்கிறது. இதை அரசு, எதிர்காலத்தில் கருத்தில் கொள்ள வேண்டும். நமக்கு ஓர் ஏக்கருக்கு மூன்றாயிரம் ரூபாய் என்ற அளவில் நிவாரணம் வழங்குவது என்பது போதாது, ஒரு ஹெக்டேருக்கு 7,410 ரூபாய் நிவாரணம் என்பது போதாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான் ஒரு விவசாயி, விவசாயி என்று இங்கே சட்டமன்றத்திலே தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள். எனவே, நிவாரணத் தொகையை உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளினுடைய நிலை மிகப் பரிதாபமாக இருக்கிறது.

[திரு. இ. பெரியசாமி] [2019 ஜனவரி 8

மேலும், 'கஜா' புயலின் காரணமாக புதுக்கோட்டையிலே வந்த புயல் திண்டுக்கல்லையும் தாக்கியிருக்கிறது. திண்டுக்கல்லின் கீழ்மலைப் பகுதியில் மிளகு, வாழை, இன்னும் சொல்ல வேண்டுமென்றால் காபி பயிர்கள், மரங்கள் அத்தனையும் சாய்ந்துவிட்டன. மரங்கள் சாய்ந்த காரணத்தினால் புதிதாக மரங்கள் வைக்க வேண்டும். அதற்குப் பின்னால் அதில் மிளகுக் கொடி ஏற்ற வேண்டும், இதற்கு 7, 8 ஆண்டுகள் வரை ஆகும். 7, 8 ஆண்டுகளுக்கு விவசாயிகளுக்கு எந்த வருமானமும் இருக்காது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக பல முறை இருந்திருக்கிறார். ஒரு மிளகுப் பயிரைக் கொண்டு வர வேண்டுமென்றால் 7 ஆண்டுகள் ஆகும். இங்கே வனத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். குறிப்பாக காபிக்கு shade வேண்டும், நிழல் வேண்டும். காபியாக இருந்தாலும், மிளகாக இருந்தாலும் shade வேண்டும். மரங்கள் உண்டாவதற்கே 7 ஆண்டு காலம் ஆகும். எனவே, பல ஆண்டு காலமாக பாதுகாத்து வந்த மிளகு, காபி போன்ற பயிர்கள் முழுமையாகச் சேதமடைந்திருக்கின்றன. பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட பிற சலுகைகளை வழங்க வேண்டும். நீங்கள் தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாகப் பார்க்கக் கூடாது. 'கஜா' புயலால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள், கீழ்மலையில் இருக்கின்ற மக்கள், மேல்மலையில் இருக்கின்ற மக்கள்; அந்த மக்களுக்கு அதிக நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இரண்டு ஹெக்டேர் என்ற அளவுக்கு நிவாரணம் வழங்குவது என்பது போதாது. 'தென்னை மரத்திற்கு நான் 4 ஹெக்டேருக்கு நிவாரணம் கொடுக்கிறேன்' என்று நேற்றே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். மானாவாரி நிலம், dry land, காடு ஆகியவற்றில் வறட்சியான பயிர்களைத்தான் பயிர் செய்ய முடியும். நெல் விவசாயம் மொத்தமாக இல்லாமல் போய்விட்டது. மக்காச்சோளத்தைத் தவிர எந்தப் பயிரையும் விளைவிக்க முடியாது. வறட்சி, காரணம் போதுமான மழை இல்லை. ஆகவேதான், வறட்சிக்கேற்ற பயிர் செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் 2 ஹெக்டேருக்குப்பதில் 4 ஹெக்டேருக்குக் கொடுக்க வேண்டும். 7,410 ரூபாய் என்பதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். மலைவாழ் விவசாயிகளுக்கு நிவாரணம் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், இன்னும் 7 வருடங்களுக்கு எந்த வருமானமும் இருக்காது. அதை நீங்கள் வழங்குவதற்குப் பரிசீலிக்க வேண்டும். இதன் தொடர்ச்சியாக, பாதிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்டத்திலே



2019 ஜனவரி 8] [திரு. இ. பெரியசாமி]

இருக்கின்ற விவசாயிகளுக்கு எதிர்காலத்திலே விதை நேர்த்தியை வழங்க வேளாண்மைத் துறை உறுதி செய்ய வேண்டும். இந்த விதை நேர்த்தி செய்ய பல கம்பெனிகள் இருக்கின்றன. அமெரிக்க கம்பெனிதான், குறிப்பாக, Monsanto கம்பெனி என்ற ஒரு அமெரிக்க கம்பெனிதான் விதைகளை அதிகமாக supply செய்கின்றார்கள். எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு இவற்றையெல்லாம் அரசாங்கமே வழங்க வேண்டும். ஏனென்றால், தமிழ்நாட்டில் அதிகபட்ச நிலப்பரப்பில் விளையக்கூடியது மக்காச்சோளம். வருங்காலத்தில் அதைப் பாதுகாக்க வேண்டும். 'Prevention is better than cure' வரும்முன் காக்க வேண்டும் என்று சொல்வார்கள். இந்தப் புழு வந்ததே விவசாயிகளுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இதுவரை வறட்சியால் பாதிக்கப்பட்டோம், இப்பொழுது புழுவால் பாதிக்கப்பட்டிருக்கிறோம், புயலாலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். ஆக, மூன்று தாக்குதல்களை திண்டுக்கல் மாவட்டம் சந்தித்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், பிரத்யேகமாக திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட இன்னும் பிற சலுகைகளையும் அரசின் சார்பாக அவர்களுக்கு நிவாரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள். இந்த படைப் புழு என்னும் பயிர்களைத் தாக்கும் பூச்சி, முதலில் ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில்தான் இருந்தது. அங்கு அது பயிர்களில் சேதத்தை ஏற்படுத்தி, தொடர்ந்து தமிழ்நாட்டிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, குறிப்பாக மக்காச்சோளப் பயிர்களில் சேதம் ஏற்படுத்தியது. ஆனால், இந்தப் பூச்சியினுடைய தாக்குதல்களிலிருந்து மக்காச்சோளப் பயிர்களைக் காப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைப்படி வேளாண்மைத் துறையிலே உயிர்க் கொல்லிகள் மற்றும் இனக் கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்தி தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வந்தோம். இருந்தபோதிலும்,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2019 ஜனவரி 8

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல திண்டுக்கல் மாவட்டத்தைப்போல பல மாவட்டங்களிலே அது பாதிப்பினை ஏற்படுத்தியதால் நிறைய விவசாயச் சங்கங்களும், திருச்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்ற காரணத்தினாலே, இந்தப் பூச்சியினுடைய தாக்குதல்களால் பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்தவுடனே, பாதிப்படைந்த வயல்களை ஆய்வு செய்து, 33 சதவிகிதத்திற்குமேல் சேதமடைந்த பயிர்களுக்கு, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வேளாண்மை மற்றும் வருவாய்த் துறைகள்மூலம் உரிய கணக்கீடுகள் செய்யப்பட்டன. விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்தவுடனே, தாயுள்ளத்தோடு நிவாரணத்தை அறிவித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அரசினுடைய கவனத்தை ஈர்த்ததோடு, “மாண்புமிகு முதலமைச்சர் விவசாயி, விவசாயி, விவசாயி என்கிறாரே அவர் என்ன செய்திருக்கிறார்” என்று கேட்கிறார். ‘கஜா’ புயலாக இருந்தாலும் சரி, பூச்சி கடித்தாலும் சரி, புயல் வந்தாலும் சரி, மக்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே நிவாரணத்தை அறிவிக்கிற முதலமைச்சராக, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அரசினுடைய முதலமைச்சராக அவர் செயல்படுகிறார் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 33 சதவிகிதத்திற்குமேல் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்காச்சோளப் பயிர்கள் மானாவாரி பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410/– என்ற வீதத்திலும், இறைவைப் பயிராக இருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/– என்ற வீதத்திலும் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதை ஏற்கெனவே நான் இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பயிரிடப்பட்ட மொத்த மக்காச்சோளப் பயிர் பரப்பு ஏறத்தாழ, 26,268 ஹெக்டேர். இவற்றில் 7,035 ஹெக்டேர் பரப்பளவிற்கு மக்காச்சோளப் பயிர் ‘கஜா’ புயலினால் பாதிக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் மூன்று தாக்குதல்கள் என்று அவர் சொன்னார். ‘கஜா’ புயலினாலும்



2019 ஜனவரி 8] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு உரிய நிவாரணத் தொகையை விவசாயிகளுடைய வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைப்பதற்கு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல, திண்டுக்கல் மாவட்டத்தில் அமெரிக்கன் படைப் புழுவால் 11,488 ஹெக்டேர் பரப்பளவில் மக்காச்சோளப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, கொடைக்கானல் கீழ்மலை மற்றும் மேல்மலை ஆகிய பகுதிகளில் ‘கஜா’ புயலினால் சேதமடைந்த 3,428 ஹெக்டேர் பரப்பளவில், 5,568 பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.479.71 இலட்சம் நிவாரணத் தொகையாக வங்கிக் கணக்கிலே வரவு வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எத்தனை தாக்குதல்கள் வந்தாலும் சரி. மூன்று தாக்குதல்கள் அல்ல, எத்தனை இயற்கைத் தாக்குதல்கள் வந்தாலும், செயற்கைத் தாக்குதல்களாக இருந்தாலும், தன்னுடைய மதிநுட்பத்தாலே அம்மாவின் பிள்ளையாக, அம்மா அவர்களிடத்திலே பயிற்சி பெற்றதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிவாரணம் வழங்குவதிலே நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் அமைச்சரான, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அரசினுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆக, அனைத்து விவசாயிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியிருக்கின்ற நிவாரணத்தை இந்த அவையிலே எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் பேசுகின்றபோது, திண்டுக்கல் மாவட்டம், கஜா புயலால் பாதிக்கப்பட்ட விவரங்களை இங்கே கூறினார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மேல்மலை, கீழ்மலைப் பகுதிகளில் ‘கஜா’ புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், நானும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்பட அத்தனைபேரும்

பார்த்து, அவற்றைக் கணக்கெடுத்து, அந்த மக்களுக்குரிய நிவாரணப் பொருட்களை வழங்கியிருக்கின்றோம். உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாடுகள் அதிகமாக இறந்திருக்கின்றன என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. அப்படியொரு குறிப்பு எங்கள் மாவட்டத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான தகவலைத் தெரிவிக்க வேண்டாமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீதியுள்ள கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, எந்தளவு அதிகம் வேண்டுமோ அவற்றை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (எ) கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படாதது, நெய்வேலி, மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டும் திட்டத்தைக் கைவிடக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் இரண்டு நாட்களாக வைத்திருக்கிறேன். நான் இருக்கின்றபோது அவர் இருப்பதில்லை. அவர் இருக்கின்றபோது நான் இருப்பதில்லை. இதுவொரு பெரிய பிரச்சினை. ஆனால், அவரைப் பொறுத்தவரையில், அது சிறிய பிரச்சினை. அது என்னவென்றால், கல்லூரிகளில் படிக்கின்ற SC/ST மாணவர்களுக்கு 2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதியுதவி கிடைக்கவே இல்லை. நானும் இந்த அவையில் Hon'ble Minister அவர்களிடம் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் பாவம். பெரிய, பெரிய மந்திரிகளே நிதி வாங்க முடியாது. அவர்கள் என்ன செய்வார்கள், பாவம். அவர்கள் விட்டுவிட்டார்கள். Finance Minister அவர்களிடமும் சொல்லிப் பார்த்தேன். அவரிடத்திலும் நான் இரண்டு வருடங்களாகப் பேசி பார்த்தேன். இந்த இரண்டு வருடங்களாக நிதி இல்லாததால், அந்த மாணவர்களுக்கு சோறு போடமாட்டேன் என்கிறார்கள். சோறு போடமாட்டேன் என்று சொன்னால், hostel–லில் கலாட்டா வந்துவிடும். அதற்குப் பின்னர் communal பிரச்சினைகள் வந்துவிடும். மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லை. ஆகையினால் நாங்களும் கொடுக்கவில்லை என்று சொன்னால் எப்படி? மத்திய சர்க்கார் கொடுக்கிறது, கொடுக்கவில்லை. அது பரவாயில்லை. ஆனால், இந்தச் சர்க்காருக்கு இது சாதாரண விஷயம். "மலை முழுங்கி மகாதேவனுக்கு, கதவு ஒரு அப்பளத்துண்டு" என்று சொல்வார்கள். அதேமாதிரி, நிறைய வருமானமுள்ள இந்தச் சர்க்காருக்கு இது ஒன்றும் பெரிதல்ல. இந்தப் பணத்தைக் கொடுத்துவிடுங்கள். பின்னர், நீங்கள் reimbursement செய்துகொள்ளுங்கள். அதற்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆகையினால், மத்திய அரசாங்கத்திடமிருந்து நீங்கள் நிதியை வாங்கும் வரையில், இதற்கான நிதியை நீங்கள் உடனடியாகக் கொடுக்க வேண்டும். ஏன் இதை மட்டும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன் என்று சொன்னால், இரண்டு பேரிடத்தில் சொல்லி பிரயோஜனம் இல்லை. ஆனால், நிச்சயமாக இவர் செய்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நிச்சயமாகப் பாருங்கள், அடுத்த முறை நன்றி சொல்கின்றமாதிரி செய்துவிடுவார். இது ஒரு முக்கியமான பிரச்சினை. இரண்டாவது பிரச்சினை, நெய்வேலியில் 3–வது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதற்காக 37 கிராமங்களில் 13,500 ஏக்கர் நிலங்களை எடுக்கின்றார்கள்.





முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, எனக்கு இன்று நேரம் இல்லை. (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உள்ளபடியே சொல்கின்றேன், எல்லா உறுப்பினர்களுக்கும் நீங்கள் கொடுக்கின்ற மாதிரி freedom, வேறு யாரும் கொடுக்க முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, கொடுக்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am verymuch thankful to you. 3–வது சுரங்கம் வெட்டுவதற்காக 37 கிராமங்களில் 13,500 ஏக்கர் நிலங்களை எடுக்கின்றார்கள். அந்தப் பகுதியில் உள்ள எல்லாக் கட்சிக்காரர்களும் அதை வெறுக்கின்றார்கள். தயவுசெய்து இந்தத் திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[2019 ஜனவரி 8

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், பார்க்கலாம்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் (திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) என்ன? இருங்கள். (குறுக்கீடு) அப்படியா? அதை முன்பே நீங்கள் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2019 ஜனவரி 8]

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2019 ஜனவரி 8

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், சொல்லுங்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றோம்.



2019 ஜனவரி 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2018–2019, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018–2019 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2018–2019 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது.

@ 769 முதல் 774 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.6,431.17 கோடி நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

*முற்பகல் 11–55*

*2. 2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளன்று 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.*

*3. கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்கும்பொருட்டு, இரண்டு இலட்சம் சிறு, குறு விவசாயிகளைக்கொண்டு 10,000 உழவர் ஆர்வலர் குழுக்களையும், மேலும் அக்குழுக்களை 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைத்து, அவற்றை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக உருவாக்குவதற்கு ரூ.101.02 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் ஒவ்வோர் இனத்தின்கீழும் ரூ.1,000/– "மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.*

*4. கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2006 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளன்று உள்ளவாறு, நிலுவையிலிருந்த கூட்டுறவு வேளாண்மைக் கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில், வழங்க வேண்டிய நிலுவைத் தொகைக்காக அரசு ரூ.253.39 கோடி அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் ரூ.253.39 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.*

*5. பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஊரகப் பகுதிகளில் கட்டப்பட்ட 45,594 வீடுகளில் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு ரூ.227.97 கோடியை அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் ஒவ்வோர் இனத்தின்கீழும் ரூ.1,000/– "மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ்*





*சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.*

*6. மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இறுதிப் பலன்கள் மற்றும் நிலுவையில் இருந்த மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியம் உள்ளிட்ட பணியாளர்களுக்கான பலன்களை வழங்குவதற்காக, மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக ரூ.886.16 கோடியை அரசு வழங்கியுள்ளது. மேலும், ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு இறுதிப் பலன்களை வழங்க மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு குறுகிய காலக் கடனாக ரூ.251.02 கோடியை அரசு வழங்கியுள்ளது. டீசல் விலை உயர்வினால் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படக்கூடிய சுமையைக் குறைப்பதற்காக டீசல் விலை இழப்பீட்டுத் தொகையாக அரசு ரூ.198.66 கோடி அனுமதித்துள்ளது. இவற்றிற்காக துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் ரூ.998.29 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.*

*7. ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018–ஐச் செயல்படுத்த, அரசு கூடுதலாக ரூ.149.54 கோடியை அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் ரூ.149.54 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.*

*8. அண்மையில் வீசிய கஜா புயல், தமிழ்நாட்டு மக்களுக்குப் பெரும் சேதத்தையும் இழப்பையும் ஏற்படுத்திச் சென்றுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், வீடுகள், பயிர்கள் மற்றும் மரங்கள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும், மின் கட்டமைப்புகளைச் சீரமைப்பதற்காகவும், அரசு தேவையான நிதியுதவியை வழங்கியுள்ளது. இதற்கென, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் ரூ.2,298.25 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.*

*9. 2014–2015 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டுகளில் கரும்பு அரைவைக் காலத்திற்கான நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவைத் தொகையினை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, 10*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக ரூ.153.07 கோடியை அரசு அனுமதித்துள்ளது.

நண்பகல் 12–00

மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தொகையை திரும்பச் செலுத்துவதற்காக, 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 44.44 கோடி ரூபாயையும், என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை செலுத்த வேண்டிய சட்டரீதியான நிலுவைகள், ஒப்பந்தக் கடமைகள் மற்றும் சம்பள நிலுவைகளைத் திரும்ப வழங்குவதற்கு வழிவகை முன்பணமாக 22.66 கோடி ரூபாயையும் அரசு அனுமதித்துள்ளது. இந்த வகையில், சர்க்கரை ஆலைகளுக்கு மொத்தம் 220.17 கோடி ரூபாய் வழிவகை முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களின் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 396.41 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

11. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தவும், பல்வேறு புறவழிச் சாலைகள், மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே மேம்பாலங்களை அமைப்பதற்குமான பல்வேறு சாலை உட்கட்டமைப்புப் பணிகளை 2018–2019 ஆம் ஆண்டில் அரசு மேற்கொண்டுள்ளது. இப்பணிகளுக்காக, இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் 80.77 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

12. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 3,087 திருக்கோயில்களில் உள்ள தொன்மை வாய்ந்த உலோகத் திருமேனிகள் மற்றும் கற்சிலைகளைப் பாதுகாப்பதற்காக, களவு எச்சரிக்கை மணி மற்றும் கண்காணிப்பு கேமராவுடன்கூடிய



2019 ஜனவரி 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பாதுகாப்பு அறைகள் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 308.70 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)" என்பதன்கீழ் 308.70 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

13. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

**2018–2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 5 | . . . | . . . |
| 3 | நீதி நிருவாகம் | 80,24 | . . . | . . . |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 8,32,53 | 2 | . . . |
| 5 | வேளாண்மைத் துறை | 24,49,80 | 5 | . . . |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 1,00,14 | . . . | . . . |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 1,63,96 | 5 | . . . |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 3,00,21 | . . . | . . . |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 10,24,04 | . . . | . . . |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 18,66,04 | . . . | . . . |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 7,16,40 | 255,62,10 | . . . |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 21,85,13 | 29,87,00 | . . . |
| 14 | எரிசக்தித் துறை | 6,00,00 | . . . | . . . |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 3 | . . . | . . . |
| 16 | நிதித் துறை | 38,51,22 | 5,78,72 | 12,50 |



2019 ஜனவரி 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 4 | . . . | . . . |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 20,05 | . . . | . . . |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 27,69,90 | 1,50,00 | . . . |
| 20 | உயர் கல்வித் துறை | 45,41 | 4 | 35,11,26 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 10 | 4,18,27 | 63,00 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 11,12,18 | 3 | . . . |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 9 | 1 | . . . |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 68,57 | . . . | . . . |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3 | . . . | . . . |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 4 | 2 | . . . |
| 27 | தொழில் துறை | 7,46,85 | . . . | 299,62,43 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8,71,94 | . . . | . . . |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 34 | 2 | . . . |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8 | 8,05,28 | . . . |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1,00,04 | . . . | . . . |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 21,50,28 | 4 | . . . |
| 33 | சட்டத் துறை | 11,87,03 | . . . | . . . |



2019 ஜனவரி 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 5,16,91 | . . . | . . . |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 2,17,26 | 5,04,00 | . . . |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 3,62,61 | . . . | . . . |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும்ஆயத்தீர்வைத் துறை) | 1 | . . . | . . . |
| 38 | பொதுத் துறை | 6,64,10 | . . . | . . . |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 2,50,04 | 17 | . . . |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 30,06 | 3,78,60 | . . . |
| 41 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 28,93 | . . . | . . . |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 10 | 1 | . . . |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 9,69,48 | 1 | . . . |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 4,24,60 | . . . | . . . |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜனவரி 8

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 16,42,84 | 14,17,12 | . . . |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 5,08,09 | . . . | . . . |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | . . . | 308,70,00 | . . . |
| 48 | போக்குவரத்துத் துறை | 198,66,03 | 79,27,27 | 720,36,31 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 2,00,04 | 1,00,00 | . . . |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 149,54,44 | . . . | . . . |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 3,470,94,16 | . . . | . . . |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 45,26 | . . . | . . . |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 45,20 | 14 | 39,95,00 |
| | **பெருமொத்தம்** | **4,110,62,92** | **716,98,97** | **1,095,80,50** |



2019 ஜனவரி 8]

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)—ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13, உட்பிரிவு (2)—ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, 2018—2019 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2018–2019, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018–2019 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year 2018–2019."

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2018–2019, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018–2019 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018–2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 8–1–2019 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2018–2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



### நிறைவேற்றப்பெற்ற 2018–2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 5 | . . . | . . . |
| 3 | நீதி நிருவாகம் | 80,24 | . . . | . . . |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 8,32,53 | 2 | . . . |
| 5 | வேளாண்மைத் துறை | 24,49,80 | 5 | . . . |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 1,00,14 | . . . | . . . |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 1,63,96 | 5 | . . . |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 3,00,21 | . . . | . . . |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 10,24,04 | . . . | . . . |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத்துறை) | 18,66,04 | . . . | . . . |

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 7,16,40 | 255,62,10 | . . . |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 21,85,13 | 29,87,00 | . . . |
| 14 | எரிசக்தித் துறை | 6,00,00 | . . . | . . . |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 3 | . . . | . . . |
| 16 | நிதித் துறை | 38,51,22 | 5,78,72 | 12,50 |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 4 | . . . | . . . |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 20,05 | . . . | . . . |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 27,69,90 | 1,50,00 | . . . |
| 20 | உயர் கல்வித் துறை | 45,41 | 4 | 35,11,26 |



(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 21 | நெடுசாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 10 | 4,18,27 | 63,00 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 11,12,18 | 3 | . . . |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 9 | 1 | . . . |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 68,57 | . . . | . . . |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3 | . . . | . . . |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 4 | 2 | . . . |
| 27 | தொழில் துறை | 7,46,85 | . . . | 299,62,43 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8,71,94 | . . . | . . . |

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 34 | 2 | . . . |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8 | 8,05,28 | . . . |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1,00,04 | . . . | . . . |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 21,50,28 | 4 | . . . |
| 33 | சட்டத் துறை | 11,87,03 | . . . | . . . |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 5,16,91 | . . . | . . . |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 2,17,26 | 5,04,00 | . . . |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 3,62,61 | . . . | . . . |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | . . . | . . . |



(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 38 | பொதுத் துறை | 6,64,10 | . . . | . . . |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 2,50,04 | 17 | . . . |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 30,06 | 3,78,60 | . . . |
| 41 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 28,93 | . . . | . . . |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 10 | 1 | . . . |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 9,69,48 | 1 | . . . |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 4,24,60 | . . . | . . . |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 16,42,84 | 14,17,12 | . . . |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 5,08,09 | . . . | . . . |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | . . . | 308,70,00 | . . . |

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 48 | போக்குவரத்துத் துறை | 198,66,03 | 79,27,27 | 720,36,31 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 2,00,04 | 1,00,00 | . . . |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 149,54,44 | . . . | . . . |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 3,470,94,16 | . . . | . . . |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 45,26 | . . . | . . . |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 45,20 | 14 | 39,95,00 |
| | **பெருமொத்தம்** | **4,110,62,92** | **716,98,97** | **1,095,80,50** |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்—விவாதத்திற்கான பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். 62 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றனர். ஒவ்வோர் உறுப்பினரும் திருத்தங்களை முன்மொழிந்து பேசினால் காலதாமதம் ஆகும் என்பதால் நான் திருத்தங்களை முன்மொழிகின்ற உறுப்பினர்களின் பெயரைப் படிக்கிறேன். திருத்தங்களை முன்மொழியும் உறுப்பினரும், வழிமொழியும் உறுப்பினரும் உட்கார்ந்த இடத்திலிருந்தே கையை உயர்த்தினால் போதும். மாண்புமிகு உறுப்பினர்களின் திருத்தத்தைப் பதிவு செய்துகொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் திருத்தங்களை முன்மொழிவதற்குமுன் அவரவர் இருக்கையில் அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் தங்கள் இருக்கையில் இல்லையென்றால் அவர்கள் தங்கள் திருத்தங்களை முன்மொழியவில்லை என கருதப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அனைத்து உறுப்பினர்களின் பெயர்களையும் மொத்தமாகப் படிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். கையை உயர்த்தினால் போதும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. துறைமுகம் தொகுதி, யானை கவுனி நயினார் மேம்பாலம் விரிவாக்கப் பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

2. துறைமுகம் தொகுதியில் சாலையோரங்களில் வசிக்கும் மக்களுக்கு மாற்று இடமளிப்பது குறித்தும்;

3. துறைமுகம் தொகுதி, 55–வது வட்டம், பி.வி. ஐயர் தெருவில் 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கையகப்படுத்துவது குறித்தும்;

4. துறைமுகம் தொகுதி, 55–வது வட்டம், செயின்ட் சேவியர் தெருவிலுள்ள மாநகராட்சி மருத்துவமனையை செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

5. துறைமுகம் தொகுதி, 54–வது வட்டம், திருப்பள்ளித் தெரு வ.உ.சி. சாலை சந்திப்பில் உள்ள மகப்பேறு மருத்துவமனையைப் புதுப்பிப்பது குறித்தும்;

6. துறைமுகம் தொகுதியிலுள்ள ராஜீவ்காந்தி பொது மருத்துவமனைப் நூலகத்தில் போதிய மருத்துவ புத்தகங்கள் இடம் பெறுவது குறித்தும்;

7. துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், எல்லிஸ்புரம் பகுதியில் 40 வருடங்களுக்கு மேலாகவுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைப் புதுப்பிப்பது குறித்தும்;

8. துறைமுகம் தொகுதி, 57–வது வட்டம்–ஜட்காபுரம், 59–வது வட்டம்–சத்தியவாணி முத்துநகர் மற்றும் காந்தி நகர், 54–வது வட்டம், நார்த்வால் தெரு ஆகியவற்றில் உள்ள கழிவு நீரேற்று நிலையங்களின் திறனை அதிகரிப்பது குறித்தும்;





9. துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், அந்தோணி தெரு, பரமசிவம் தெரு, தஞ்சை முருகப்பன் தெரு, பொரரா தெரு ஆகிய தெருக்களில் ஏற்படும் கழிவுநீர்அடைப்புக்கு நிரந்தர தீர்வு காண்பது குறித்தும்;

10. துறைமுகம் தொகுதி, 60–வது வட்டம், சுல்தான் தெரு, ஜாபர் சாரங்கன் தோட்டம் தெரு, ஆச்சாரப்பன் தெரு, வரதா முனியப்பன் தெரு ஆகிய தெருக்களில் ஏற்படும் கழிவுநீர் அடைப்புக்கு நிரந்தர தீர்வு காண்பது குறித்தும்;

11. துறைமுகம் தொகுதி, 60–வது வட்டம், அன்னை சத்யா நகரில் வசிக்கும் மக்களுக்கு கழிப்பிட வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

12. துறைமுகம் தொகுதி, 60–வது வட்டம், நான்காவது கடற்கரை சாலையில் உள்ள பொதுக் கழிப்பிடத்தை சீரமைப்பது குறித்தும்;

13. துறைமுகம் தொகுதியில் உள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு கழிப்பிடங்களை (e–toilet) பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

14. துறைமுகம் தொகுதியிலுள்ள 6 அங்குல குடிநீர்க் குழாய்களை மாற்றி 10 அங்குல குடிநீர்க் குழாய்கள் அமைப்பது குறித்தும்;

15. துறைமுகம் தொகுதி, 54–வது வட்டம், பெருமாள் கோவில் தெருவில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

16. துறைமுகம் தொகுதி, கல்யாணபுரம் பகுதியில் திட்டமிடப்பட்டுள்ள பதின்மூன்று (13) அடுக்குமாடி குடியிருப்புகளுக்குப் பதிலாக ஆறு (6) அடுக்குமாடி குடியிருப்புகள் அமைப்பது குறித்தும்;

17. துறைமுகம் தொகுதியிலுள்ள பிராட்வே மற்றும் திருவள்ளுவர் பேருந்து நிலையங்களை மேம்படுத்துவது குறித்தும்;

18. துறைமுகம் தொகுதி, 56–வது வட்டம், ஆசிர்வாதபுரம் பகுதியிலுள்ள விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக்கூடத்தினை மேம்படுத்துவது குறித்தும்;

19. துறைமுகம் தொகுதி, 55–வது வட்டம், சமயவர்த்தம்மன் கோயில் தெருவிலுள்ள உடற்பயிற்சிக்கூடத்தை மேம்படுத்துவது குறித்தும்;

[திரு. பி.கே. சேகர்பாபு] [2019 ஜனவரி 8

20. துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், எடப்பாளையம் பகுதியிலுள்ள பூங்காவை சீரமைப்பது குறித்தும்

21. துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், முத்துருனிஷா பேகம் தெரு, உனிசாலி தெரு, திப்பு சாஹிப் தெருக்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரை எல்லிஸ் சாலையிலிருந்து பிரித்து திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையோடு இணைப்பது குறித்தும்;

22. துறைமுகம் தொகுதி, 59–வது வட்டம், தாயார் தெருவிலுள்ள அரசுப் பள்ளியில் கூடுதல் வகுப்புகள் ஏற்படுத்துவது குறித்தும்;

23. துறைமுகம் தொகுதி, வால்டாக்ஸ் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களை சீரமைப்பது குறித்தும்;

24. துறைமுகம் தொகுதி, பிராட்வே பேருந்து நிலையத்தில் காவலர் குடியிருப்பைப் புதுப்பிப்பது குறித்தும்;

25. துறைமுகம் தொகுதி, 59–வது வட்டத்தில் உள்ள வெளி மாவட்ட மகளிர் காவலர் தங்கும் விடுதியை சீரமைப்பது குறித்தும்;

26. துறைமுகம் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனை செவிலியர்கள் தங்கும் விடுதியைப் புதுப்பிப்பது குறித்தும்;

27. துறைமுகம் தொகுதியில் உள்ள தங்கசாலையை மேம்படுத்துவது குறித்தும்;

28. துறைமுகம் தொகுதி, 57–வது வட்டத்திலுள்ள சார்–பதிவாளர் அலுவலகம் மற்றும் கல்வி உதவி ஆணையர் அலுவலகம் இயங்கும் கட்டடத்தைப் புதுப்பிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.



2019 ஜனவரி 8]

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 70–ல் உள்ள பெரம்பூர் மேம்பாலம் அருகில் அமைந்திருக்கும் முரசொலிமாறன் பூங்காவில் நடைபாதையை சீரமைப்பது மற்றும் கோவிந்தபுரத்தில் உள்ள பொதுக் கழிப்பிடத்தை சீரமைப்பது குறித்தும்;

2. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 71–ல், நேருஜோதி நகர் பகுதியில் தார்ச்சாலை அமைப்பது குறித்தும்;

3. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 72–ல் உள்ள கன்னிகாபுரம் பிரதான சாலையில் உள்ள மழைநீர் வடிகாலை சீரமைத்து, சாலைகளைச் சரிசெய்து தார்ச் சாலை அமைப்பது, கன்னிகாபுரம் பகுதியில் மருத்துவமனை அமைப்பது, பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதியவர்களுக்கும், விதவைகளுக்கும் மற்றும் புதியதாக விண்ணப்பிக்கும் நபர்களுக்கும் உதவித் தொகை விரைந்து வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

4. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 73–ல் புளியந்தோப்பு காந்திநகர் பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடத்தை சீரமைப்பது, புளியந்தோப்பு கிரே நகர் பகுதியில் உடற்பயிற்சிக்கூடம் அமைப்பது குறித்தும்;

5. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 73–ல் புளியந்தோப்பு நாராயணசாமி தெருவில் கழிவுநீர் தேங்காத வகையில் மழைநீர் வடிகாலை சீரமைப்பது, கிரே நகர் பகுதியில் பழைய கழிவுநீர்க் குழாய்களை புதியதாக அமைப்பது மற்றும் புளியந்தோப்பு பவுடர்மில் பகுதியில் சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2019 ஜனவரி 8

6. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 74–ல் உள்ள ஓட்டேரி மூலிகைப்பூங்காவில் நிழல்குடில் அமைப்பது, மின் மோட்டாரை சீரமைப்பது, தட்டுப்பாடின்றி தண்ணீர் வசதி செய்து பூங்காவின் நுழைவாயிலில் புதியதாக கைப்பிடி அமைப்பது மற்றும் பூங்காவில் கூடுதலாக பணியாளர்களை நியமிப்பது குறித்தும்;

7. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 75–ல் உள்ள ஓட்டேரி வள்ளுவன் தெருவில் பழைய கழிவுநீர்க் குழாய்களை மாற்றி புதிய கழிவுநீர்க் குழாய்கள் அமைப்பது மற்றும் ஓட்டேரி S.S.புரம், B–Block, 5–வது தெருவில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்திற்கு உடற்பயிற்சி சாதனங்கள் வழங்குவது குறித்தும்;

8. பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 76–ல், பட்டாளம் பகுதியில் உள்ள டாக்டர் கலைஞர் கருணாநிதி பூங்காவில் அடிப்படை வசதிகள் செய்து சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. வேலூர் தொகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

2. வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை அருகில் சுரங்க நடைபாதை அல்லது மேம்பாலம் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. ப. கார்த்திகேயன்]

3. வேலூரில் உள்ள அரசு பென்லேண்ட் மருத்துவமனையை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

4. வேலூர் மாநகரத்தில் கிரீன் சர்க்கிள் அருகே போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புதிய மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

5. வேலூர் மாநகரத்தில் அனைத்து மாணவர்கள் பயன்பெறும்வகையில் உயர் கல்வி நூலகம் அமைப்பது குறித்தும்;

6. வேலூர் மாநகரில் உள்ள குப்பைகளை அகற்றி கால்வாய்களை சுத்தம் செய்து நோய்களிலிருந்து பொதுமக்களைக் காப்பது குறித்தும்;

7. வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் முட்புதர்களை அகற்றி தூர்வாருவது குறித்தும்;

8. வேலூர் தொகுதியில் முதியோர் மற்றும் விதவை உதவித் தொகையை தொடர்ந்து வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. கல்லணை கால்வாய், ஈச்சங்கோட்டை முதல் வெட்டிக்காடு வரை புதியதாக இருவழிச்சாலை அமைப்பது குறித்தும்;

2. உறந்தராயன் குடிக்காடு முதல் தொண்டராம்பட்டு வரை செல்லும் கல்யாண ஓடை ஆற்றங்கரை சாலையை அகலப்படுத்தி சீரமைப்பது குறித்தும்;

3. குலமங்கலம் முதல் ஒக்கநாடு கீழையூர் வரை மற்றும் அருமலை முதல் திருமங்கலக்கோட்டை மேலையூர் வழியாக வடசேரி வரை செல்லும் சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

4. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை—தஞ்சாவூர் சாலையின் பிரிவு சாலையான இராவுசாபட்டி சாலையை சீரமைப்பது குறித்தும்;

5. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஒக்கநாடு கீழையூர் முதல் சமயன் குடிகாடு பிரிவு சாலையான கருவிழிக்காடு செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

6. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சில்லத்தூர் முதல் திருநல்லூர் வரை மற்றும் தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை சாலையில் திப்பியகுடி, பொய்யுன்டார்குடிக்காடு செல்லும் சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

7. நெய்வாசல் முதல் குலமங்கலம், ஒக்கநாடு கீழையூர், ஒக்கநாடு மேலையூர் செல்லும் சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

8. ஒரத்தநாடு வட்டார மருத்துவமனையில் X-Ray மற்றும் ஸ்கேன் வசதி செய்வது குறித்தும்;

9. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தொன்டராம்பட்டு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் ஜெனரேட்டர் வசதி செய்வது குறித்தும்;

10. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், மேல உளூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் தேவையான மருத்துவ வசதிகள் செய்வது குறித்தும்;

11. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சில்லத்தூர் மற்றும் திருவோணத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு கூடுதல் மருத்துவர்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் ஜெனரேட்டர் வசதி செய்வது குறித்தும்;

12. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

13. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை அரங்கம் அமைப்பது குறித்தும் மற்றும் புற்றுநோய் சிகிச்சை பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;





14. வெட்டிக்காடு மஹாராஜ சமுத்திரத்தில் இரண்டு இடங்களில் தடுப்பணை கட்டி பாசனம் மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும்;

15. பஞ்சநதி கோட்டை ஊராட்சி—தெக்கூரில், கல்லணைக் கால்வாய், கண்டிதம்பட்டு ஊராட்சி—கல்லணைக் கால்வாயில் பொட்டுவாசாவாடி, உஞ்சிய விடுதி ஊராட்சி—வெள்ளத்தேவன் விடுதியில் கல்லணைக் கால்வாயில் புதியதாக பாலங்கள் அமைப்பது குறித்தும்;

16. கல்லணைக் கால்வாய் மற்றும் 6 மற்றும் 9 ஆம் எண் பிரிவு வாய்க்கால்களை தூர்வாருவது குறித்தும்;

17. ராஜாமடகால்வாயில் பின்னையூர் ஊராட்சி மேல்நிலைப் பள்ளி அருகில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;

18. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தெற்கோட்டை ஊராட்சி, இளங்கோவில் அருகிலும், பின்னையூர் ஆதி திராவிடர் தெருவிலும், கிளாமங்கலம் ஊராட்சி, வடக்கு கிளாமங்கலம் ஆதி திராவிடர் தெருவிலும், தெற்கு கிளாமங்கலம் ஆதி திராவிடர் தெருவிலும் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

19. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஒக்கநாடு கீழையூர் ஊராட்சி, கீழத் தெருவில் ஆம்பலாப்பட்டு தெற்கு ஊராட்சி, பாலாயி குடிக்காட்டில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

20. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், குடிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தொன்டராம்பட்டு கிழக்கு வலைகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, அருமலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கன்னுகுடி மேற்கு ஊராட்சி மேல்நிலைப் பள்ளி மற்றும் நார்த்தேவன் குடிக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் கட்டுவது குறித்தும்;

21. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் ஊராட்சி, மேல்நிலைப் பள்ளி மற்றும் சங்கரநாதர் குடிக்காடு உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் கட்டுவது குறித்தும்;

22. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

[திரு. எம். இராமச்சந்திரன்] [*2019 ஜனவரி 8*

*23.* திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி திப்பியகுடி ஊராட்சி, சங்கரன் தெரு எட்டுபுலிகாடு வாய்க்காலில் சிறிய பாலங்கள் அமைப்பது குறித்தும்;

*24.* வடக்கூர் தெற்கு ஊராட்சி, கருப்படிபட்டி ஆதி திராவிடர் தெருவிற்கு கல்லணைக் கால்வாய் கரை சாலையில் இருந்து புதியதாக சாலை அமைப்பது குறித்தும்;

*25.* ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தெக்கூர் ஊராட்சி, உப்புன்டார்பட்டி ஆதி திராவிடர் தெருவிற்கு கல்லணைக் கால்வாய் கரையிலிருந்து புதியதாக சாலை அமைப்பது குறித்தும்;

*26.* தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

*27.* தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை சாலையில், மடிகையிலிருந்து காசநாடு புதூர் செல்லும் சாலை மற்றும் மடிகையிலிருந்து காட்டுக்குறிச்சி வரை செல்லும் சாலை ஆகியவற்றை சீரமைப்பது குறித்தும்;

*28.* திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:



*2019 ஜனவரி 8*] [முனைவர் கோவி. செழியன்]

*"1.* கோட்டூர் அம்பிகா சர்க்கரை ஆலை மற்றும் திருமண்டங்குடி ஆரூரான் சர்க்கரை ஆலைகளில் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் கொள்முதல் விலைக்கான தொகையை வழங்குவது குறித்தும்;

*2.* திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் பேரூராட்சி பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

*3.* திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் பேரூராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*4.* திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர், திருநீலக்குடி, நாச்சியார்கோவில், பந்தநல்லூர், திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு ஒருங்கிணைந்த காவலர் குடியிருப்பு கட்டுவது குறித்தும்;

*5.* திருவிடைமருதூர் தொகுதி, வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

*6.* திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் காவல் நிலையங்களில் காலியாக உள்ள காவலர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

*7.* திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறையில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பட்டயப்படிப்பு தொடங்குவது குறித்தும்;

*8.* திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் மருத்துவமனையில் CT Scan கருவி அமைப்பது குறித்தும்;

*9.* திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

*10.* திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை மருத்துவமனையில் சித்த மருத்துவமனைக்குத் தேவையான கட்டடம் கட்டுவது குறித்தும்;

[முனைவர் கோவி. செழியன்] [2019 ஜனவரி 8

11. திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், அணைக்கரையை சுற்றுலாத்தலமாக அறிவிப்பது குறித்தும்;

12. திருவிடைமருதூர் தொகுதியில் புதிய தொழிற்சாலை தொடங்குவது குறித்தும்;

13. திருவிடைமருதூர் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. கும்பகோணம்—சென்னை சாலையில் அணைக்கரை கொள்ளிடம் ஆற்றுப்பாலத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

15. திருவிடைமருதூர் தொகுதி, அங்கன்வாடி மையங்களில் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேஜை மற்றும் நாற்காலிகள் வழங்குவது குறித்தும்;

16. திருவிடைமருதூர் தொகுதி, இஞ்சிக்கொல்லை ஊராட்சி, சாலுவன்கோட்டை மற்றும் வேப்பத்தூர் பேரூராட்சி, அம்மன்பேட்டையில் வசிப்பவர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்குவது குறித்தும்;

17. திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

18. திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையை உயர்த்துவது குறித்தும்;

19. திருவிடைமருதூர் தொகுதியில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு தற்போது வழங்கப்படும் தொகையை கூடுதலாக வழங்குவது குறித்தும்;

20. திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூரிலிருந்து கும்பகோணத்திற்கு காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [முனைவர் கோவி. செழியன்]

21. திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி வருவாய் மாவட்டம் அமைப்பது குறித்தும்;

2. கும்பகோணம் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

3. கும்பகோணம் புறவழிச் சாலை பணியில் சாக்கோட்டை —மருதநல்லூர்—தாராசுரம் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் தொடங்குவது குறித்தும்;

4. விக்கிரவாண்டி—கும்பகோணம்—தஞ்சாவூர் NH45C சாலையை அகலப்படுத்தும் பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

5. விக்கிரவாண்டி—கும்பகோணம்—தஞ்சாவூர் NH45C சாலை, அணைக்கரையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

6. கும்பகோணம்—மன்னார்குடி—பட்டுக்கோட்டை SH 66 சாலை, திப்பிராஜபுரம் கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

7. கும்பகோணம்—நீலத்தநல்லூர் சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

8. கும்பகோணம் மாதுளம்பேட்டை இரயில்வே LC கேட் No. 269–க்கு கீழே இரயில்வே பாலம் கட்டுதல் குறித்தும்;

9. கும்பகோணம் அண்ணலக்ரஹாரம் சாலை, இரயில்வே LC கேட் No. 270–க்கு மேலே இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

10. கும்பகோணம் தொகுதி, குடிதாங்கியில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே மற்றும் திப்பிராஜபுரம் கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றில் படுகை அணைகள் கட்டுவது குறித்தும்;

11. கும்பகோணம் மாவட்ட அரசு பொது மருத்துவமனை பகுதியில் காவேரி ஆற்றில் மைல் 57/7–ல் நீர் ஒழுங்கு அமைப்பது குறித்தும்;

12. நாகை மாவட்டம், குமாரமங்கலம் கிராமம்–கடலூர் மாவட்டம், ஆதனூர் கிராமம் இடையே கொள்ளிடம் ஆற்றில் மைல் 74/4–ல் நீர் ஒழுங்கு அமைக்கும் பணியைத் தொடங்குவது குறித்தும்;

13. கும்பகோணம் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. கும்பகோணம் மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் MRI ஸ்கேன் அமைப்பது குறித்தும்;

15. கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம் மற்றும் சோழபுரம் பேரூராட்சியில் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

16. கும்பகோணம் அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு கூடுதல் கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்தும்;

17. கும்பகோணம் தொகுதி, கொட்டையூரில் மற்றும் மட்டியூரில் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

18. கும்பகோணம் தொகுதி, சாக்கோட்டையில் உள்ள 110/11 KV துணை மின் நிலையத்தை 230 KV துணை மின் நிலையமாக நிலை உயர்த்துவது குறித்தும்;

19. கும்பகோணம் நகரில் 33/11 KV உள்கட்டமைப்பு மனையக துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;





20. கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம், தாராசுரம் மற்றும் சோழபுரம் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

21. கும்பகோணம் தொகுதி, கொட்டையூர் மற்றும் அசூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

22. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் புறநகர் மற்றும் நகரப் பேருந்து நிலையங்களில் 24 மணி நேரமும் செயல்படும் நவீன கழிப்பிட வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

23. கும்பகோணம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

24. கும்பகோணம் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

25. கும்பகோணம் மகாமகக் குளத்தில் தண்ணீர் நாள்தோறும் இருக்கச் செய்வது குறித்தும்;

26. கும்பகோணம் நகராட்சியில் உள்ள அங்காடி கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. கும்பகோணம் தொகுதி, தாராசுரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

28. கும்பகோணத்தில் நவீன கருவி கொண்டு கொசுக்களை ஒழிக்க திட்டம் வகுப்பது குறித்தும்;

29. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, மேலக்காவேரி அருகில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகராட்சி மகப்பேறு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

30. கும்பகோணம் தொகுதியை அடுத்த பட்டீஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள குடியிருப்பிற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

31. கும்பகோணம் தொகுதி, சோழபுரம் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

[திரு. க. அன்பழகன்] [2019 ஜனவரி 8

32. கும்பகோணம் தொகுதி, திருமலைராஜன், முடிகொண்டான், அரசலாறு, காவேரி, பழவாறு போன்ற ஆறுகளைத் தூர்வாருவது குறித்தும்;

33. கும்பகோணம் தொகுதி, குமரன்குடி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

34. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சிப் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் மாவட்ட உள்விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;

35. கும்பகோணம் அரசினர் மகளிர் தன்னாட்சிக் க்கல்லூரியில் M.Phil. உயர் கல்விப் படிப்பை உடனடியாக தொடங்குவது குறித்தும்;

36. கும்பகோணம் அரசினர் தன்னாட்சி கலைக் கல்லூரியை மையமாகக் கொண்டு கணித மேதை இராமானுஜம் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்தும்;

37. கும்பகோணம் தொகுதி, நீலத்தநல்லூரில் உள்ள அங்காடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

38. கும்பகோணம் தொகுதி, தேவனாஞ்சேரியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

39. கும்பகோணம் தொகுதியில் விவசாயத்திற்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ள விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

40. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் புதிய உயர் அழுத்த மின் மாற்றி அமைப்பது குறித்தும்;

41. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான சாம்பசிவபுரம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள இடத்தில் புதிய நவீன வணிக வளாகம் அமைப்பது குறித்தும்;

42. கும்பகோணம் தொகுதி, சோழன்மாளிகை ஊராட்சியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. க. அன்பழகன்]

43. கும்பகோணம் தொகுதி, மேலப்பழையார் மற்றும் கீழப்பழையார் மண்டக மேடு புதுத்தெருவை இணைக்கும் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே நடைப்பாலம் அமைப்பது குறித்தும்;

44. கும்பகோணத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

45. கும்பகோணத்தில் உள்ள கிளை சிறைச்சாலைக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

46. கும்பகோணத்தில் சட்டக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

47. கும்பகோணம் நகர்ப்புற ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

48. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் உள்ள பாரம்பரியமிக்க கட்டடங்களை சீரமைப்பது குறித்தும்;

49. கும்பகோணத்தில் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக பயணிகள் தங்கும் விடுதி கட்டுவது குறித்தும்;

50. கும்பகோணம் தொகுதியில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை சீரமைப்பது குறித்தும்;

51. கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சி, கலைஞர் காலனியில் உள்ள தாய்–சேய் நல விடுதிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

52. கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இருதய நோய், நரம்பியல், சிறுநீரகவியல் துறைக்கு சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்வது குறித்தும்;

53. கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிறுநீரக சுத்திகரிப்பு சிகிச்சை மையம் துவங்குவது குறித்தும்;

54. தமிழகத்தில் கரும்பு மற்றும் நெல்லுக்கு உரிய விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

55. கும்பகோணம் தொகுதியில் இயற்கை வேளாண்மைக்காக தனிப் பிரிவு அமைப்பது குறித்தும்;

56. கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு கூடுதலாக நான்கு குளிர்சாதன பேருந்துகளை இரவு நேரங்களில் இயக்குவது குறித்தும்;

57. கும்பகோணம் தொகுதி, சேஷம்பாடி ஊராட்சி, மூப்பக்கோவில் திருக்குறள் நகரில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

58. பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தை உயர்த்துவது குறித்தும்;

59. கும்பகோணம் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கோவில்களிலும் சூரிய ஒளிமூலம் மின்சாரம் உற்பத்தி செய்வது குறித்தும்;

60. கும்பகோணம் தொகுதியில் உள்ள கோவில்களை சீரமைத்து குடமுழுக்கு செய்வது குறித்தும்;

61. கும்பகோணம் தொகுதியின் முக்கிய இடங்களில் நடமாடும் கழிப்பறை வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

62. கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடன் வழங்குவது குறித்தும்;

63. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தொகுப்பு வீடுகளுக்கு மாற்றாக புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டுவது குறித்தும்;

64. கும்பகோணம் தொகுதியில் சீமைக் கருவேல மரங்களை அகற்ற வேண்டியது குறித்தும்;

65. கும்பகோணம் தொகுதியில் பழைய மின் மாற்றிகளை நவீன மின் மாற்றிகளாக மாற்றுவது குறித்தும்;

66. கும்பகோணம் தொகுதியில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

67. கும்பகோணம் தொகுதி, அசூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கான்கிரீட் கட்டடம் கட்டுவது குறித்தும்;

68. கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;



69. கும்பகோணம் தொகுதி, அரசினர் மகளிர் தன்னாட்சி கலைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

70. கும்பகோணம் தொகுதியில் புதியதாக அரசு பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

71. கும்பகோணம் தொகுதி, கொருக்கை ஊராட்சி அரியதிடலில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

72. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், அத்தியூர் மற்றும் உத்தமதாணி ஊராட்சியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

73. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கடிச்சம்பட்டி நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

74. கும்பகோணம் வட்டார வழங்கல் அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

75. கும்பகோணம் தொகுதி, ஆரியப்படைவீடு ஊராட்சி, சமத்துவபுரம் பகுதிக்கு மும்முனை மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

76. கும்பகோணம் இரயில் நிலையம் அருகில் நகராட்சிமூலம் பயணியர் தங்கும் விடுதி அமைப்பது குறித்தும்;

77. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி ரெட்டிராயர் குளத்தைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

78. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, மாதுளம்பேட்டை தெருவில் உள்ள நகராட்சி பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் அமைப்பது குறித்தும்;

79. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, சுதர்சன் நகர், ஆர்.வி.நகர் வடக்குப் பகுதியான பெரியார் நகரை இணைக்கும் கோரையாற்று வாய்க்காலில் பாலம் அமைப்பது குறித்தும்;

80. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, காமாட்சி ஜோசியர் தெருவில் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது குறித்தும்;

[திரு. க. அன்பழகன்] [2019 ஜனவரி 8

81. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சி கிழக்கு பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்

82. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், பெரும்பாண்டி ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் நல விடுதி கட்டடத்தை சீரமைப்பது குறித்தும்;

83. கும்பகோணம் தொகுதி, நாதன்கோயில் அருள்மிகு ஜெகநாதபெருமாள் திருக்கோயில் மற்றும் திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டுவது குறித்தும்;

84. கும்பகோணம் தொகுதி, சோழபுரம் அருள்மிகு பைரவேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்வது குறித்தும்;

85. கும்பகோணத்திலிருந்து திருச்செந்தூருக்கு இயக்கப்பட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் மண்டல பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

86. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தில்லையம்பூர் ஊராட்சி, காளியம்மன் கோவில் தெரு மற்றும் உத்தமதாணி ஊராட்சியில் சமுதாயக் கூடங்கள் கட்டுவது குறித்தும்;

87. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, காவேரி புதுப்பாலம் காமராஜர் சிலை முதல் அரசினர் தன்னாட்சி கலைக் கல்லூரி நுழைவாயில் வரை நெடுஞ்சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

88. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், திம்மக்குடி கிராமத்தில் உள்ள ஆற்றங்கரையில் படித்துறை கட்டுவது குறித்தும்;

89. கும்பகோணம் தொகுதி, மேலாத்துக்குறிச்சி கிராமத்தில் உள்ள கீழவடிகன்னி வாய்க்கால் மற்றும் தேவனாஞ்சேரி ஊராட்சி, அணக்குடி வாய்க்கால்களை தூர்வாருவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. க. அன்பழகன்]

90. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, 5-வது வார்டு மேலக்காவேரி கள்ளத்தெரு ஆற்றில் பெரிய படித்துறை கட்டுவது குறித்தும்;

91. கும்பகோணம் தொகுதியிலுள்ள கதர், கிராமத் தொழில் வாரிய உற்பத்தி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

92. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, 17–வது தெரு, புதுப்பாளையம் தெரு மற்றும் திருமலை நம்பித் தெரு ஆகிய மூன்று தெருக்களை இணைக்கும் சந்திப்பில் சோடியம் விளக்கு அமைப்பது குறித்தும்;

93. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் மழைநீர் தேங்காத வகையில் வடிகால் அமைப்பது குறித்தும்;

94. கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சி, கலைஞர் காலனியில் அங்கன்வாடி மையம் கட்டுவது குறித்தும்;

95. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் தன்னாட்சி கலைக் கல்லூரி மற்றும் அரசினர் மகளிர் தன்னாட்சி கலைக் கல்லூரிகளில் பல ஆண்டுகளாக கௌரவ விரிவுரையாளர்களாகப் பணிப்புரிபவர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

96. கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியம், ஊராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் பழுதடைந்த சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

97. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியத்தில் விடுபட்ட 26 ஊராட்சிகளுக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. செய்யூர் தொகுதியில் அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. செய்யூர் தொகுதியில் அனைத்து போட்டித் தேர்வுகளிலும் தேர்ச்சி பெறும் வகையில் தேர்வு பயிற்சி மையம் அமைப்பது குறித்தும்;

3. செய்யூர் தொகுதியில் மாம்பழச்சாறு தொழிற்சாலை மற்றும் தேங்காய் நார் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

4. செய்யூர் தொகுதி, செய்யூர் அரசு மருத்துவமனையில் (Scan Digital X–Ray) அறை அமைத்து மருத்துவமனையைப் பராமரிப்பது குறித்தும்;

5. செய்யூர் தொகுதி, செய்யூர் அரசு பொது மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

6. செய்யூர் தொகுதி, செய்யூர் அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை நியமிப்பது குறித்தும்;

7. செய்யூர் தொகுதியில் 3 கிராமங்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

8. செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நெரும்பூர் மற்றும் வல்லிபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;





9. செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, கடப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டி, அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்தும்;

10. செய்யூர் தொகுதியில் உள்ள செய்யூர் அரசு மருத்துவமனை, சூணாம்பேடு ஆரம்ப சுகாதார நிலையம், பொலம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், கடப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், நெருப்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் Scan வசதி செய்து தருவது குறித்தும்;

11. செய்யூர் தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் மற்றும் சாலை வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

12. செய்யூர் தொகுதி, செய்யூர் பேருந்து நிலையம் உட்பட தேவையான பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைப்பது குறித்தும்;

13. செய்யூர் தொகுதியில் உள்ள மேற்கு செய்யூர் கிராமச் சாலைகளில் புதிய தரமான சாலைகள் அமைப்பது குறித்தும்;

14. செய்யூர் தொகுதியில் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

15. செய்யூர் தொகுதியில் அனைத்து பள்ளிகளுக்கும் புதிய கட்டடங்கள் அமைப்பது குறித்தும்;

16. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

17. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிகளுக்கு புதியதாக சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

18. செய்யூர் தொகுதியில் ஒதுக்குப்புறங்களில் குப்பைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

19. செய்யூர் தொகுதியில் உள்ள பல்வேறு பகுதிகளின் தெருக்களில் தண்ணீர் தேங்காத வகையில் தரமான சாலைகள் அமைப்பது குறித்தும்;

20. செய்யூர் தொகுதியில் செய்யூர், பவுஞ்சூர் சாலை மற்றும் பஜார் சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

21. செய்யூர் தொகுதி, செய்யூர் பேருந்து நிலையத்தில் பேவர் பிளாக் கற்கள் பதித்து சுகாதாரமான முறையில் பராமரிப்பது குறித்தும்;

22. செய்யூர் தொகுதியில், செய்யூர் அரசு மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் குப்பைகளை அகற்றி பராமரிப்பது குறித்தும்;

23. செய்யூர் தொகுதியில் தொழிற்பயிற்சி பழகுநர் (Apprenticeship – ITI) அமைப்பது குறித்தும்;

24. செய்யூர் தொகுதியில் தொழிற்பூங்கா அமைப்பது குறித்தும்;

25. செய்யூர் தொகுதியில் அனைத்து விவசாயிகளுக்கும் விதைகள், உரங்கள் மற்றும் வேளாண்மை கருவிகள் வழங்குவது குறித்தும்;

26. விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குவது குறித்தும்;

27. செய்யூர் தொகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர் காப்பீட்டுத் தொகையை உரிய காலத்தில் வழங்குவது குறித்தும்;

28. ஆலம்பரை கோட்டையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவது குறித்தும்;

29. ஆலம்பரை கோட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்தும்;

30. மீன் வளத் துறை பல்கலைக்கழகத்தில் B.F.Sc. பிரிவில் மீனவ மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்தும்;

31. கடற்கரையோர மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவுகளும், NIOT—ல் பலூன் தடுப்புகளையும் அமைப்பது குறித்தும்;

32. மீன்பிடித் தடைக் காலங்களில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை ரூ.25,000/—ஆக உயர்த்தி வழங்குவது குறித்தும்;

33. மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானியத் தொகையை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துவது குறித்தும்;





34. மீன்பிடித்து தொழில் செய்யும்பொழுது விபத்தினால் இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 5 இலட்சமும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்குவது குறித்தும்;

35. மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள் மானிய விலையில் வங்கிகளில் வழங்குவது குறித்தும்;

36. அனைத்து முகத்துவாரங்களையும் தூர்வாரி, படகு நிறுத்துமிடம் அமைப்பது குறித்தும்;

37. செய்யூர் தொகுதியில் உள்ள பழங்குடியின மக்களுக்கு புதியதாக கான்கிரீட் வீடுகள் அமைப்பது குறித்தும்;

38. மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படும் வீடுகளுக்கு மணல், சிமென்ட் போன்ற கட்டுமானப் பொருட்கள் தாமதமின்றி வழங்குவது குறித்தும்;

39. செய்யூர் தொகுதியில் உள்ள அரசு புறம்போக்கு (நத்தம்) நிலங்களைக் கண்டறிந்து நிலமற்ற பழங்குடியினர், இருளர்கள், வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள மக்களுக்கு வீடு, மனை நிலங்கள் வழங்குவது குறித்தும்;

40. செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், விட்டிலாபுரம் ஊராட்சி, பேரம்பாக்கத்தில் உள்ள அரசு ஆதி திராவிடர் ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

41. செய்யூர் தொகுதியில் தாலுகா நீதிமன்றம் அமைக்கும் பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. போளூர் தொகுதி, கரைப்பூண்டி ஊராட்சியில் செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து மண்ட கொளத்தூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்வது குறித்தும்;

2. கரும்புக்கு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு ரூ.3,500/–ம் நெல்லுக்கு சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,000/–ம் என்று நிர்ணயம் செய்வது குறித்தும்;

3. விவசாயிகளின் வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

4. போளூர் பேரூராட்சியின் 18–வது வார்டின் பழுதடைந்த சாலைகளை சிமெண்ட் சாலைகளாக அமைப்பது குறித்தும்;

5. களம்பூர் பேரூராட்சியின் 15 வார்டுகளில் கழிவுநீர் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

6. சேத்துப்பட்டு பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் கழிவுநீர் வடிகால்வாய் அமைத்து சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

7. சேத்துப்பட்டு பேரூராட்சியில் ஆற்காடு முதல் விழுப்புரம் சாலையில் சேத்துப்பட்டில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

8. போளூர் ஒன்றியத்தில் உள்ள 20 ஊராட்சிகளுக்கும் போளூர் பேரூராட்சிக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவது குறித்தும்;

9. போளூர் ஒன்றியம், செண்பகத்தோப்பு அணைக்கட்டை சீரமைத்து ஊராட்சிகளின் ஏரிகளின் நீர் ஆதாரத்தை அதிகரிப்பது மற்றும் ஏரிகளுக்கு கமண்டல நதியிலிருந்து நீர்வரத்துக் கால்வாயைத் தூர்வாருவது குறித்தும்;

10. போளூரில் உள்ள போளூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பெட்ரோல், டீசல் பங்க் விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. கே.வி. சேகரன்]

11. சேத்துப்பட்டு ஒன்றியம், ஆத்தரை, அப்பேடு, இந்திரவணம், கெங்கைசூடாமணி மற்றும் விலாபாக்கம் மதுரா சோத்துகண்ணி ஆகிய ஊராட்சிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. பெரணமல்லூர் ஒன்றியம், விநாயகபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள ஊராட்சிகளுக்கு இடையில் செய்யாற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

13. பெரணமல்லூர் ஒன்றியம், பெரிய கொழப்பலூர், இமாபுரம், நமத்தோடு, மரக்குணம், வீசாமங்களம், தவணி, மேலதாங்கள், அணாதிமங்களம், கோணாமங்களம், எஸ். காட்டேரி மதுர எட்டையாபுரம், கெங்காபுரம், கோணையூர், ஆவணியாபுரம் மற்றும் மேலானூர் ஆகிய ஊராட்சிகளில் குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

14. பெரணமல்லூர் ஒன்றியம், ஆவணியாபுரம் ஆதி திராவிடர் குடியிருப்பு, வீசாமங்களம் மற்றும் மேலானூர் ஊராட்சிகளில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

15. பெரணமல்லூர் ஒன்றியம், ஆவணியாபுரம் கூட்டு சாலையில் (ஆரணி முதல் வந்தவாசி வரை) உயர் கோபுர மின்விளக்கு அமைப்பது குறித்தும்;

16. போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு புதியதாக கட்டடம் கட்டுவது குறித்தும்;

17. போளூர் தொகுதி, சேத்துப்பட்டு மற்றும் வடமாதிமங்கலத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளைப் (இருபாலர் பள்ளிகள்) பிரித்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைப்பது குறித்தும்;

18. போளூர் பேரூராட்சியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

19. போளூர் ஒன்றியம், முருகாபாடி ஊராட்சியில் சிப்காட் அமைப்பது குறித்தும்;

20. போளூர் தொகுதியில் உள்ள பெரிய ஏரியின் ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏரியை தூர்வாரி, ஏரிக்கு வரும் கால்வாய்களை அகலப்படுத்தி ஆழப்படுத்துவது குறித்தும்;

[திரு. கே.வி. சேகரன்] [2019 ஜனவரி 8

21. போளூர் ஒன்றியம், கேளூர் ஊராட்சி கால்நடை வார சந்தையில் உயர் கோபுர மின்விளக்கு அமைப்பது குறித்தும் ;

22. போளூர் ஒன்றியம், சந்தவாசல் மற்றும் கேளூர் போன்ற ஊராட்சிகளில் பயணியர் நிழற்குடை அமைப்பது குறித்தும்;

23. போளூர் ஒன்றியம், வெல்லூர் ஊராட்சியில் துளுவ புஸ்பகிரியின் கொல்ல கொட்டாயின் கமண்டல நதியின் குறுக்கே தரைப்பாலம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. மதுரை கிழக்குத் தொகுதி, மதுரை மாநகராட்சி வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

2. மதுரை கிழக்குத் தொகுதி, மதுரை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் தார்ச்சாலை அமைப்பது குறித்தும்;

3. உத்தன்குடி – ஊமச்சிக்குளம் – ஆலத்தூர் – தனிச்சியம் பகுதி சாலையை இணைத்து வெளிவட்டச் சாலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.



2019 ஜனவரி 8]

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. எழும்பூர் தொகுதி, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 61, 77, 104 மற்றும் 107 ஆகிய பகுதிகளில் உள்ள பழமையான குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

2. எழும்பூர் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி விளையாட்டுத் திடல்களை சீரமைப்பது குறித்தும்;

3. எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சென்னை மாநகராட்சி வார்டு எண் 58, 61, 77, 78, 104 மற்றும் 107 ஆகிய வார்டுகளில் உள்ள பழுதடைந்த கழிவுநீர்க் குழாய்களுக்கு மாற்றாக புதிய கழிவுநீர்க் குழாய்கள் அமைப்பது குறித்தும்;

4. எழும்பூர் தொகுதியில் நேரு விளையாட்டரங்கம் மற்றும் நேரு உள் விளையாட்டரங்கம் ஆகியவற்றை நவீன முறையில் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. பரமத்திவேலூர் தொகுதி, பெருங்குறிச்சி, குப்பிரிக்காபாளையம், சுள்ளிப்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு காவேரி குடிநீர் வழங்குவது குறித்தும்;

2. பரமத்தி ஒன்றியம், நல்லூர், மணியனூர், கோலாரம் ஆகிய ஊராட்சிகளுக்கு புதியதாக காவேரி குடிநீர்த் திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;

3. ஜேடர்பாளையம், நல்லூர், பெரியமணலி ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

4. கபிலர்மலை அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுப்பது குறித்தும்;

5. வேலூர் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுப்பது குறித்தும்;

6. மோகனூர் ஒன்றியம், பாலப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

7. வடகரையாத்தூர், கொண்டரசரம்பாளையம், மணியனூர், லத்துவாடி ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

8. மோகனூர் ஒன்றியம், கே.புதுப்பாளையத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

9. கபிலர்மலை ஒன்றியம், ஜேடர்பாளையத்தில் புதியதாக தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

10. வேலூர், பரமத்தி ஆகிய பேரூராட்சிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

11. ராஜாவாய்க்கால், மோகனூர் வாய்க்கால், கொமராபாளையம் வாய்க்கால் ஆகியவற்றை சீரமைப்பது குறித்தும்;

12. பிலிக்கல்பாளையம் – ஆவுடையார்கோவில் காவேரி ஆற்றின் குறுக்கே போக்குவரத்துப் பாலம் அமைப்பது குறித்தும்;





13. காவேரி ஆற்றின் குறுக்கே களிமேடு அருகே தடுப்பணை அல்லது கதவணை அமைப்பது குறித்தும்;

14. வேலூர், பாண்டமங்கலம், பொத்தனூர் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு இடத்தில் வெற்றிலை, வாழையைப் பாதுகாக்க குளிர்ப்பதன கிடங்கு அமைப்பது குறித்தும்;

15. பரமத்தி ஒன்றியம், இருட்டணையில் புதியதாக பள்ளிக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

16. பரமத்தி ஒன்றியம், கூடச்சேரி – மூர்த்திபட்டி இடையே திருமணிமுத்தாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுவது குறித்தும்;

17. பரமத்தி ஒன்றியம், மேலப்பட்டியில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே உள்ள தடுப்பணையை சீரமைப்பது குறித்தும்;

18. மேட்டூர் உபரிநீரை திருமணிமுத்தாற்றில் திருப்பிவிட்டு ஏரி குளங்களில் தண்ணீர் நிரப்புவது குறித்தும்;

19. கொத்தமங்கலம் கிராமம் ச.எண் 294, காவேரி ஆறு நீர்நிலைப் புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்தும்;

20. பரமத்தி பேரூராட்சிக்கு காவேரியிலிருந்து புதியதாக குடிநீர்த் திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்

21. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நடந்தை கிராமம், நடந்தைக்கு புதியதாக காவேரி குடிநீர் வழங்குவது குறித்தும்;

22. அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் புதிய வகுப்பறைகள் அமைப்பது குறித்தும்;

23. திருச்செங்கோடு – பரமத்தி சாலையில் தேவையான இடங்களில் வேகத்தடை அமைப்பது குறித்தும்;

24. சிறுநல்லிகோயில் பள்ளபாளையம் ஏரி, இரும்பன்குளம் வாழவந்தி ஆகிய ஏரிகளில் மழைக்காலங்களில் தண்ணீரை சேமித்து வைப்பது குறித்தும்;

25. நல்லூர் காவல் நிலையத்திற்கு புதியதாக காவல் ஆய்வாளர் பணியிடம் ஏற்படுத்துவது குறித்தும்;

*26.* நடந்தை, கந்தம்பாளையம், மணியனூர் ஒத்தரசு, எளச்சிபாளையம், பொம்மம்பட்டி சோளசிராமணி, குரும்பளமகாதேவி கள்ளுக்கடை மேடு, அரசம்பாளையம் அருந்ததியர் தெரு, பரமத்திவேலூர் தாலுகா அலுவலகம், ஜேடர்பாளையம் நான்கு ரோடு கபிலர்மலை பிரிவு, பாண்டமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில், கூடச்சேரி, செ.புதுப்பாளையம் ஆகிய இடங்களில் உயர் கோபுர மின்விளக்கு அமைப்பது குறித்தும்;

*27.* பரமத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதியதாக கட்டடம் கட்டுவது குறித்தும்;

*28.* பரமத்தி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு புதியதாக கட்டடம் கட்டுவது குறித்தும்;

*29.* ராஜவாய்க்காலின் குறுக்கே ஆணங்கூர், பொத்தனூர், கொந்தளம் கருக்கம்பாளையம், பாலப்பட்டி குமராபாளையம் ஆகிய இடங்களில் பாலம் கட்டுவது குறித்தும்;

*30.* அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது குறித்தும்;

*31.* பரமத்திவேலூர் தொகுதியில் தேவையான இடங்களில் புதியதாக நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

*32.* பரமத்திவேலூர் தொகுதி, பரமத்தி அல்லது வேலூரில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

*33.* கபிலர்மலை ஒன்றியம், சோளசிராமணி காவேரி ஆற்றிற்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள கதவணைப் பாலத்திற்கு அடுத்துள்ள ரயில் பாதைக்கு மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

*34.* எளச்சிபாளையம் ஒன்றியம், அகரம் ஊராட்சி, கொத்தம்பாளையம் திருமணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

*35.* கபிலர்மலை ஒன்றியம், சோளசிராமணி கதவணை மின் திட்டம் அருகில் பூங்கா அமைப்பது குறித்தும்;





*36.* பரமத்தி ஒன்றியம், கொண்டரசம்பாளையம் கிளை நூலகத்திற்கும், எளச்சிபாளையம் ஒன்றியம், பொம்மம்பட்டியில் உள்ள நூலகத்திற்கும் புதியதாக கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

*37.* திருச்செங்கோடு வட்டம், புத்தூர் – மருக்கலாம்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் தனித்தனி கிராம நிருவாக அலுவலர் நியமிப்பது குறித்தும்;

*38.* கபிலர்மலை ஒன்றியம், ஜேடர்பாளையம் அணைக்கட்டை சுற்றுலாத் தலமாக அறிவித்து படகு சவாரி அமைப்பது குறித்தும்;

*39.* வேலூரில் வேளாண்மை விற்பனை மையம் அமைப்பது குறித்தும்;

*40.* வேலூரில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

*41.* மரவள்ளிக் கிழங்கு, மஞ்சள் ஆகியவற்றிற்கு அரசு விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

*42.* கபிலர்மலை ஒன்றியம், அருணகிரி மலையை சுற்றுலாத் தலமாக்குவது குறித்தும்;

*43.* வேலூர் அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், ரத்த வங்கி ஆகிய வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

*44.* திருமணிமுத்தாற்றில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றி தூர்வாரி கரைகளைப் பலப்படுத்துவது குறித்தும்;

*45.* மாணிக்கம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்தா பிரிவிற்கு புதியதாக கட்டடம் கட்டுவது குறித்தும்;

*46.* நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் சித்த மருத்துவ பிரிவை நிரந்தரமாக்குவது குறித்தும்;

*47.* மோகனூர், கபிலர்மலை, பரமத்தி ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

48. வேலகவுண்டம்பட்டி, கந்தம்பாளையம், ஜேடர்பாளையம் ஆகிய ஊர்களிலிருந்து சென்னை மற்றும் கோவைக்கு புதிய வழித்தடம் ஏற்படுத்தி பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

49. விவசாயிகளுக்கு விண்ணப்பித்த மூன்று மாத காலத்திற்குள் மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

50. குமாரபாளையம் ஊராட்சி, குமாரபாளையம் வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

51. குன்னமலை, ராமதேவம் சித்தம்பூண்டி ஆகிய ஊராட்சிகளுக்கு தனியாக குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

52. பரமத்திவேலூர் தொகுதியில் உள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவது குறித்தும்;

53. பரமத்திவேலூர் தொகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

54. மணல் தட்டுப்பாட்டை நீக்குவது மற்றும் பட்டா நிலங்களில் மணல் எடுப்பது குறித்தும்;

55. பரமத்திவேலூர் தொகுதியில் தேங்காய் நார் மற்றும் தேங்காய் கொப்பரை தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

56. பரமத்திவேலூர் தொகுதி, மாணிக்க நத்தம், நடந்தையில் புதியதாக துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

57. பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட பொத்தனூர் வெங்கமேடு, பரமத்தி பேரூராட்சி மாதேசம்பாளையம், சோளசிராமணி அண்ணா நகர், கொத்தமங்கலம், அடுக்குநகர் ஆகிய இடங்களில் வசிப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

58. பரமத்திவேலூர் தொகுதியை மையமாகக் கொண்ட வேலூர் அல்லது பரமத்தியில் புதியதாக அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பது குறித்தும்;





59. பரமத்திவேலூர், ஜேடர்பாளையம் பயணியர் விடுதியைப் புதுப்பிப்பது குறித்தும்;

60. பரமத்திவேலூர், மணப்பள்ளியில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைப்பது குறித்தும்;

61. பரமத்திவேலூர், கபிலர்மலை ஒன்றியம், சுள்ளிபாளையம் கிராமம், அருணகிரி மலையைச் சுற்றிலும் கிரிவலப் பாதை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருவண்ணாமலை ஒன்றியம், துரிஞ்சலாற்றில் தி.வலசை-சு. வாளவெட்டி இடையே உள்ள தரைப் பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக அமைப்பது குறித்தும்;

2. திருவண்ணாமலை ஒன்றியம், வெறையூர் – திவாளவெட்டி இடையே ஓடையில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

3. துரிஞ்சாபுரம் ஒன்றியம், மேப்பத்துறை ஊராட்சி, கீழாத்தூர் – தென்மாதிமங்கலம் இடையே ஆற்றில் உள்ள தரைப் பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக அமைப்பது குறித்தும்;

[திரு. கு. பிச்சாண்டி] [2019 ஜனவரி 8

4. கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம், செல்லங்குப்பம் ஊராட்சியிலிருந்து நா.கெங்குப்பட்டு செல்லும் கிராமச் சாலையில் துரிஞ்சலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

5. கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம், ஆராஞ்சி புதூர் கிராமத்தில் இருந்து நல்லாண்பிள்ளை பெற்றாள் செல்லும் கிராமச் சாலையில் துரிஞ்சலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

6. கீழ்பெண்ணாத்தூரில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

7. கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

8. தென்பெண்ணையாற்றில் இருந்து துரிஞ்சலாறு வழியாக செய்யாற்றை இணைக்கும் நந்தன்கால்வாய்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. வேடசந்தூர் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;

2. நத்தம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. அர. சக்கரபாணி]

3. ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தனி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

4. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பாலாறு—பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்தும்;

5. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் பரப்பலாறு அணை அருகே சமுதாயக்கிணறு அமைத்து குடிநீர் வழங்குவது குறித்தும்;

6 ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

7. ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி, பழனி ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

8 ஒட்டன்சத்திரம் தொகுதியில் சண்முகநதி, அமராவதி ஆறுகளில் கலக்கும் ஆலைக் கழிவுகளைத் தடுத்து மாசற்ற குடிநீர் வழங்குவது குறித்தும்;

9. அனைத்து விவசாயிகளும் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தேசிய வங்கிகளில் பெற்ற விவசாயக் கடன்களை ரத்து செய்வது குறித்தும்;

10. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வில்வாதம்பட்டி, மானூர், கோரிக்கடவு, தும்பலப்பட்டி, அக்கரைப்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

11. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சத்யாநகர் நியாய விலைக் கடையிலிருந்து, லட்சுமிபுரத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடையைப் பிரிப்பது குறித்தும்;

13. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் சர்க்கரை விலையை மீண்டும் ஒரு கிலோ ரூ.13.50—க்கு விற்பனை செய்வது குறித்தும்;

14. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாதுபட்டி ஊராட்சி, ஜவ்வாதுபட்டி புதூரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

15. நியாய விலைக் கடைகளில் அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் விநியோகம் செய்வது குறித்தும்;

16. மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

17. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம், கேதையுறம்பு ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

18. விவசாயிகளின் நலன் கருதி வணிக (Commercial) மின் இணைப்பு பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்குவது மற்றும் 2009-ம் ஆண்டு சுயநிதி திட்டத்தில் ரூ.25,000/- ரூ.50,000/- என பணம் செலுத்திய அனைவருக்கும் உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

19. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

20. தமிழகம் முழுவதும் பூரண மதுவிலக்கு நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

21. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பழனி, நரிக்கல்பட்டி வழியாக பெரிய மொட்டனூத்து, போதுபட்டி, தாளையூத்து, மடத்துக்குளம் வரை இயங்கி வந்த அரசு பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

22. ஒட்டன்சத்திரம் தொகுதியில் திண்டுக்கல் முதல் கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி, தாளையூத்து வழியாக பொள்ளாச்சி வரை இயங்கி வந்த அரசு பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

23. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பள்ளி, கல்லூரி நேரங்களில் பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்தும்;

24. ஒட்டன்சத்திரம் நகரில் அரசு பேருந்து பணிமனைக்கு நிலம் தேர்வு செய்து அரசு பணிமனை அமைப்பது குறித்தும்;





25. 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவது குறித்தும்;

26. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பொருளூர்–ஆயக்குடி 11/2-ல் உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

28. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை ஆகிய சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

29. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள குறுவட்டங்களில் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;

30. பழனியில் பாலாறு—பொருந்தலாறு இடது பிரதான கால்வாயை சீரமைத்து, சிலாப், லயனிங், மடைகள் அனைத்தும் செப்பனிட்டு பாசன வசதி செய்வது குறித்தும்;

31. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மானூர், வில்வாதம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கிடையே சண்முகநதி ஆற்றில் பாலம் கட்டுவது குறித்தும்;

32. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் உள்ள பரப்பலாறு அணையைத் தூர் வாருவது குறித்தும்;

33. ஒட்டன்சத்திரம் தொகுதியில், பொருளூர் கரிசல் குளம், பாலப்பன்பட்டிபுதூர் கருங்குளம், மஞ்சநாயக்கன்பட்டி காளிபட்டி குளம் ஆகிய குளங்களின் வாய்க்காலில் சிமென்ட் சிலாப் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

34 ஒட்டன்சத்திரம் தொகுதியில் பரப்பலாறு அணையிலிருந்து முத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம், முத்து சமுத்திரம், காவேரியம்மாபட்டி குளம், ஒட்டடை குளம், பாப்பாகுளம், சடையன்குளம், செங்குளம், கருங்குளம், ஜவ்வாதுபட்டி குளம் ஆகிய குளங்களுக்கு செல்கின்ற நீர் வீணாகாமல் இருக்க லைனிங்கில் சிமென்ட் கற்கள் அமைப்பது குறித்தும்;

35. ஒட்டன்சத்திரம் நகரத்தில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

36. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முத்துநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, இடையகோட்டை, மார்க்கம்பட்டி, பெரியகோட்டை, ஓடைப்பட்டி ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை மற்றும் கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவது குறித்தும்;

37. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பரப்பலாறு அரசு உயர்நிலைப் பள்ளியை, வண்டிப்பாதையில் உள்ள கல்வித் துறைக்கு சொந்தமான இடத்தில் கட்டுவது குறித்தும்;

38. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னகரட்டுப்பட்டி, புளியமரத்துக்கோட்டை, காவேரியம்மாபட்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

39. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மானூர், பூலாம்பட்டி, பெரிச்சிபாளையம், சாமிநாதபுரம், கூத்தம்பூண்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

40. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொப்பம்பட்டி, கீரனூர், தாளையூத்து, மஞ்சநாயக்கன்பட்டி ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

41. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

42. மாணவ, மாணவியர் தேசிய வங்கியில் பெற்ற கல்விக்கடனை ரத்து செய்வது குறித்தும்;





43. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு பணியாளர் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்தும்;

44. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து, புதிதாக கள்ளிமந்தையத்தை தனி வட்டமாகப் பிரிப்பது குறித்தும்;

45. ஒட்டன்சத்திரம் தொகுதியில் தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கு முதியோர் உதவித்தொகையை வழங்குவது குறித்தும்;

46. ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் மக்களுக்கு நிலம் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

47. ஒட்டன்சத்திரம் தொகுதியில் இடையகோட்டை, வலையபட்டி ஆகிய கிராமங்களில் நங்காஞ்சியாறு நீர்தேக்கத்தின் இடது மற்றும் வலதுபுற வாய்க்கால் அமைப்பதற்கு நிதி ஒதுக்குவது குறித்தும்;

48. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாக தொழிற்பேட்டைகள் அமைப்பது குறித்தும்;

49. ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கை பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

50. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டை ஊராட்சிப் பகுதியில் அரசுக்கு சொந்தமான 150 ஏக்கர் நிலத்தில்; தொழிற்பேட்டை துவங்குவது குறித்தும்;

51. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும்;

52. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள காய்கனி மார்க்கெட் கழிவுகளைக் கொட்டுவதற்கு அரசு இடம் ஒதுக்கி, குப்பை கிடங்கு அமைப்பது குறித்தும்;

53. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சின்னக்குளத்தைத் தூர்வாரி கம்பிவேலி அமைத்து, சிறந்த பொழுதுபோக்குப் பூங்கா அமைப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2019 ஜனவரி 8

54. ஒட்டன்சத்திரம் நகராட்சி 5, 6, 7 ஆகிய வார்டுகளில் உள்ள இரயில்வே தரைப்பாலங்களில் இணைப்புச் சாலை ஏற்படுத்தி, மழைக் காலத்தில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

55. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள மார்க்கெட் காய்கனி கழிவுகளைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும்;

56. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து கள்ளிமந்தையத்தைக் தலைமையிடமாக கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

57. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது குறித்தும்;

58. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கிராமப்புற சாலைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நடுவது குறித்தும்;

59. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, பழனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமப்புற சாலைகளைப் பராமரிப்பது குறித்தும்;

60. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிக்கவும், மாவட்ட முக்கிய சாலை மற்றும் மாவட்ட இதர சாலைகளை இணைத்து ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைப்பது குறித்தும்;

61. தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை அரசின் செலவிலே பராமரிப்பது குறித்தும்;

62. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு ஊராட்சி, மாட்டுப்பட்டிக்காடு கிராமத்தில் வசிப்பிடமின்றி உள்ள மக்களுக்கு, அரசின்மூலம் இடம் ஒதுக்கி வீடுகள் கட்டித்தருவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. அர. சக்கரபாணி]

63. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள பாறைப்பட்டி, சிந்தலவாடம்பட்டி, சாமியார்புதூர், மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, தேவத்தூர், காளிபட்டி, புளியம்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, எவிக்சன் நகர் போன்ற பகுதிகளில் சுகாதார வளாகம் கட்டுவது குறித்தும்;

64. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு பகுதியில் உள்ள மலைக் கிராமங்களில் விளைநிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் வன விலங்குகள் வராமல் தடுக்கும் விதமாக அகழிகள் அமைப்பது குறித்தும்;

65. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க சோலார் மின் வேலி அமைப்பது குறித்தும்;

66. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடகாடு ஊராட்சியில் வனத் துறை மூலமாக ஏற்கெனவே அமைக்கப்பட்ட பெத்தேல்புரம்–சிறுவாட்டுக்கோம்பை சாலையை சீரமைப்பது குறித்தும்;

67. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள குறுவட்டங்கள் (Revenue Firka) தோறும் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

68. தேசிய, மாநில, மாவட்ட, பல்கலைக்கழக அளவில் விளையாட்டுத் துறையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு அரசு பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிப்பது குறித்தும்;

69. இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஸ்கூட்டர் வழங்குவது குறித்தும்;

70. மாற்றுத் திறனாளிகளில் 40% குறைபாடு உள்ள அனைத்து நபர்களுக்கும் அரசு உதவித்தொகை வழங்குவது குறித்தும்;

71. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகளவு பயிரிடப்படும் கன்வல்லி கிழங்கு (Gloriosa Superba) விதைகளை அரசே கொள்முதல் செய்ய கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

72. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2019 ஜனவரி 8

73. ஒட்டன்சத்திரம் தொகுதியில், அதிகமாக பயிரிடப்படும் பருத்தி, மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பது குறித்தும்;

74. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் வேளாண்மை துறை அலுவலகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளில்; பணம் செலுத்திய விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும்;

75. 5 ஏக்கருக்குக்கீழ் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே வறட்சி நிவாரணம் என அறிவித்து, அதனை முழுமையாக வழங்குவது குறித்தும்;

76. கஜா புயலால் சேதமடைந்த மக்காச்சோளம், பருத்தி, பாசிப்பயறு, தட்டைப்பயறு, மொச்சை, உளுந்து, தக்காளி, மிளகாய், கிழங்கு போன்ற பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவது குறித்தும்;

77. கஜா புயலால் சாய்ந்துபோன தென்னை மரங்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவது குறித்தும்;

78. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

79 ஒட்டன்சத்திரம் தொகுதியில் விவசாயிகளின் விளை பொருட்களை சேமித்து வைப்பதற்கு 100 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு அமைப்பது குறித்தும்;

80. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள கள்ளிமந்தையம், இடையகோட்டை, நரிக்கல்பட்டி, மிடாப்பாடி ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை, அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

81. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரியுடன் கூடிய மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

82. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கீரனூர் பேரூராட்சி மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொ.கீரனூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர் ஓய்வெடுக்கும் அறை, எக்ஸ்ரே கருவி, போதுமான அவசர ஊர்தி வழங்குவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. அர. சக்கரபாணி]

83. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நரிக்கல்பட்டி, தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொ.கீரனூர், சத்திரப்பட்டி, கேதையுறம்பு ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

84. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை, கீரனூர் பேரூராட்சி ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவப் பிரிவு அமைப்பது குறித்தும்;

85. ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சி, தேவத்தூர், கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வக நுட்புநர் (Lab Technician) பணியிடம் நிரப்புவது குறித்தும்;

86. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரிவு கட்டடம் கட்டுவது குறித்தும்;

87. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, நாகணம்பட்டியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு துணை சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

88. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரசப்பிள்ளைபட்டி, சிறுநாயக்கன்பட்டி ஆகிய அரசு துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

89. ஒட்டன்சத்திரம் தொகுதியில், மிடாப்பாடி ஊராட்சி—வன்னியர்வலசு கிராமத்தில் தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் தங்கிய புனித இடத்தை காந்தி நினைவு மண்டபமாக அமைப்பது குறித்தும்;

90. ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சியில் தளையூற்று மற்றும் சின்ன தளையூற்று என்ற இரண்டு நீர்வீழ்ச்சிகள் உள்ள இடத்தை சுற்றுலாத்தலமாக அறிவிப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2019 ஜனவரி 8

91. ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண்டான், சந்தன்செட்டிவலசு, நரிக்கல்பட்டி, அமரப்பூண்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகளை அரசே கொள்முதல் செய்து, அதை விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;

92. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் மல்பெரியை (பட்டுப்புழு வளர்ப்பு) திண்டுக்கல் மாவட்டத்திலே விற்பனை செய்வதற்காக அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

93. சுதந்திர போராட்ட வீரர் தியாகி கோபால்சாமி நாயக்கர் உருவம் பொறித்த தபால் தலை வெளியிட்டு, அவரது வீர வாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்வது குறித்தும்;

94. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பாலின் கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்தும்;

95. ஒட்டன்சத்திரம் தொகுதி, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பாலை ஆவின் நிறுவனம் முழுமையாக கொள்முதல் செய்வது குறித்தும்;

96. கால்நடைகளுக்கான உலர் தீவனம், கலப்பு தீவனத்தை ஆவின் மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவது குறித்தும்;

97. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, கீரனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் வீடில்லாத ஏழை, எளிய மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.



2019 ஜனவரி 8]

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. நெய்வேலியில் காப்புக்காட்டில் ஏரி அமைக்கும் பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

2. நெய்வேலி தொகுதியில் NLCIL நிறுவனத்தால் வழங்கப்பட்ட மாற்றுக்குடியிருப்பு மையங்களில் 20 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

3. நெய்வேலி தொகுதியில் பலாப்பழ மதிப்புக் கூட்டுத் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

4. நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், பெருமத்தூர் மற்றும் இந்திரா நகர் ஊராட்சிகளில் உள்ள தாயகம் திரும்பியோர் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிட விவசாயப் பண்ணைக் கழகம் மீண்டும் அமைப்பது குறித்தும்;

5. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் அந்நிறுவனத்தில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்குவது குறித்தும்;

6. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பல ஆண்டுகளாக பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

7. நெய்வேலி தொகுதி, வடகுத்து ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

8. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு உதவிடும்வகையில் புதிய கொள்கையை வகுப்பது குறித்தும்;

9. நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், காட்டுப்பாளையம் – விசூர் பகுதி வழியே செல்லும் வெள்ளவாரி ஓடையில் தடுப்பணை கட்டி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவது குறித்தும்;

10. நெய்வேலி தொகுதியில் வசிக்கும் அகதிகள் பயன்பெறும் வகையில் ரெப்கோ வங்கி கிளை துவங்குவது குறித்தும்;

11. நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

12. நெய்வேலி தொகுதியில் வசிக்கும் அகதிகளுக்கு புதிய வீட்டு மனைகளை வழங்குவது குறித்தும்;

13. நெய்வேலியில் மகளிர் கல்லூரி அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, வாணிஒட்டு என்கிற இடத்தில் தடுப்பணை கட்டி, வலது, இடதுபுற கால்வாய்கள் வெட்டி ஏரிகளுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் குறித்தும்;

2. கிருஷ்ணகிரி நகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கான சிறப்புத் திட்டம் உருவாக்குவது குறித்தும்;

3. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் விடுபட்ட கிராமங்களுக்கு ஒகேனக்கல் குடிநீர் வழங்கும் திட்டம் குறித்தும்;





4. K.R.P. அணைக்கான ஷெட்டர்கள் அனைத்தும் சேதம் அடைந்துள்ளதால், இரண்டாம் போக விவசாயம் பாதிக்கப்படும் நிலையை மாற்றுவதற்கான திட்டம் குறித்தும்;

5. K.R.P. அணைக்கு வந்து கொண்டிருக்கும் தண்ணீரை தமிழக எல்லையில், கொடியாளம் அணை அருகில் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடும் திட்டம் குறித்தும்;

6. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் நலன் கருதி மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

7. கிருஷ்ணகிரி நகராட்சியில் அமைந்துள்ள சின்ன ஏரியை சுத்தப்படுத்தி, படகு இல்லமாக மாற்றும் திட்டம் குறித்தும்;

8. கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட சேதமடைந்துள்ள ஊரக சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

9. கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள், மருத்துவக் கருவிகள் வழங்கும் திட்டம் குறித்தும்;

10. காவேரிப்பட்டிணம் அரசு மருத்துவமனையை மேம்படுத்தும் திட்டம் குறித்தும்;

11. கிருஷ்ணகிரி தொகுதி, ஊரகப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் திட்டம் குறித்தும்;

12. கிருஷ்ணகிரி தொகுதி, ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சுவர், குடிநீர் வசதி, போதிய கட்டட வசதி உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்தும் திட்டம் குறித்தும்;

13. அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்களுக்கு உரிய கட்டட வசதி செய்யும் திட்டம் குறித்தும்;

14. கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் விரைவாக முடித்திடுவதற்கான திட்டம் குறித்தும்;

15. கிருஷ்ணகிரி தொகுதி முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு கட்டட வசதியை செய்து தருவதற்கான திட்டம் குறித்தும்;

16. கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை மேம்பாலத்திலிருந்து, தாலுகா காவல் நிலையம் வரையிலான சாலையை போக்குவரத்து நெரிசல் காரணமாக அகலப்படுத்துவதற்கான திட்டம் குறித்தும்;

17. பெரிய ஏரியிலிருந்து படேதலா கால்வாய்க்கு தண்ணீர் வழங்கும் திட்டம் குறித்தும்;

18. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கும்மனூர் அருகில் உயர்மட்டப் பாலம் அமைத்திடும் திட்டம் குறித்தும்;

19. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே காவேரிப்பட்டிணம் அருகில் பள்ளிப்பட்டி – சந்தாபுரம் இடையில் தரைப் பாலம் அமைக்க வேண்டியதன் திட்டங்கள் குறித்தும்;

20. காவேரிப்பட்டிணம் பேரூராட்சியில் அடிப்படை வசதி ஏற்படுத்தும் திட்டம் குறித்தும்;

21. கிருஷ்ணகிரி ஒன்றியம், சோக்காடு முதல் ஐம்பூத்து வரை சாலை அமைப்பது குறித்தும்;

22. கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திடும் திட்டம் குறித்தும்;

23. கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாக மாற்றிடும் திட்டம் குறித்தும்;

24. கிருஷ்ணகிரி தொகுதி, சிக்காரிமேட்டில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் குறித்தும்;

25. கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் விவசாய தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைப்பது குறித்தும்;





26. கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் பகுதியில் விளையும் மல்லிகைப்பூ உள்ளிட்ட பூக்கள் விளைச்சலை கருத்தில் கொண்டு சென்ட் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

27. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டி வலது புறக் கால்வாய் பெல்லம்பள்ளி, சிக்கப்பூவித்தி, ஆலப்பட்டி, பாலகுறி, இட்டிக்கால் அகரம் ஓம்பலகட்டு, மோரமடுகு சோக்காடு, துடுகனஅள்ளி, புங்கம்பட்டி, சாப்ரம், மோரம்பள்ளி, பனகமுட்லு, கதிரிபுரம், பன்னிஹள்ளி, ஜகதாப் வழியாக கரடிஹள்ளி வரை உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்புவது குறித்தும்;

28. கிருஷ்ணகிரியிலிருந்து ஆந்திரா செல்லும் சாலையை குப்பம் எல்லை வரை விரிவுபடுத்தும் திட்டம் குறித்தும்;

29. கிருஷ்ணகிரி தொகுதி முழுவதும் குடிசை வீடுகளில் வாழும் மக்களுக்கு குடியிருக்க வீடு கட்டிக்கொள்ள வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

30. கிருஷ்ணகிரி தொகுதி முழுவதும் நிறுத்தப்பட்ட முதியோர் ஓய்வூதியத்தை மீண்டும் வழங்கும் திட்டம் குறித்தும்;

31. படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் குறித்தும்;

32. விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வது குறித்தும்;

33. விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

[2019 ஜனவரி 8

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சியை ஊராட்சி ஒன்றியமாக அறிவிப்பது குறித்தும்;

3. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியை பேரூராட்சியாக அறிவிப்பது குறித்தும்;

4. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலத்திலிருந்து கீரமங்கலம் வழியாக பேராவூரணி வரை அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

5. ஆலங்குடி தொகுதி, திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் தெற்கு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் புறவழிச்சாலை அமைப்பது குறித்தும்;

7. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் 1,2,3 வார்டுகளுக்கு தனியாக நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

8. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் அரசு சீர்மரபினர் மாணவியர் விடுதிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

9. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தில் மலர்ச் சந்தை அமைப்பது குறித்தும்;

10. ஆலங்குடி தொகுதி, அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

11. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

12. ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி, வம்பன் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

13. L.N. புரம் ஊராட்சி, அணைவயலில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

14. கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

15. வல்லத்திராக்கோட்டை ஊராட்சி, வல்லத்திராக்கோட்டையில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

16. குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சி, குழந்தை விநாயகர் கோட்டையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

17. கொத்தக்கோட்டை ஊராட்சி, திருவரங்குளம், வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் விவசாயக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

18. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் அமைப்பது குறித்தும்;

19. குலமங்கலம் வடக்கு ஊராட்சி, குலமங்கலம் வடக்கு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது குறித்தும்;

20. செரியலூர்இனாம் ஊராட்சி, செரியலூர்இனாம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

21. கொடிவயல் ஊராட்சி, மணிவிளான்வயலில் மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

22. L.N. புரம் ஊராட்சி, வதங்கன் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

23. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலம் பெரியார் நகரில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

24. நெடுவாசல் மேற்கு ஊராட்சி, வேளார் தெருவில் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2019 ஜனவரி 8

25. ஆலங்குடி பேரூராட்சி, பழுதடைந்த சாலைகளை நபார்டு திட்டத்தில் சீரமைப்பது குறித்தும்;

26. கீரமங்கலம் பேரூராட்சியில் பழுதடைந்த சாலைகளை நபார்டு திட்டத்தில் சீரமைப்பது குறித்தும்;

27. ஆலங்குடி பேரூராட்சியில் சிறப்பு வாய்ந்த வாரச் சந்தையை மேம்படுத்துவது குறித்தும்;

28. ஆலங்குடி பேரூராட்சி, செட்டிகுளத்திற்கு நான்கு புறமும் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

29. கல்லாலங்குடி ஊராட்சி, கலிபுல்லாநகரில் இஸ்லாமிய பகுதிக்கு மயானம் அமைப்பது குறித்தும்;

30. ஆலங்குடி பேரூராட்சி, ஆலங்குடி போக்குவரத்து பணிமனைக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்தும்;

31. அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

32. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

33. K. ராசியமங்கலம் ஊராட்சி, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

34. புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குளம் கிராமத்திற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

35. பூவற்றக்குடி ஊராட்சி, பூவைமாநகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அருகில் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அகற்றி புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

36. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலத்திலிருந்து கொடிக்கரம்பை சாலையை சீரமைப்பது குறித்தும்;

37. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கியில் வவ்வால் சரணாலயம் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

38. வேப்பங்குடி ஊராட்சி, இம்மனாம்பட்டி வழியாக புதுக்கோட்டைக்கு செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

39. கோவிலூர் ஊராட்சி, கோவிலூர் தெற்கிலிருந்து மேல்கோட்டை வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

40. தாந்தாணி ஊராட்சி, புதுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் பிரிந்து பொன்னம்பலம் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

41. விஜயபுரம் ஊராட்சி, விஜயபுரம் நடுகுடியிருப்பு செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

42. கீழாத்தூர் ஊராட்சி, கீழாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

43. திருக்கட்டளை ஊராட்சி, இம்மனாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

44. கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

45. சிலட்டூர் ஊராட்சி, சிலட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

46. பூவற்றகுடி ஊராட்சி, பூவைமாநகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

47. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

48. திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் வடக்கு இலுப்பங்கொல்லையில் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2019 ஜனவரி 8

49. கே. ராசியமங்கலம் ஊராட்சி, கே. ராசியமங்கலத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைப்பது குறித்தும்;

50. குலமங்கலம் வடக்கு ஊராட்சி, குலமங்கலம் வடக்கில் கால்நடை கிளை மருந்தகம் அமைப்பது குறித்தும்;

51. ஆலங்குடி பேரூராட்சி, அம்புலி ஆற்றைத் தூர் வாருவது குறித்தும்;

52. தாந்தாணி ஊராட்சி, தாந்தாணியில் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

53. அறந்தாங்கியிலிருந்து ஆவணத்தான்கோட்டை, பூவற்றக்குடி, வல்லவாரி வழியாக பேராவூரணிக்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

54. புதுக்கோட்டையிலிருந்து திருக்கட்டளை, இம்மனாம்பட்டி, தேத்தாம்பட்டி, பொற்பனைகோட்டை, வேப்பங்குடி, மாங்கனாபட்டி, வம்பன் நால்ரோடு வழியாக ஆலங்குடிக்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

55. ஆலங்குடியிலிருந்து வடகாடு, புள்ளான்விடுதி, நெடுவாசல் வழியாக திருச்சிற்றம்பலத்திற்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

56. ஆலங்குடியிலிருந்து மலையூருக்கு கூடுதல் பேருந்து இயக்குவது குறித்தும்;

57. கீரமங்கலம் பேரூராட்சியை புதிய வட்டமாக அறிவிப்பது குறித்தும்;

58. ஆலங்குடி பகுதியில் விளையும் மா, பலா, வாழை மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றை சேமிப்பதற்கு குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

59. கீழாத்தூர் ஊராட்சி, கீழாத்தூர் நாடியம்மன் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைப்பது குறித்தும்;

60. குலமங்கலம் தெற்கு ஊராட்சி, குலமங்கலம் ஸ்ரீ பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயிலை சுற்றுலாத்தலமாக அறிவிப்பது குறித்தும்;

61. கொத்தமங்கலத்திலிருந்து சென்னைக்கு புதிய வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்குவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

62. புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரியிலிருந்து ஆலங்குடி சாலை மற்றும் அறந்தாங்கி செல்லும் நெடுஞ்சாலைகளை இணைக்கும் புறவழிச்சாலை அமைப்பது குறித்தும்;

63. குரும்பூர் ஊராட்சி, காட்டுத்தட்டான்வயல் கிராமத்திற்கு புதிய மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

64. கீரமங்கலம் பகுதியில் மிக அதிக அளவில் பயிரிடப்படுகின்ற மலர்களைப் பாதுகாக்கின்ற வகையில் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

65. வடகாடு ஊராட்சி, வடகாடு முதல் கொத்தமங்கலம் செல்லும் பழுதடைந்த சாலையைப் புதுப்பிப்பது குறித்தும்;

66. பொதுப் பணித் துறைக்கு சொந்தமான ஏரிகளை மராமத்து செய்வது குறித்தும்;

67. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

68. கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

69. மேற்பனைக்காடு ஊராட்சி, மேற்பனைக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

70. பூவற்றக்குடி ஊராட்சி, பூவைமாநகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

71. திருவரங்குளம் ஊராட்சி, திருவரங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பழுதடைந்த கட்டடங்களை மராமத்து செய்வது குறித்தும்;

72. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

73. வடகாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2019 ஜனவரி 8

74. குளவாய்ப்பட்டி ஊராட்சியில் இயங்கி வரும் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

75. இராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலகோட்டையில் உள்ள ராஜேந்திரபுரம் S.S.II மின்மாற்றியை இரண்டாகப் பிரித்து புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

76. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி வீரங்குண்டான் ஏரி பாசன வாய்க்காலைத் தூர்வாரி தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

77. மாத்தூர் ஊராட்சி, மாத்தூரில் கல்லணை நீட்டிப்பு வாய்க்காலைத் தூர்வாருவது குறித்தும்;

78. அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, அரசர்குளம் கீழ்பாதியிலிருந்து பிரிந்து செல்லும் கல்லணை நீட்டிப்பு வாய்க்காலைத் தூர்வாருவது குறித்தும்;

79. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடியில் செயல்படாமல் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய மருத்துவர்களை நியமனம் செய்து செயல்படுத்துவது குறித்தும்;

80. இம்மனாம்பட்டியிலிருந்து பொற்பனைகோட்டை, மணிப்பள்ளம் வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

81. வம்பன் நால்ரோட்டிலிருந்து வேப்பங்குடி வழியாக வேங்கிடகுளம் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

82. வல்லவாரி ஊராட்சி, வல்லவாரி மேற்கு பிள்ளையார் கோயில் அருகில் புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

83. வல்லவாரி ஊராட்சி, வல்லவாரி கிழக்கு தேவர் குடியிருப்பில் புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

84. வல்லவாரி ஊராட்சியில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

85. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி நெய்வத்தளி இணைப்புச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

86. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி தெற்கு காமாட்சி அம்மன் கோயில் அருகே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

87. அறந்தாங்கியிலிருந்து கடையாத்துப்பட்டி, நற்பவளக்குடி, செங்கமாரி வழியாக திருமயத்திற்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

88. கைக்குறிச்சி ஊராட்சி, புதுக்கோட்டை அறந்தாங்கி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து விஜயரெகுநாதபுரம் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

89. ஆலங்குடி, புதுக்கோட்டை சாலையில் பிரிந்து கொத்தக்கோட்டை அம்மையன்புரம் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

90. ஆலங்குடி, புதுக்கோட்டை சாலையிலிருந்து பிரிந்து K.V. கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையை சீரமைப்பது குறித்தும்;

91. வேங்கிடாகுளத்திலிருந்து வல்லத்திராக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையை சீரமைப்பது குறித்தும்;

92. கத்தக்குறிச்சி ஊராட்சி, அறந்தாங்கி, புதுக்கோட்டை சாலையில் பிரிந்து முடுக்கு புஞ்சை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

93. மாங்காடு ஊராட்சி, மாங்காடு சுந்தரக் குடியிருப்புப் பகுதியில் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

94. குலமங்கலம் தெற்கு ஊராட்சி, குலமங்கலம் ஸ்ரீ பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயிலுக்கு அறந்தாங்கி, கீரமங்கலம் மற்றும் ஆலங்குடியிலிருந்து பேருந்து இயக்குவது குறித்தும்;

95. கொத்தமங்கலம் ஊராட்சி, சுண்டாங்கிவலசை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

96. வெண்ணதாவல்குடி ஊராட்சி, பசுவயல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

97. தெட்சிணாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

98. பள்ளத்திவிடுதி ஊராட்சி, பள்ளத்திவிடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

99. சிலட்டூர் ஊராட்சி, கொல்லன்வயல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

100. சிலட்டூர் ஊராட்சி, குன்னக்குரும்பி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

101. கீழாத்தூர் ஊராட்சி, வெள்ளாக்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

102. கொத்தக்கோட்டை ஊராட்சி, வேங்கிடாகுளத்திலிருந்து பிரகதாம்பாள்புரம் வழியாக கொத்தக்கோட்டை செல்லும் சாலையில் கி.மீ. 0/0 – 2/100 வரை சீரமைப்பது குறித்தும்;

103. மாங்காடு ஊராட்சி, பட்டிப்புஞ்சையிலிருந்து காசிப்புதுப்பேட்டை செல்லும் சாலையில் 0/0 – 1/0 வரை சீரமைப்பது குறித்தும்;

104. கோவிலூர் ஊராட்சி, கோவிலூர் ஆதி திராவிடர் காலனி சாலையிலிருந்து மேலக்கோட்டை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

105. செரியலூர் ஜமீன் ஊராட்சி, கீரமங்கலம் சிந்தாதிக்காடு சாலையிலிருந்து செரியலூர் ஜமீன் மாரியம்மன் கோயில் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

106. இசுகுப்பட்டி ஊராட்சி, இசுகுப்பட்டி ஆதி திராவிடர் காலனி சாலையிலிருந்து கோயில் வாசல் செல்லும் சாலையில் கி.மீ. 0/0 – 2/5 வரை சீரமைப்பது குறித்தும்;





107. மாங்காடு ஊராட்சி, ஆலங்குடி அணவயல் சாலையிலிருந்து மாங்காடு மக்காட்டான்கொலை சாலையை சீரமைப்பது குறித்தும்;

108. செரியலூர்இனாம் ஊராட்சி, தஞ்சாவூர், சாயல்குடி சாலையிலிருந்து பிரிந்து பெருமாள்கோயில் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

109. நெடுவாசல் கிழக்கு ஊராட்சி, நெடுவாசல் கிழக்கு குயவர் தெருவிலிருந்து பத்திரகாளியம்மன் கோயில் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

110. வெண்ணாவல்குடி ஊராட்சி, வெண்ணாவல்குடி தெற்கு அக்ரஹாரம் செல்லும் சாலையிலிருந்து பெருமாள் கோயில் செல்லும் சாலையில் கி.மீ. 0/0 – 1.925 வரை சீரமைப்பது குறித்தும்;

111. L.N. புரம் ஊராட்சி, முசிறி–சேதுபாவாசத்திரம் சாலையிலிருந்து பிரிந்து புள்ளான்விடுதி செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

112. பள்ளத்திவிடுதியிலிருந்து மறமடக்கி செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

113. திருச்சி–மீமிசல் சாலையில் கி.மீ. 644–ல் இருந்து பிரிந்து தெட்சிணாபுரம் சாலை வழியாக ஆவுடையாப்பட்டி செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

114. சேந்தாக்குடி ஊராட்சி, புதுக்கோட்டை – அறந்தாங்கி சாலையிலிருந்து பிரிந்து விளாங்குடி செல்லும் சாலையில் கி.மீ. 0/0–1–280 வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

115. நெடுவாசல் கிழக்கு ஊராட்சி, நெடுவாசல் கிழக்கிலிருந்து நெடுவாசல் மேற்கு வழியாக வேளார் தெரு செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

116. கீழாத்தூர் ஊராட்சி, கீழாத்தூர் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

117. மேலாத்தூர் ஊராட்சி, சூரன்விடுதி, ஆலங்காடு இணைப்புச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2019 ஜனவரி 8

118. பாச்சிக்கோட்டை முதல் மேலக்காடு பள்ளி சாலையை சீரமைப்பது குறித்தும்;

119. வேப்பங்குடி ஊராட்சி, மணிப்பள்ளம் சாலையிலிருந்து இம்மனாம்பட்டி சாலை வழியாக பொற்பனக்கோட்டை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

120. வேங்கிடாகுளம்–வல்லத்திராக்கோட்டை சாலையிலிருந்து கி.மீ. 64 முதல் வம்பன் – கீழையூர் சாலை வழியாக தர்மத்தூரணி சாலையை சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள விளைநிலங்கள், விவசாயிகளின் உயிர் உடமைகளை யானை, விலங்குகளிடமிருந்து பாதுகாத்திட புதிய தொழில்நுட்பத்தோடு கூடிய பாதுகாப்பு வேலிகள் அமைப்பது குறித்தும்;

2. இரண்டு நகராட்சிகள், 3 பேரூராட்சிகள், 55 கிராமங்களை உள்ளடக்கிய கடையநல்லூர் தாலுகா அலுவலகத்தை கடையநல்லூர் நகர எல்லையிலேயே அமைப்பது குறித்தும்;

3. செங்கோட்டை ஒன்றியம், அடவிநயினார் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலாத்தலமாக்குவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

4. செங்கோட்டை பகுதியில் ஈத்தல் தொழிலாளர்களுக்கு அத்தொழிலை தொடர்ந்து செய்ய அனுமதிப்பது அல்லது மாற்றுத் தொழிலுக்கு வழிவகை செய்வது குறித்தும்;

5. கடையநல்லூர் தொகுதியில் தென்னை நாரிலிருந்து புதிய தொழில்நுட்பத்தோடு நாற்காலி, மேஜை உள்ளிட்ட பர்னிச்சர் சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

6. கடையநல்லூர் நகராட்சியிலுள்ள மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

7. கடையநல்லூர் தொகுதியில் இளைஞர்களின் நன்மைக்காக உள்விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;

8. கடையநல்லூர் தொகுதியில் மாணவர் திறன் வளர்ப்பு இலவச மையம், அரசு வேலைவாய்ப்பு முகாம் நடத்துவது குறித்தும்;

9. செங்கோட்டை–தவணை இணைப்புச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

10. தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்ட தனி மாவட்டத்தை உருவாக்குவது குறித்தும்;

11. கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட வடகரை, சொக்கம்பட்டி, புளியரைப் பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது மற்றும் பெண் மகப்பேறு மருத்துவர் நிரந்தரமாகப் பணியாற்றுவது குறித்தும்;

12. கடையநல்லூர், இக்பால் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவது குறித்தும்;

13. கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் குளங்களையும் தூர்வாரி அணைகளை சீரமைப்பது குறித்தும்;

14. கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட சுந்தரேசபுரம் அரசு பள்ளிக்கூட கட்டடத்தை உடனடியாக புனரமைப்பது குறித்தும்;

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2019 ஜனவரி 8*

15. பல ஆண்டுக் காலமாக செயல்படாமல் உள்ள உருது அகாடமி செயல்பட நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

16. ஓய்வுபெற்ற இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், இமாம்கள், முஅத்தின்கள் உள்ளிட்ட விண்ணப்பித்தவர்களுக்கு உலமா பென்ஷன் வழங்குவது குறித்தும்;

17. காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிபின் வாழ்க்கை வரலாறு தமிழக அரசு பாடநூலில் மீண்டும் இடம்பெறுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த அரசு பொது மருத்துவமனையை அரசு பல்நோக்கு மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

2. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள அடையாற்றின் இருமருங்கிலும் மழைக்காலத் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

3. சைதாப்பேட்டை தொகுதி, மேற்கு சைதாப்பேட்டை பேருந்து நிலையத்திலிருந்து பல்வேறு வழித்தடங்கள் அமைப்பது குறித்தும்;



*2019 ஜனவரி 8*] [திரு. மா. சுப்பிரமணியன்]

4. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள கிண்டி தீயணைப்பு நிலையத்தைப் புதுப்பித்து, நவீன உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

5. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள தாடண்டர் நகரில் விளையாட்டுத்திடல் அமைப்பது குறித்தும்;

6. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள சாலைகளை சீரமைக்க வேண்டியது குறித்தும்;

7. சைதாப்பேட்டை தொகுதி – ஜாபர்கான்பேட்டை ஆர்.வி. நகரில் உள்ள பழமைவாய்ந்த குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளைப் புதுப்பிப்பது குறித்தும்;

8. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள கோதாமேடு, திடீர் நகர், மேக்ஸ்லாண்ட், அண்ணாநகர், சலவையாளர் காலனி ஆகிய பகுதிகளில் புதிய குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் அமைப்பது குறித்தும்;

9. சைதாப்பேட்டை தொகுதி, ஆளுநர் மாளிகை அருகில் உள்ள சர்தார் பட்டேல் சாலை, வேளச்சேரி சாலையை இணைத்து உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

10. சைதாப்பேட்டை தொகுதியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. தா.மோ. அன்பரசன்] [*2019 ஜனவரி 8*

"1. ஆலந்தூர் தொகுதியில் ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை அதிகரிப்பது குறித்தும்;

2. அடையாற்றின் குறுக்கே தரப்பாக்கம்—அனகாபுத்தூர் மேம்பாலப் பணியை விரைந்து முடிப்பது குறித்தும்;

3. போரூர் ஏரி உபரி நீர் அடையாற்றினை சென்றடையும் மணப்பாக்கத்தான் கால்வாய் பணியைத் துரிதப்படுத்துவது குறித்தும்;

4. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட நந்தம்பாக்கம், முகலிவாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

5. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட முகலிவாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

6. ஆதம்பாக்கம் ஏரியைத் தூர் வாரி ஆதம்பாக்கம் பகுதியில் நீர் ஆதாரத்தைப் பெருக்குவது குறித்தும்;

7. கெருகம்பாக்கம்—மணப்பாக்கம் ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றுவது குறித்தும்;

8. நங்கநல்லூர் எஸ்.ஐ.பி. காலனியில் 110 KV துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

9. ஆலந்தூர் பகுதியில் விடுபட்ட பகுதிகளில் சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

10. நங்கநல்லூர்—மணப்பாக்கம்—கெருகம்பாக்கம்—கோவூர் ஆகிய இடங்களில் இருந்து புதிய வழித்தடங்களில் மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

11. ஆலந்தூர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர், பழவந்தாங்கல் உள்ளிட்ட குடியிருப்புப் பகுதிகளில் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ள சொத்து வரியை சீராய்வு செய்து குறைக்க சீராய்வுக் குழு அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



*2019 ஜனவரி 8*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கஜா புயலால் பாதிக்கப்பட்ட நத்தம் தொகுதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நிவாரணம் வழங்கி அனைவருக்கும் வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;

2. பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும்;

3. பாதிக்கப்பட்ட தென்னை, மா, தேக்கு, கொய்யா மரங்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்;

4. விவசாயப் பயிர்களான எலுமிச்சை மற்றும் வாழை மரங்கள், முத்து சோளம், மானாவாரி பயிர்களான உளுந்து, தட்டைப் பயறு, பாசிப்பயறு ஆகியவற்றிற்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்;

5. சிறுமலையில் பயிரிடப்படும் மிளகு, காபி, பலா, தேக்கு மற்றும் சவுக்கு மரங்கள், போன்றவற்றிற்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்;

6. கஜா புயலால் பாதிக்கப்பட்ட சிறுமலை மற்றும் நத்தம் தொகுதியிலுள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

7. நத்தம் தொகுதி, சமுத்திராபட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

8. நத்தம் தொகுதி, நத்தம் அரசு பொது மருத்துவமனைக்கு பிணவறை உடற்கூறு ஆய்வு செய்ய மருத்துவர் மற்றும் உதவியாளர் நியமிப்பது குறித்தும்;

9. நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கம்பளியம்பட்டி ஊராட்சி, புளியம்பட்டி அருகில் முடிமலை அடிவாரத்தில் பெரிய நீர்த்தேக்க அணை கட்டுவது குறித்தும்;

10. சிராங்காட்டுபட்டி ஊராட்சி, சிரங்காட்டுபட்டி பாலாற்றில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

11. நத்தம் ஒன்றியம், புன்னப்பட்டி ஊராட்சி, புன்னப்பட்டி திருமணிமுத்தாற்றில் காட்டு பெரியகுளத்திற்கு தண்ணீர் பெருக்க அணை கட்டுவது குறித்தும்;

12. நத்தம் ஒன்றியம், முளையூர் ஊராட்சியிலுள்ள திருமணிமுத்தாற்றில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

13. நத்தம் ஒன்றியம், ஊராளிப்பட்டி ஊராட்சியிலுள்ள சம்பையாற்றில் ரெங்கநாத பிள்ளை குளத்திற்கு கீழ்ப்புறம் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

14. நத்தம் ஒன்றியம், ரெட்டியப்பட்டி ஊராட்சியில் காசம்பட்டி அழகர்மலை ஓடையில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

15. நத்தம் ஒன்றியம், பரளிபுதூர் ஊராட்சி, பொடுகம்பட்டியில் 39 ஏக்கர் பரப்பளவுள்ள செட்டிகுளத்தை ஆழப்படுத்தி அணை கட்டுவது குறித்தும்;

16. நத்தம் ஒன்றியம், செந்துரை ஊராட்சி, நல்லபிச்சம்பட்டியிலிருந்து பிள்ளையார்நத்தம் ஊராட்சியிலுள்ள மாதவநாயக்கன்பட்டி வரை இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

17. நத்தத்தில் உதவி தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

18. நத்தத்தில் தீயணைப்பு நிலையத்திற்கு கட்டட வசதி செய்வது குறித்தும்;





19. நத்தத்தில் காவல் துறையினருக்கு குடியிருப்புக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

20. நத்தம் தொகுதியிலுள்ள செந்துறையில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

21. நத்தம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

22. நத்தம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

23. நத்தம் ஒன்றியம், லிங்காவடி ஊராட்சி, லிங்காவடி மலையூருக்கு சாலை வசதி அமைப்பது குறித்தும்;

24. நத்தம் ஒன்றியம், சேத்தூர் ஊராட்சி, குட்டுபட்டி ஊராட்சி ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட சின்னமலையூர், பெரிய மலையூர், வலசு பள்ளத்துக்காடு ஆகிய ஊர்களுக்கு சாலை வசதி அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2019 ஜனவரி 8

"1. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் இடிந்து விழுந்த கிரபிகாரம் கட்டுவது குறித்தும், பக்தர்கள் வசதிக்காக கூடுதலாக விடுதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

2. காயல்பட்டிணம் நகராட்சியில் சேதமடைந்த சாலைகள் சீரமைப்பது குறித்தும்;

3. காயல்பட்டிணம் அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர் பணியிடங்கள் ஏற்படுத்தி கூடுதலாக கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

4. காயல்பட்டிணம், உடன்குடியில் மற்றும் நாசரேத் பகுதியில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானங்கள் அமைப்பது குறித்தும்;

5. புன்னக்காயல் ஊராட்சியில் பல ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வரும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

6. உடன்குடி பகுதியில் நிறுத்தப்பட்ட 13 சிற்றுந்து வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

7. உடன்குடியில் புதிய குளம் அமைப்பது குறித்தும்;

8. குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு கூடுதலாக குடிநீர், கழிப்பிட வசதிகள் செய்வது குறித்தும்;

9. உடன்குடி அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிப்பது குறித்தும், கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

10. கடம்பா குளத்தின் கீழுள்ள 13 குளங்களைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

11. புறையூர் மற்றும் மேலதிருச்செந்தூர் ஊராட்சியில் சமுதாய நலக்கூடங்கள் கட்டுவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

12. திருச்செந்தூர் பேரூராட்சி, உடன்குடி பேரூராட்சி, நாசரேத் பேரூராட்சி, ஆறுமுகநேரி பேரூராட்சி, ஆத்தூர் பேரூராட்சி, தென்திருப்பேரை பேரூராட்சி மற்றும் கானம் பேரூராட்சிகளில் சேதமடைந்த சாலைகளைப் புதுப்பித்து சீரமைப்பது குறித்தும்;

13. திருச்செந்தூர் செந்தில்முருகன் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆறுமுகநேரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, காயல்பட்டினம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் நடுநாலுமுலைக்கிணறு அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

14. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிப்பது குறித்தும்;

15. ஆத்தூர், ஆறுமுகநேரி, வீரபாண்டியன்பட்டனம், திருச்செந்தூர் சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

16. புன்னக்காயல், ஆத்தூர் சாலை, வாத்தியர் குடியிருப்பு சாலை, தென்திருப்பேரை, ஏரல் சாலை, வரண்டியவேல் சாலை, அடைக்கலாபுரம், ராணிமகாராஜாபுரம், திருநெல்வேலி இணைப்புச் சாலை, பிறைகுடியிருப்பு, உடன்குடி சாலை மற்றும் காலன்குடியிருப்பு சாலை ஆகிய சாலைகள் அமைப்பது குறித்தும்;

17. திருச்செந்தூர் பேரூராட்சியில் ஆலந்தலையில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

18. திருச்செந்தூர் தினசரி காய்கறி சந்தை, ஆறுமுகநேரி வாரச்சந்தை, உடன்குடி வாரச்சந்தை மற்றும் நாசரேத் வாரச்சந்தை ஆகியவற்றை தரம் உயர்த்தி கான்கிரீட் கட்டடங்களாகக் கட்டுவது குறித்தும்;

19. புன்னக்காயல்—தூத்துக்குடி பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2019 ஜனவரி 8

20. அங்கமங்கலம் ஊராட்சி, வெங்கட்ராமானுஜபுரம் ஊராட்சி, செட்டியாபத்து ஊராட்சி, ராஜபதி ஊராட்சி, சேதுக்குவாய்த்தான் ஊராட்சி மற்றும் குரங்கணி ஊராட்சிகளில் சமுதாயநலக் கூடங்கள் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள், இருக்கையில் இல்லை.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. செங்கல்பட்டு நகராட்சியில் தினந்தோறும் பாலாற்றுக் குடிநீரை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

3. செங்கல்பட்டு நகரில் பேருந்து பணிமனையை நகருக்கு வெளியே அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திருமதி ம. வரலட்சுமி]

4. செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33–வது வார்டு பகுதி, அண்ணா நகர், அழகேசன் நகர், மேலமையூர், குண்டூர் ஏரிகளில் இருந்து வரும் மழைநீர் கொளவாய் ஏரியில் சேரும் இடத்தில் உள்ள கால்வாயை அகலப்படுத்தி தூர்வார நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

5. செங்கல்பட்டு அரசு மருத்துவமனையை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

6. செங்கல்பட்டு மற்றும் நகரைச் சுற்றியுள்ள கிராம பொதுமக்கள், தென் மாவட்டங்களுக்கு அரசு விரைவுப் பேருந்துகளில் செல்ல, செங்கல்பட்டு அய்யப்பன் கோயில் அருகில் நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

7. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள பொதுமக்கள், ஸ்மார்ட் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்து ஒரு வருடமாக வழங்கப்படாமல் உள்ள 10,000 ஸ்மார்ட் குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்குவது குறித்தும்;

8. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள குண்ணவாக்கம், அஞ்சூர், சராணைபுதுச்சேரி, கீரப்பாக்கம் ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால், கல்லாங்குத்து பகுதிகளில் புதியதாக வீடு கட்டி குடியிருக்கும் ஏழை மக்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

9. செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், புலிப்பாக்கத்தில் உள்ள கொளவாய் ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

10. செங்கல்பட்டு தொகுதி, தென்மேல்பாக்கம், அஞ்சூர், குண்ணவாக்கம், வீராபுரம் ஊராட்சிகளில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், கொளவாய் ஏரியில் கலப்பதைத் தடுப்பது குறித்தும்;

11. காட்டாங்கொளத்தூர் இரயில் நிலையம் எதிரே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து சிக்னல் அமைத்து விபத்துகளைத் தடுப்பது குறித்தும்;

12. கூடுவாஞ்சேரி, மறைமலைநகர் தேசிய நெடுஞ் சாலைகளில் அடிக்கடி நிகழும் விபத்துகளைத் தடுக்க, நடை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

13. செங்கல்பட்டு பழவேலி—மாமண்டூர் இடையே உள்ள பாலாற்றில் தடுப்பணை கட்டி குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவது குறித்தும்;

14. செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகள் இரயில்வே நிலையம் செல்ல நடை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

15. மறைமலைநகர் நகராட்சி, நின்னகரை ஏரியில் தனியார் நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுநீரால் ஏரி நீரில் ஏற்படும் சுகாதார சீர்கேட்டை தடுப்பது குறித்தும்;

16. காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், கால்வாய், குமிழி, நல்லம்பாக்கம், வேங்கடமங்கலம் ஒத்திவாக்கம், கீரப்பாக்கம், வீராபுரம் ஊராட்சிகளில் புதியதாக தார்ச்சாலை அமைக்க வனத் துறை தடையில்லா சான்று வழங்குவது குறித்தும்;

17. கூடுவாஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி நவீன வசதிகளுடன்கூடிய அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

18. செங்கல்பட்டு முதல் வண்டலூர் வரை ஏற்படும் போக்குவரத்து நெரிசலைச் குறைக்க தேசிய நெடுஞ்சாலையில் பறக்கும் பாலம் அமைப்பது குறித்தும்;

19. நெடுஞ்சாலைகள் விரிவாக்கம் மற்றும் புதிய பாலங்கள் கட்டும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்று நிலம் வழங்குவது குறித்தும்;

20. காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஆப்பூர்—வலையங்கரணை சாலையில் கல்வெட்டுடன்கூடிய தார்ச்சாலை அமைப்பது குறித்தும்;





21. காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், வண்டலூர் ஊராட்சி, ஓட்டேரி—ஊரப்பாக்கம் சாலையை சீரமைப்பது குறித்தும்;

22. ஊரப்பாக்கத்தில் குடிசை மாற்று வாரியத்தால் வழங்கப்பட்ட வீடுகளுக்கு முழுத்தொகை செலுத்தியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவது குறித்தும்;

23. மறைமலைநகர் நகராட்சி, 1—வது வார்டு, கிழக்கு பொத்தேரி, மேற்கு பொத்தேரி இணைப்பு ஏரிக்கரை சாலை நகராட்சியால் டெண்டர் கோரப்பட்டு பணி துவங்கி பாதியில் நிறுத்தப்பட்டுள்ள தார்ச்சாலை அமைக்கும் பணியைத் தொடங்குவது குறித்தும்;

24. மறைமலைநகர் நகராட்சி, திருவள்ளுவர் சாலையில் உள்ள தொடக்கப் பள்ளியை அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

25. மறைமலைநகர் நகராட்சி, 2—வது வார்டு மற்றும் 19—வது வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

26. காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஆப்பூர், காயரம்பேடு, கீரப்பாக்கம், பெருமாட்டுநல்லூர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

27. ஊரப்பாக்கம், வீரபாண்டிய கட்டபொம்மன் நகர், மறைமலைநகர், காந்திநகர் பகுதிகளில் புதியதாக திறந்த நியாய விலைக் கடை கட்டடங்களில் நியாய விலைக் கடைகள் செயல்படுத்துவது குறித்தும்;

28. காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் திம்மாவரம், காரணை புதுச்சேரி ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணியாற்றும், பணியாளர்களுக்கு 100 நாட்கள் பணி வழங்கி முழு ஊதியம் வழங்குவது குறித்தும்;

29. செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள குண்டூர் ஏரி, கற்பூர செட்டி குளம், வேப்பங்குளம், சின்னமுத்து மாரியம்மன் குளத்தைத் தூர்வாருவது குறித்தும்;

30. செங்கல்பட்டு மும்மலையிலிருந்து மழைக்காலங்களில் வரும் நீரை தேக்க மும்மலை அருகில் ஒரு சிற்றணை அமைப்பது குறித்தும்;

31. செங்கல்பட்டு நகராட்சி, J.C.K நகரில் விளையாட்டுத் திடல் அமைப்பது குறித்தும்;

32. நந்திவரம் கூடுவாஞ்சேரியில் உள்ள நந்திவரம் பெரிய ஏரியில் கழிவுநீர் கலந்து துர்நாற்றம் வீசுவதைத் தடுப்பது குறித்தும்;

33. நந்திவரம்–கூடுவாஞ்சேரி, நெல்லிக்குப்பம் சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க GST சாலையில் உயர் மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

34. நந்திவரம்–கூடுவாஞ்சேரி, 6–வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் மின் மயான தகன மேடை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சீத்தாபதி அவர்கள்.

**திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:





“1. சோழிங்கநல்லூர் தொகுதி, கிழக்கு கடற்கரை சாலையில் கடலோரப் பகுதியான கொட்டிவாக்கம் குப்பம் முதல் உத்தண்டி நைனார்குப்பம் வரை தடுப்புச்சுவர் சாலை மற்றும் வலைகளை உலரவைத்து, அதற்கான பாதுகாப்புக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

2. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14, வார்டுகள் 168, 169, 183, 184, 185, 186, 187, 188, 189, 190, 191 மற்றும் மண்டலம்–15, வார்டுகள் 192, 193, 194, 195, 196, 197, 198, 199, 200 ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகளைத் துவங்கி விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

3. சோழிங்கநல்லூர் தொகுதி, காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகளைத் துவங்கி விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

4. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியான பக்கிங்ஹாம் கால்வாயில் S.R.B. டூல்ஸ் முதல் முட்டுக்காடு வரை சாலை அமைக்கவும், படகுக் குழாம் மற்றும் போக்குவரத்து அமைப்பது குறித்தும்;

5. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பொது விநியோகக் கடைகளையும் சொந்தக் கட்டடத்தில் அமைப்பது குறித்தும்;

6. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மழைநீர் தேங்கியுள்ள அனைத்து இடங்களிலும் மழைநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

7. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, தாழம்பூர், DLF, செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், செம்மொழிப்பூங்கா வழியாக ஒக்கியம் மடுவு வரை பெரிய மழைநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2019 ஜனவரி 8

8. சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

9. சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் அரசு உயர்தர பொது மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

10. சோழிங்கநல்லூரில் அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்தும்;

11. சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய நுகர்வோர் உணவுப் பொருள் பாதுகாப்பு அலுவலகம் அமைப்பது குறித்தும்;

12. சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் சர்வே எண் 439 கிராமத்திற்கு, காரப்பாக்கம் சர்வே எண் 160B, 161B, 123B, 165, 170, 171/1, 172, 169–2, 170–2, 123/9, ஜல்லடையான்பேட்டை திருவள்ளூர் நகர் சர்வே எண் 220–க்கு, செம்மஞ்சேரி சர்வே எண் B337–12, B337/12, ஒக்கியம் துரைப்பாக்கம் மூட்டைக்காரன் சாவடி, சர்வே எண் 272/1A, 262/2 உள்ளகரம் சர்வே எண் 90, 91 புழுதிவாக்கம் சர்வே எண் 230/16, ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர், சர்வே எண் 282/2, 283/2 மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் நிரந்தரமாக குடியிருப்பதற்கு இலவச பட்டா வழங்குவது குறித்தும்;

13. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய உபகரணங்கள் வழங்குதல், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நியமனம் குறித்தும்;

14. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வார்டுகளிலும், ஊராட்சிகளிலும் தேவையான இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

15. சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் தீயணைப்பு நிலையம் அமைப்பது மற்றும் தீ விபத்திற்கான நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்தும்;

16. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

17. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்கள் தடையின்றி வழங்குவது குறித்தும்;

18. சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

19. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கால்நடை மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

20. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், ஊராட்சிகளிலும், நூலகம் கட்டுவது குறித்தும்;

21. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது குறித்தும்;

22. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

23. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கால்வாய்களையும் தூர்வாருவது குறித்தும்;

24. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் (Under Cable) புதைவிட கேபிள் அமைப்பது குறித்தும்;

25. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் கேமரா அமைப்பது குறித்தும்;

26. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கண்ணகி நகர், எழில் நகர், செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்புப் பகுதியில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளை சீரமைப்பது குறித்தும்;

27. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியான பெரும்பாக்கம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பகுதியில் சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு, மின்சாரம் ஆகியவற்றை சீரமைப்பது குறித்தும்;

28. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து தெருவிளக்குளையும் எல்.இ.டி.-யாக மாற்றுவது குறித்தும்;

29. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியான புழுதிவாக்கம், மேடவாக்கம், E.C.R. மற்றும் O.M.R. பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

30. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக தனியே தொடங்குவது குறித்தும்;

31. சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள 60 வயதிற்கும் மேற்பட்ட அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்குவது குறித்தும்;

32. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

33. சோழிங்கநல்லூர் தொகுதியில் E.S.I. மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

34. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

35. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியில் சுற்று வேலிகள் அமைப்பது குறித்தும்;

36. சோழிங்கநல்லூர் தொகுதி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பகுதியான கண்ணகி நகர் பகுதியில் குடிநீர்க் குழாய்களை மாற்றுவது குறித்தும்;

37. சோழிங்கநல்லூர் எல்காட் SEZ Zone–ல் காலியாக உள்ள இடங்களில் அதிகமான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைப்பது குறித்தும்;

38. சோழிங்கநல்லூர் தொகுதியில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை அளிப்பது குறித்தும்;





39. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கண்ணகி நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு நவீன மயானம் அமைப்பது குறித்தும்;

40. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் செம்மஞ்சேரி நகர், பெரும்பாக்கம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தை சீரமைப்பது குறித்தும்;

41. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், ஊராட்சிகளிலும், சமூக நலக் கூடம் கட்டுவது குறித்தும்;

42. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம்–15 அலுவலகத்தில் வருவாய்த் துறை மற்றும் சுகாதாரத் துறைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

43. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

44. சோழிங்கநல்லூர் தொகுதியில் 14 மற்றும் 15–வது மண்டலங்களுக்கு போதுமான ஜே.சி.பி. லாரிகள் வாங்குவது குறித்தும்;

45. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட துரைப்பாக்கம் 200 அடி சாலையிலிருந்து E.C.R.–க்கு இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

46. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பக்கிங்ஹாம் கால்வாயில் அமைக்கப்பட்டுள்ள இணைப்புப் பாலங்களை விரிவுபடுத்துவது குறித்தும்;

47. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வார்டுகளிலும், ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் திரு. ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கூடலூர் தொகுதி மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

2. தமிழ்நாடு தனியார் ஒதுக்காடு பராமரிப்புச் சட்டம் 1949—ன்படி, இயற்கையாகவும் தொடர்ச்சியாகவும் 5 ஏக்கருக்கு மேல் அமைந்துள்ள நிலம் மட்டும்தான் நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

3. கூடலூர் தொகுதி, பந்தலூர், கூடலூர் வட்டங்களில் விடுபட்டவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

4. கூடலூர் தொகுதியில் யானைகளின் தாக்குதலிருந்து மக்களைப் பாதுகாப்பது குறித்தும்;

5. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வழங்குவது குறித்தும்;

6. தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்த்துவது குறித்தும்;

7. தமிழ்நாடு அரசு தேயிலை தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்களை வழங்குவது குறித்தும்;

8. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் உள்ள நிருவாகம் சீராக நடைபெறுவது குறித்தும்;





9. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் உள்ள குடியிருப்பை தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக்குவது குறித்தும்;

10. கூடலூர் தொகுதியில் உள்ள வட்டத் தலைமை மருத்துவமனையில் சிறப்பு டாக்டர்கள் நியமிப்பது குறித்தும்;

11. கூடலூர் தொகுதி, பந்தலூர், கூடலூர் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைப்பது குறித்தும்;

12. கூடலூர் தொகுதி, கூடலூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசு கல்லூரியாக்குவது குறித்தும்;

13. பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தர் நியமிப்பது குறித்தும்;

14. கூடலூர் கல்வி மாவட்டத்தில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமிப்பது குறித்தும்;

15. கூடலூர் கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சுவர், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

16. நீலகிரி மாவட்ட கூடலூர் கிளைப் பேருந்து நிலையத்தை விரிவாக்குவது குறித்தும்;

17. நீலகிரி மாவட்ட கூடலூர் கிளைப் பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கி நிறுத்தப்பட்ட பத்தேரி, வைத்திரி போன்ற பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்தும்;

18. N.H.67 சாலை, ஊட்டி முதல் கூடலூர் சாலைகள், சிறுபாலங்கள், டி.ஆர்.பாலம் ஆகியவற்றை மேம்படுத்துவது குறித்தும்;

19. கூடலூர் தொகுதியில் உள்ள இணைப்புச் சாலைகளை மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

20. கூடலூர் தொகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்து நாட்களிலும் அரிசி, பருப்பு, உளுந்து வழங்குவதை உறுதி செய்வது குறித்தும்;

21. நீலகிரி மாவட்டம், கூடலூர் ஒன்றியத்தில் உள்ள சேரங்காடு, நெலக்கோட்டை ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்தும்;

22. கூடலூர் தொகுதிக்குட்பட்ட வீடற்ற அனைவருக்கும் வீடு கட்டுவது குறித்தும்;

23. கூடலூர் தொகுதிக்குட்பட்ட பழங்குடியின மக்களை மேம்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. அணைக்கட்டு தொகுதி, பொய்கை, பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

2. அணைக்கட்டு தொகுதி, அப்துல்லாபுரம் ஊராட்சி, திருவள்ளூர் தெரு வழியாகச் செல்லும் சதுப்பேரி கால்வாய்மீது சிறுபாலம் அமைப்பது குறித்தும்;

3. அணைக்கட்டு தொகுதி, கந்தனேரி கூட்டு ரோடு அருகில் மேம்பாலம் கட்டுவது குறித்தும்;





4. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை, பாலம்பட்டு, ஜார்தான்கொல்லை ஆகிய மலைவாழ் கிராமங்களுக்கு உயர் மின்னழுத்த பாதை அமைப்பது குறித்தும்;

5. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர் வெட்டுவானம் அம்பேத்கர் நகரில் பால்வாடி பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

6. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர் வேப்பாய்கால் பகுதியில் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

7. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு பக்கவாட்டு சர்வீஸ் சாலையை அகலப்படுத்தி கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

8. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

9. அணைக்கட்டு தொகுதியில் கொய்யா சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

10. அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் அணைக்கட்டு வரை, (வழி) பொய்கை சத்தியமங்கலம், இராமாபுரம், MV பாளையம் வந்து சென்று கொண்டிருந்த தடம் எண் 13B பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

11. அணைக்கட்டு தொகுதி, குடியாத்தம் முதல் அணைக்கட்டு வரை (வழி) ஊனை வந்து சென்று கொண்டிருந்த தடம் எண் 74 பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

12. அணைக்கட்டு தொகுதி, ஒடுக்காத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துவது குறித்தும்;

13. அணைக்கட்டு தொகுதி ஏரி, கொள்ளை கிராமத்தில் இருந்து அணைக்கட்டிற்கு காலை 8.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் அரசு நகரப் பேருந்து வந்து செல்வது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2019 ஜனவரி 8

14. அணைக்கட்டு தொகுதி, ஊசுர் செம்பேடு பகுதிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

15. அணைக்கட்டு தொகுதி, வேப்பாங்கால் பகுதியில் சுடுகாட்டை விரிவுப்படுத்தி எரிமேடை அமைப்பது குறித்தும்;

16. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், திருவள்ளூர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம், தெரு மின்விளக்கு, கழிவுநீர்க் கால்வாய், சாலை வசதி, ஆரம்பப் பள்ளி, வீட்டு மனைப் பட்டா ஏனைய அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

17. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், பாகாயம் பேருந்து நிலையத்தில் பயணியர் நிழற்குடை அமைப்பது குறித்தும்;

18. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், புதுமை நகரில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலை வசதி, குடிநீர் கழிவுநீர்க் கால்வாய், தெரு விளக்கு, சமுதாயக் கூடம், பூங்காக்கள், மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் போன்றவை அமைப்பது குறித்தும்;

19. அணைக்கட்டு தொகுதி, பொய்கை மாட்டுச் சந்தைக்கு விற்பனைக்கு வரும் கால்நடைகளை ஏற்றி, இறக்கும் தளம்/மேடை அமைப்பது குறித்தும்;

20. அணைக்கட்டு தொகுதி, மோட்டூர் முதல் ஈச்சாங்காடு வரை சாலை அமைப்பது குறித்தும்;

21. அணைக்கட்டு தொகுதி, தேவி செட்டிகுப்பம் ஊராட்சி, திப்பசமுத்திரம் ஏரிக்கு செல்லும் கால்வாயில் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

22. அணைக்கட்டு தொகுதி, மேலரசன்பட்டு ஊராட்சியில் ஆதி திராவிடர் காலனி முதல் பங்களா மேடு வரை கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

23. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சியில் குச்சிபாளையம் கிராமத்திற்கு உட்பட்ட சுடுகாட்டிற்கு தார்ச் சாலை மற்றும் தடுப்புச்சுவர் அமைப்பது குறித்தும்;

24. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சி, மங்களம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

25. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சி, தட்டாக்குட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

26. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை, ஜார்தான் கொல்லை, பாலமட்டு ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

27. அணைக்கட்டு தொகுதி, மேலரசுபட்டு ஊராட்சியில் அரசு சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

28. அணைக்கட்டு தொகுதி, மேலரசுபட்டு ஊராட்சியில் குடியிருந்து வரும் இருளர் இன மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

29. அணைக்கட்டு தொகுதி, மடையம்பட்டு ஊராட்சி, சேர்ப்பாடி முதல் கங்கசானி குப்பம் வரை செல்லும் கார்டின் குறுக்கு பாலம் கட்டுவது குறித்தும்;

30. அணைக்கட்டு தொகுதி, புத்தூர் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து பைப் லைன் அமைப்பது குறித்தும்;

31. அணைக்கட்டு தொகுதி, கீழ்கிருஷ்ணாபுரம் ஊராட்சி, மேற்கு காலனிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து பைப் லைன் அமைப்பது குறித்தும்;

32. அணைக்கட்டு தொகுதி, கிராமமங்கள ஊராட்சியில் ஆதி திராவிடர் காலனிக்கு பாலாற்றில் இருந்து கிணறு வெட்டி பைப் லைன் அமைப்பது குறித்தும்;

33. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சிக்கு பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

34. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சி முதல் குனுக்குனூர் வரை சாலை வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

35. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சி, ஜார்தான்கொல்லை ஊராட்சி, பாலம்பட்டு ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்குவது குறித்தும்;

36. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சி, கட்டிப்பட்டு முதல் குடிக்கம் கிராமம் வரை மலைவாழ் மக்களுக்கு சாலை அமைப்பது குறித்தும்;

37. அணைக்கட்டு தொகுதி, இலவம்பட்டி ஊராட்சிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து பைப் லைன் அமைப்பது குறித்தும்;

38. அணைக்கட்டு தொகுதி, கீழ்கொத்தூர் ஊராட்சி, கும்பல்கொட்டாய் கிராமத்திற்கு செல்லும் கானாறு குறுக்கே சிறுபாலம் கட்டுவது குறித்தும்;

39. அணைக்கட்டு தொகுதி, ஜார்தான் கொல்லை, பாலம்பட்டு ஊராட்சியில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு தாட்கோமூலம் வங்கிக் கடன் வழங்குவது குறித்தும்;

40. அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச மோட்டார் சைக்கிள் வழங்குவது குறித்தும்;

41. அணைக்கட்டு தொகுதி, வண்ணந்தாங்கல் ஊராட்சி, கொட்டாவூர் கிராமத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்கு, உலர்களம் அமைப்பது குறித்தும்;

42. அணைக்கட்டு தொகுதி, மடையம்பட்டு ஊராட்சிக்கு தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;

43. அணைக்கட்டு தொகுதி, ஊனை, வாணியம்பாடி ஊராட்சியில் தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;



44. அணைக்கட்டு தொகுதி, கருங்காலி ஊராட்சி, பசுவநாயினிகுப்பம் கிராமத்திற்கு கருங்காலி ஆற்றில் ஆழ்துளைக் கிணறு அமைத்து பைப் லைன்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

45. அணைக்கட்டு தொகுதி, ஓதியத்தூர் ஊராட்சிக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து பைப் லைன்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

46. அணைக்கட்டு தொகுதி, ஓங்கம்பாடி ஊராட்சிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

47. அணைக்கட்டு தொகுதி, வல்லண்டராமம் ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து பைப் லைன் அமைப்பது குறித்தும்;

48. அணைக்கட்டு தொகுதி, கெங்கநல்லூர் ஊராட்சி, சந்தைப்பேட்டையில் உள்ள ஆதி திராவிடர் காலனிக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

49. அணைக்கட்டு தொகுதி, கெங்கநல்லூர் ஊராட்சிக்கு மலைசந்து கிராமத்தில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

50. அணைக்கட்டு தொகுதி, வசந்தநடை ஊராட்சி, ஒக்கனாவரம் காலனிக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

51. அணைக்கட்டு தொகுதி, விரிஞ்சிபுரம் ஊராட்சி, ஜாப்ராப்பேட்டை முஸ்லீம் காலனிக்கு பாலாற்றின் குறுக்கே ஆழ்துளைக் கிணறு அமைத்து பைப் லைன்மூலம் குடிநீர் வழங்குவது மற்றும் மேலரசுபட்டு ஊராட்சிக்கு தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;

52. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சியில் பண்ணைக்குட்டை அமைப்பது குறித்தும்;

53. அணைக்கட்டு தொகுதி, வேப்பங்குப்பம் கிராமத்தில் உள்ள துணை மின் நிலையத்தை 110 கிலோவாட் உயர்மின் அழுத்த நிலையமாக மாற்றுவது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [*2019 ஜனவரி 8*

*54.* அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

*55.* அணைக்கட்டு தொகுதி, செதுவாளைய ஊராட்சியில் வசிக்கும் நரிக்குறவர் இன மக்களுக்கு புதிய தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

*56.* அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு முதல் வேலூர் வரை விவசாயிகளின் நலன் கருதி புதிய பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;

*57.* அணைக்கட்டு தொகுதி, கீழ்கொத்தூர் ஊராட்சி முதல் கும்பல்கொட்டாயில் இருந்து வேலூர் வரை பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

*58.* அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் அமிர்தி வரை செல்லும் சாலையின் குறுக்கே நாகநதி ஆற்றில் பாலம் அமைப்பது குறித்தும்;

*59.* அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் ஒடுக்காத்தூர் செல்லும் சாலையில் வரதலம்பட்டு ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

*60.* அணைக்கட்டு தொகுதி, பென்னாத்தூர், பேரூர், வார்டு எண் *2*, அருந்ததியர் சாலை மற்றும் விநாயகர் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

*61.* அணைக்கட்டு தொகுதி, பென்னாத்தூர், பேரூர், வார்டு *3* மற்றும் *4* சப்தலிபுரம் பகுதியில் பால் உற்பத்தியாளர் சங்கம் அமைப்பது குறித்தும்;

*62.* அணைக்கட்டு தொகுதியில் மேல் அரசம்பட்டு நீர்த்தேக்க அணை (டேம்) அமைப்பது குறித்தும்;

*63.* அணைக்கட்டு தொகுதியில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

*64.* அணைக்கட்டு தொகுதியில் அணைக்கட்டில் நவீன பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;



*2019 ஜனவரி 8*] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

*65.* அணைக்கட்டு தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்துவது குறித்தும்;

*66.* அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான் கொல்லை ஆகிய மலைக் கிராமங்களுக்கு தார்ச்சாலை அமைப்பது குறித்தும்;

*67.* அணைக்கட்டு தொகுதி, வேலூர் ஒன்றியம், சதுப்பேரி பெரிய ஏரியைத் தூர்வாரி கரைகளை சீரமைப்பது குறித்தும்;

*68.* அணைக்கட்டு தொகுதி, சென்னை—பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கந்தனேரி ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

*69.* அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசு பள்ளிகளையும் சீரமைப்பது குறித்தும்;

*70.* அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான் கொல்லை ஆகிய மலை கிராமங்களுக்கு புதிய மின்மாற்றிகள் அமைப்பது குறித்தும்;

*71.* அணைக்கட்டு தொகுதியில் விடுபட்ட ஊராட்சிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

*72.* அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

*73.* அணைக்கட்டு தொகுதியில் உள்ள அனைத்து நீர்ப்பிடிப்பு பகுதிகளான குளம், ஏரி, நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

*74.* அணைக்கட்டு தொகுதி, பெண்ணாத்தூரில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

*75.* அணைக்கட்டு தொகுதி, அரியூர் நூற்பாலையில் மீண்டும் உற்பத்தி தொடங்குவது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2019 ஜனவரி 8

76. அணைக்கட்டு தொகுதி, அரியூரில் உள்ள தங்கக் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பயணியர் விடுதி கட்டுவது குறித்தும்;

77. அணைக்கட்டு தொகுதியில் உள்ள தார்ச்சாலைகளை புதிய தார்ச்சாலைகளாக மாற்றுவது குறித்தும்;

78. அணைக்கட்டு தொகுதி, மேல்மொணவூர் முதல் திருமணி வரை பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

79. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்தும்;

80. அணைக்கட்டு தொகுதியில் அனைத்து ஊராட்சிகளிலும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள அனைத்து தொகுப்பு வீடுகளையும் புதியதாக கட்டுவது குறித்தும்;

81. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் தென்னை மர ஆராய்ச்சி நிலையம் மற்றும் தென்னை நார் உற்பத்திக் கூடம் அமைப்பது குறித்தும்;

82. அணைக்கட்டு தொகுதி, வேலூர் ஒன்றியம் மேல்மொணவூரில் ஒருங்கிணைந்த நவதானிய விற்பனை மையம் அமைப்பது குறித்தும்;

83. அணைக்கட்டு தொகுதி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

84. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் வட்டார மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

85. அணைக்கட்டு தொகுதி, தேசிய நெடுஞ்சாலையில் பள்ளிகொண்டா சுங்கசாவடி அருகில் சுற்றுவட்ட சாலை அமைப்பது குறித்தும்;

86. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டை தலைமையிடமாகக் கொண்டு சார்க்-கருவூலம் அமைப்பது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

87. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

88. அணைக்கட்டு தொகுதி, அடுக்கம்பாறையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப படுக்கை வசதி கொண்ட கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

89. அணைக்கட்டு தொகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை உயர்சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

90. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

91. அணைக்கட்டு தொகுதி, அடுக்கம்பாறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

**திரு. அ. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கூட்டேரிப்பட்டு கூட்டுப்பாதை அமைப்பது குறித்தும்;

2. மயிலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டில் ஆம்புலன்ஸ் வசதியுடன் ஒரு அவசர சிகிச்சை மையமும், ஒரு தீயணைப்பு நிலையமும் அமைப்பது குறித்தும்;

3. மயிலம் ஒன்றியம், மயிலம் ஊராட்சியில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

4. மயிலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும், நெடிமோழியனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையும், ஆலகிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

5. வல்லம் ஒன்றியம், கீழையூர் மணியப்பட்டில் இருந்து கொங்கரப்பட்டு செல்லும் சாலையில் உள்ள சங்கராபரணி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

6. வல்லம் ஒன்றியம், சேர்விளாகம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட காந்திநகர் பகுதியில் திறந்தவெளி கிணறு வெட்டி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

7. வல்லம் ஒன்றியம், கடுகுப்பட்டு மேல்சித்தாமூர் செல்லும் சாலையில் உள்ள தொண்டி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

8. ஒலக்கூர் ஒன்றியம், கொடியம் ஊராட்சியில் உள்ள பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

9. மயிலம் ஒன்றியம், நெடிமோழியனூர் கிராமத்தையும், வல்லம் ஒன்றியம் நெகனூர், புதூர் கிராமத்தையும் தனித்தனி ஊராட்சிகளாகப் பிரிப்பது குறித்தும்;

10. மயிலம் ஒன்றியம், வீடூர் அணையை பழைய கொள்ளளவு எட்டும் வகையில் ஆழப்படுத்துவது குறித்தும்;

11. வல்லம் ஒன்றியம், வல்லம் ஊராட்சியில் வேளாண்மை விற்பனை மையம் ஏற்படுத்துவது குறித்தும்;





12. மயிலம் ஒன்றியம், பெரியதச்சூர் ஊராட்சியில் தீயணைப்பு நிலையமும், கால்நடை மருத்துவமனையும் அமைப்பது குறித்தும்;

13. ஒலக்கூர் ஒன்றியம், புறங்கரை ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. ஒலக்கூர் ஒன்றியம், அரசு நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

15. மயிலம் அகூர் அரசு ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

16. மயிலம் ஒன்றியம், ரெட்டணை ஊராட்சி, நாநேரிக்குப்பம் அரசு ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

17. ரெட்டணை ஊராட்சி அருகே உள்ள சங்கராபரணி ஆற்றின் ஆக்கிரமிப்புகளை அகற்றி இருபக்கக் கரைகளை பலப்படுத்தி புதிய நீர் ஒழுங்கிகள் (Shutter) அமைப்பது குறித்தும்;

18. வல்லம் ஒன்றியம், தென்புத்தூர் அருகேயுள்ள தொண்டி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. ஐ.பி. செந்தில்குமார்] [2019 ஜனவரி 8

"1. கொடைக்கானல் நகரத்தில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. கொடைக்கானலில் மின் மயானம் அமைப்பது குறித்தும்;

3. பழனி, சிறுநாயக்கர் குளம் மற்றும் வையாபுரி ஆகிய குளங்களைத் தூர்வாரி குளக்கரை நடைபாதைகள் அமைப்பது குறித்தும்;

4. பழனியில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. பச்சையாற்றின் குறுக்கே புதியதாக ஒரு அணை கட்டுவது குறித்தும்;

6. வரதமாநதியின் மேற்பகுதியில் புதியதாக ஒரு அணை கட்டுவது குறித்தும்;

7. ஆயக்குடி பேரூராட்சியில் பழங்கள் பதப்படுத்தும் நிலையம் அமைப்பது குறித்தும்;

8. பழனியில் புது தாராபுரம் சாலையில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

9. யானை இறங்கும் பாதைகளைக் கண்டறிந்து அகலமான, உயரமான கான்கிரீட் அகழிகள் மற்றும் சோலார் வேலி அமைத்து விவசாயிகளுக்கு மானியத்துடன் கடனுதவி வழங்குவது குறித்தும்;

10. திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

11. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் நடந்து செல்லும் வகையில் திருஆவினன்குடியில் தென்புற வாசலிலிருந்து சன்னதி வீதி வழியாக பாதவிநாயகர் கோவில் வரை சிமென்ட் மேற்கூரை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.



2019 ஜனவரி 8]

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருவள்ளூர் தொகுதி, திருத்தணி முதல் திருவள்ளூர் வரை ராமஞ்சேரி, பூண்டி வழியாக பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

2. திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

3. திருவள்ளூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை மேம்படுத்தி குடிநீர் விநியோகம் செய்வது குறித்தும்;

4. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

5. திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் மாம்பழச்சாறு தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

6. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

7. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி வட்டத்தைப் பிரித்து புதிய வட்டம் அமைப்பது குறித்தும்;

8. திருவள்ளூர் தொகுதி, பூண்டி, கடம்பத்தூர் மற்றும் திருவாலங்காடு ஒன்றியங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தரமான உணவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

9. திருவள்ளூர் தொகுதி, பட்டரைபெரும்புதூர், கனகம்மாசத்திரம், திருவாலங்காடு, பேரம்பாக்கம் மற்றும் கடம்பத்தூர் ஆகிய பகுதிகளில் கால்நடை தீவன பண்ணை அமைப்பது குறித்தும்;

10. திருவள்ளூரில் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

11. திருவள்ளூரில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

12. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், பனப்பாக்கம் ஊராட்சியில் உள்ள ஏரியைத் தூர்வாரி வரத்துக் கால்வாய்களை சீரமைப்பது குறித்தும்;

13. கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேடு ஏரியைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

14. கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் கிராமத்தில் உள்ள ஏரியைத் தூர்வாரி வரத்துக் கால்வாயை சீரமைப்பது குறித்தும்;

15. திருவள்ளூர் நகரம் முதல் பிளேஸ்பாளையம் வரை பூண்டி, நம்பாக்கம் வழியாக புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்துவது குறித்தும்;

16. திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு, பழையனூர், மாவூர், பெரியகளக்காட்டூர் ஆகிய ஏரிகளைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

17. திருவள்ளூர் நகரில் உள்ள உழவர் சந்தையை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

18. திருவள்ளூர் நகராட்சிக்கு வெள்ளியூரிலிருந்து திருவள்ளூர் வரை குடிநீர் கொண்டு செல்ல புதிய பைப் லைன் அமைப்பது குறித்தும்;

19. பூண்டி ஒன்றியம், பாண்டூர் ஊராட்சி, கனகவல்லிபுரத்தில் 110 KVA துணை மின்நிலையப் பணியினை விரைவுபடுத்துவது குறித்தும்;

20. திருவள்ளூர் முதல் காக்களூர் வரை நடைபெறும் புறவழிச்சாலைப் பணியினை விரைந்து முடிப்பது குறித்தும்;





21. திருவள்ளூரிலிருந்து அரண்வாயல்குப்பம், கொப்பூர், பாப்பரம்பாக்கம், மேளூர் குப்பம் வழியாக பூந்தமல்லி வரை மாநகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

22. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், நெமிலி–அகரம் வரை ஒன்றியச் சாலை அமைப்பது குறித்தும்;

23. கடம்பத்தூர் முதல் செஞ்சிபனப்பாக்கம் வரை உள்ள ஒன்றியச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

24. NH–204–திருப்பாச்சூரில் உயர் கோபுர மின்விளக்கு அமைப்பது குறித்தும்;

25. திருவாலங்காடு ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வாருவது குறித்தும்;

26. கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் கிராமத்தில் உள்ள ஸ்ரீதிரிபுரந்தக சுவாமி திருக்கோயில் குளம் சீரமைப்பது குறித்தும்;

27. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்ந்த திருப்பாச்சூரில் அமைந்துள்ள வாசீஸ்வர் திருக்கோயில் திருக்குளத்தை சீரமைப்பது குறித்தும்;

28. திருவள்ளூரில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்தும்;

29. திருவள்ளூர் நகரின் அருகே உள்ள காக்களூர் ஏரியைத் தூர்வாரி படகுக் குழாம் அமைத்து சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்துவது குறித்தும்;

30. திருவள்ளூர் தொகுதியில் உள்ள குக்கிராமங்களில் உள்ள வழித்தடங்களில் பேருந்து வசதி மீண்டும் இயக்குவது குறித்தும்;

31. திருவள்ளூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த மாவட்ட பேருந்து நிலைய திட்டப் பணிகள் அமைப்பது குறித்தும்;

[திரு. வி.ஜி. ராஜேந்திரன்] [2019 ஜனவரி 8

32. திருவள்ளூர் தொகுதி, வெங்கத்தூர் ஊராட்சி, மணவாளநகர்–திருவள்ளூர் இரயில் நிலையத்தை இணைக்கும் தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைப்பது குறித்தும்;

33. திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், சத்தரை, ஏகாட்டூர் ஆகிய பகுதிகளில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;

34. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு இரயில் நிலையம் அருகில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

35. திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் பேருந்து நிலையத்தில் சிமென்ட் தளம் அமைப்பது குறித்தும்;

36. பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தில் நீரின் கொள்ளளவை அதிகப்படுத்துவது குறித்தும்;

37. திருவள்ளூர் நகரில் வைத்ய ஸ்ரீவீரராகவ சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதி கட்டித் தருவது குறித்தும்;

38. திருவள்ளூர் இரயில் நிலையத்தில் சுரங்கப்பாதை அமைப்பது குறித்தும்;

39. திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதி மற்றும் குளியலறை கட்டுவது குறித்தும்;

40. கனகம்மாசத்திரம் முதல் திருவள்ளூர் வரை திருவாலங்காடு வழியாக புதிய பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;

41. திருவள்ளூர் நகராட்சியில் அனைத்துப் பூங்காக்களையும் சிறப்புத் திட்டம்மூலம் சீரமைப்பது குறித்தும்;

42. திருவள்ளூர் நகரில் புறவழிச்சாலை அமைக்கும் பணியினை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

43. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், லட்சுமிவிலாசபுரத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டுவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

44. திருத்தணி–திருப்பதி தேசிய நெடுஞ்சாலை பட்டரைபெரும்புதூர் அருகே திருவள்ளூர் NH–204–ல் புதிய மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

45. திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதலாக புதிய அவசர ஊர்திகள் வழங்குவது குறித்தும்;

46. கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

47. திருவள்ளூர் நகரில் 22–வது வார்டு, NGO காலனியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

48. பூண்டி ஒன்றியம், பூண்டி ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

49. திருவள்ளூர் முதல் திருத்தணி வரை உள்ள கிராமங்கள் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை NH–204–ல் வேகத்தடை அமைப்பது குறித்தும்;

50. திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் குண்டும் குழியுமாக உள்ள நரசிங்கபுர கிராமச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

51. திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கான சிறப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அனைத்து மருத்துவ சோதனைகளும் எடுத்து, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய நவீன கருவிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

52. திருவாலங்காடு ஒன்றியம், கடம்பத்தூர் ஒன்றியம் மற்றும் பூண்டி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளில் மழை பொய்த்ததன் காரணத்தால் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதால் அனைத்துக் கிராமங்களிலும் ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்தும்;

53. திருவள்ளூர் நகராட்சியில் வெள்ளியூர் குடிநீர்த் திட்டத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதால் மாற்றுத் திட்டம்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

[*2019 ஜனவரி 8*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

**திரு. அ. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. வேலூர் மாவட்டத்தினை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூர் நகரை தலைமையகமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது குறித்தும்;

2. திருப்பத்தூர் நகர போக்குவரத்துக் காவல் பிரிவிற்கு புதியதாக போக்குவரத்துக் காவல் நிலையக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

3. திருப்பத்தூர் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மதுவிலக்குப் பிரிவு காவல் நிலையத்திற்கு புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

4. திருப்பத்தூர் கல்வி மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாதுமலை நெல்லிவாசல் வனத் துறை உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட மின் பகிர்மான வட்டங்களின் பகுதிகளில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை மாற்றுவது குறித்தும்;

6. திருப்பத்தூர் கோட்டம், வெங்களாபுரம் மின் பகிர்மான வட்டம், மாடப்பள்ளி ஊராட்சிப் பகுதிக்கு 24 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்குவது குறித்தும்;

7. திருப்பத்தூர் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்தும்;



*2019 ஜனவரி 8*] [திரு. அ. நல்லதம்பி]

8. கந்திலி மற்றும் திருப்பத்தூர் ஒன்றியங்களுக்கு உட்பட்ட ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்திட கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்தும்;

9. கந்திலி ஒன்றியம், கொரட்டி மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

10. திருப்பத்தூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி மையம் துவங்குவது குறித்தும்;

11. திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

12. திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட அரசு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

13. திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட துணை மின் நிலையங்களில் தேவையான பணியாளர்கள் நியமிப்பது குறித்தும்;

14. திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட வருவாய் வட்டம் வாரியாக விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

15. ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாதுமலையின் புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு ஊராட்சிகளை உள்ளடக்கி தனி ஊராட்சி ஒன்றியமாக அமைப்பது குறித்தும்;

16. திருப்பத்தூர் நகராட்சி, TMC காலனி பகுதியில் உள்ள குளத்தினைத் தூர்வாருவது குறித்தும்;

17. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சியுடன் புதியதாக சேர்க்கப்பட்ட வார்டுகளுக்கு மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

18. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரை மையமாகக் கொண்டு கூட்டுறவுத் துறைமூலம் மாடப்பள்ளி கிராமத்தில் பருத்தி நூற்பாலை அமைப்பது குறித்தும்;

[திரு. அ. நல்லதம்பி] *[2019 ஜனவரி 8*

*19.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தகுதி வாய்ந்தவர்களுக்கு முதியோர், ஊனமுற்றோர், விதவை உதவித்தொகை வழங்குவது குறித்தும்;

*20.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை அரங்கத்துடன் கூடிய தனி வார்டு அமைப்பது குறித்தும்;

*21.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட காவல் நிலையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி, கூடுதலான போக்குவரத்துக் காவலர்களை நியமிப்பது குறித்தும்;

*22.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள கந்திலி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

*23.* கந்திலி ஒன்றியம், கொரட்டி மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்தும்;

*24.* கந்திலி ஒன்றியம், சுந்தரம்பள்ளி, பேராம்பட்டு, குரும்பேரி பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

*25.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பணிமனையில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

*26.* கிருஷ்ணகிரி அணை பாசனநீரை கந்திலி ஒன்றியம், காக்கங்கரை ஏரியில் சேமித்து வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த கால்வாய் அமைப்பது குறித்தும்;

*27.* வாணியம்பாடி முதல் திருப்பத்தூர் வழியாக சேலம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையை சீரமைப்பது குறித்தும்;

*28.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பிற்கான நிலுவைத் தொகையினை விவசாயிகளுக்கு வழங்குவது குறித்தும்;



*2019 ஜனவரி 8]* [திரு. அ. நல்லதம்பி]

*29.* வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மடவாளம் கிராமத்தில் உள்ள அங்கநாதீஸ்வரர் ஆலயத்திற்கு அறநிலையத் துறை மூலமாக திருப்பணி முடித்து குடமுழுக்கு செய்வது குறித்தும்;

41. திருவையாறு 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாக தரம் உயர்த்துவது குறித்தும்;

42. பெரமூர் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

43. பூதலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

44. திருவையாறு வட்ட அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமித்து மருத்துவ உபகரணங்கள் வழங்கி கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

45. திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 42 ஊராட்சிகள், திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 8 ஊராட்சிகள் மற்றும் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் 5 ஊராட்சிகளை உள்ளடக்கி இயங்கி வரும் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் குடிநீர்க் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்தும்;

46. திருக்காட்டுப்பள்ளி வட்ட அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமித்து மருத்துவ உபகரணங்கள் வழங்கி கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;



2019 ஜனவரி 8] [திரு. துரை. சந்திரசேகரன்]

47. திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், சித்திரக்குடி முதல் பள்ளியேறி வரை 20–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

48. திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி மற்றும் மேலத்திருப்பூந்துருத்தி ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

49. திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

50. திருவையாறு தமிழிசை மன்றத்திற்கு ஆண்டுதோறும் அரசு உதவியாக ரூபாய் 5 இலட்சம் வழங்குவது குறித்தும்;

51. திருவையாறு தொகுதி, பூதலூரில் நவீன அரிசி ஆலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 2–1–2019 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதிகை தந்த தென்றல்! புடம் போட்ட தங்கம்! புரட்சியில் விளைந்த சுதந்திரம்! பூமியில் பிறந்த புண்ணியம்! கடையேழு வள்ளல்களின் வாரிசு! கடைக்கோடி ஏழையையும் வாழ்விக்கும் கருணை மழை! மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

இலை ஆட்சி ஒன்றுதான் தொலைநோக்குத் திட்டங்களை அளிக்கும் என்று மக்கள் மலைபோல நம்புகிறார்கள்.

வணங்க வந்தோர் பசி போக்க அன்னதானத் திட்டம்; குறைந்த விலையில் தரமான உணவிற்கு அம்மா உணவகம்; கருவில் இருக்கும் சிசுவிற்கு ஊட்டச்சத்து; பிறக்கும் குழந்தைகளுக்கு அம்மா பரிசுப் பெட்டகம்; (மேசையைத் தட்டும் ஒலி) பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் வங்கி; தலைமுறையை உருவாக்கும் தாய்மார்களுக்கு அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் குழந்தைகளுக்கு பலவகை கலவைச் சாதம், 14 வகையான கல்வி உபகரணங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பால்வாடியிலிருந்து பல்கலைக்கழகம் வரை பயிலும் ஏழை மாணவர்களுக்கு ஏற்றமிகு திட்டங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் பசுமைப் புரட்சியால் 5 முறை க்ருஷி கர்மான் விருதுகள், வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) வீடு இல்லாதோருக்குப் பசுமை வீடுகள்; ஆதரவற்றோருக்கு நான் இருக்கின்றேன் தாயாக என்று நம்பிக்கை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இன்னும் ஏராளமான திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்நாடகம் அடைத்து வைத்திருந்த காவேரித் தாயை மீட்டு, விவசாயத்திற்குப் புத்துயிர் கொடுத்ததும், கடலோர மீனவர்களின் கண்ணீர் துடைத்து, உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளித்ததும், மின்சாரப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியதும், (மேசையைத் தட்டும் ஒலி) நிலத்தடி நீரை நிரந்தரமாய் உயர்த்தி, அடிப் பம்புகளிலும் அருவி போல் நீர் கொட்ட, மழைநீர் சேகரிப்புத் திட்டம் வழங்கியதும், (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த 'தாய்த் திட்டம்' செயல்படுத்தியதையும்; அம்மா மருந்தகம்; அம்மா உப்பு; அம்மா குடிநீர்; அம்மா சிமெண்ட் என்று அடுக்கடுக்கானத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதையும், யாரும், எங்கேயும், எந்தக் காலத்திலும், மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பிற்பகல் 12–15

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசியல் பாசறையிலும், ஆட்சிப் பணிகளிலும் பயிற்சி பெற்றவர்கள் நாங்கள் என்பதால், அம்மா அவர்கள் வழியில் மக்கள் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வகுக்கும் மக்கள் நலத் திட்டங்கள் அனைத்திலும் அம்மாவின் 'ஆத்மா' இருக்கிறது. அதனால்தான், அகிலமே நமது திட்டங்களை முன்னோடித் திட்டங்களாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 2–1–2019 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு துணை சபாநாயகர் திரு. பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை எடுத்துக்கூறியுள்ளார்கள். பாராட்டியும், குறை கூறியும் பேசிய உறுப்பினர்கள் என அனைத்து உறுப்பினர்களுக்கும் முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

அதாவது, 'குற்றத்தை ஆராய்ந்து யார் பக்கமும் சாயாமல், நடுநிலையில் நின்று குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை நல்லறிஞர்களோடு ஆலோசித்துத் தருவதே நல்ல நீதிமுறையாகும்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கைக் காக்கும் வகையில், நற்பணி செய்து மக்களை அச்சமின்றி வாழ வைக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

காவல் துறையை நவீனப்படுத்தியும், அவர்களது திறனை மேம்படுத்தியும், அவர்களுக்கு நவீன சாதனங்கள் வழங்கியும், அவர்களது மன வலிமை மேம்பட பயிற்சிகள் வழங்கியும் வருவதால், சாதிக் கலவரங்கள்; தீவிரவாதம்; மதவாதம்; அடிப்படைவாதம்; தொழிலாளர் கிளர்ச்சி போன்றவை பெருமளவில் குறைந்துள்ளன.

காவல் துறையை நவீனப்படுத்துவதன் ஒரு பகுதியாக எம். பாஸ்போர்ட் செயலி; சிசிடிஎன்எஸ் திட்டம்; நவீன

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

தொழில்நுட்பத்துடன் மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு மையம்; எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் புத்துணர்வுப் பயிற்சி அளிக்கும் திட்டம்; உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் பொருத்தும் திட்டம் போன்ற திட்டங்களை அரசு செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கைக் கண்காணிப்பதற்காக உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் பொருத்துவதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னிலையில் உள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், சமீபத்தில் நடந்த பெரும்பாலான குற்றங்கள் உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்னையில் செயல்பாட்டில் உள்ள இரண்டு இலட்சத்திற்கும் மேலான கேமராக்கள் அதிக அளவிலான குற்றங்களை மிக விரைவில் கண்டுபிடிப்பதற்கு மிகவும் உதவிகரமாக உள்ளன.

திருக்கோயில்களில் உள்ள தொன்மை வாய்ந்த உலோகத் திருமேனிகள் மற்றும் கற்சிலைகளைப் பாதுகாக்க, 308.70 கோடி ரூபாய் செலவில் ஒரு திருக்கோயிலுக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் 3,087 திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டிலேயே முதன்முறையாக காவல் துறையினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க நிம்ஹான்ஸ் (NIMHANS) நிறுவனத்துடன் இணைந்து ‘காவலர் நிறைவாழ்வு பயிற்சி’ என்ற உளவியல்ரீதியான பயிற்சித் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு அறிமுகம் செய்து, செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சியினை வழங்க 254 காவல் அதிகாரிகளும், 208 மனநல ஆலோசகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பெங்களூருவில் உள்ள நிம்ஹான்ஸ் நிறுவனத்தில் பயிற்சி வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 50 இடங்களில் நடத்தப்படும் இப்பயிற்சியில், இதுவரை 10,000 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும், அவர்களது குழந்தைகள் மற்றும் உறவினர்கள் சுமார் 9 ஆயிரம் நபர்களும் பங்கு கொண்டு பயனடைந்துள்ளனர்.

காவல் ஆளிநர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் இடையே, இப்பயிற்சி பரஸ்பர நல்லுணர்வு மற்றும் பணியிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டில் சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 511 உதவி ஆய்வாளர்களும், 6 ஆயிரத்து 140 காவல் ஆளிநர்களும் என மொத்தம் 6 ஆயிரத்து 651 நபர்கள் சீருடைப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு காவல் துறை, ‘நாட்டிலேயே சிறந்த படை’ என்ற பெயர் பெற்று விளங்குகின்றது. இதற்குச் சான்றாக, அண்மையில்



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

‘இந்தியா டுடே’ பத்திரிகை, ‘சட்டம்–ஒழுங்கில் சிறப்பாகச் செயல்படும் மாநிலம் தமிழ்நாடு’ என்பதற்காகவும், (மேசையைத் தட்டும் ஒலி) குறுகிய காலத்தில் இந்தச் சாதனை செய்ததற்காகவும், தனித் தனியாக இரண்டு விருதுகளை வழங்கியுள்ளது.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த மனித வளத்தினையும், தடையில்லா மின்சாரம் மற்றும் வலிமையான உட்கட்டமைப்புகளையும் நமது மாநிலம் கொண்டுள்ளதால், முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிலேயே அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்டும், தொழிற்சாலை வேலைவாய்ப்புகளில் முதலாவது மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.

2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம், முதலீட்டை செய்ய வரும் நிறுவனங்களுக்கு 30 நாட்களுக்குள் ஒற்றைச் சாளர முறையில் அவர்களுக்கு வேண்டிய அனுமதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், 30 நாட்களுக்கு மேலாகும் பட்சத்தில், தானாகவே அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும் ஷரத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 46 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 28 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டும், மீதமுள்ள விண்ணப்பங்களில், 3 விண்ணப்பங்களுக்குக் கூடுதல் விவரங்கள் கோரப்பட்டும், இதர விண்ணப்பங்கள் பரிசீலனையிலும் இருந்து வருகின்றன.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015–ன் மாபெரும் வெற்றியினைத் தொடர்ந்து, உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 ஜனவரியில் நடைபெறவுள்ளது. இதுவரை 27 தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் புதிய விரிவாக்கத் திட்டங்களுக்கான முதலீடுகளைச் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிறுவனங்கள் சுமார் 50 ஆயிரத்து 444 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் செய்யவிருப்பதால், சுமார் 50 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–1–ல், 35 கி.மீ. நீளத்திலான வழித்தடங்களில் பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது. மீதமுள்ள AG–DMS முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான பணிகள் முடிவடைந்து விரைவில் துவக்கி வைக்கப்பட உள்ளன. திருவொற்றியூர்–விம்கோ நகர் வரையிலான நீட்டிப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மக்கள் நலன்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

கருதி, மெட்ரோ இரயில் திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்யும் வகையில், மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் *2*–ல், மாதவரம் முதல் OMR சாலை சிப்காட் வரையும், கலங்கரைவிளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலை வரையும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையும் என *3* புதிய வழித்தடப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டம் *2*–ல், *52* கி.மீ. நீளத்திலான முன்னுரிமை வழித்தடப் பகுதிகளுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவி வழங்குகிறது. இப்பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. கோயம்புத்தூர் நகருக்கும் மெட்ரோ இரயில் பணிகளுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, புதிய சுற்றுச்சூழல் கொள்கை, மின் ஆளுமைக் கொள்கை, சூழியல் சுற்றுலாக் கொள்கை, தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை, மாநில வனக் கொள்கை, உணவுப் பதப்படுத்துதல் கொள்கை என பல்வேறு கொள்கைகளை இந்த நிதியாண்டில் வகுத்து, நடைமுறைப்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் முதலீடுகளுக்கு தகுந்த சூழ்நிலைகளை மேம்படுத்தவும், வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்வதை எளிதாக்கவும், அதற்கென்று இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் தனியே ஒரு இணையதள ஒற்றைச் சாளரத் தகவு ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலம் புதிய முதலீடுகளுக்கு விரைவாகவும், எளிதாகவும் இசைவு வழங்கப்படுகிறது. இதுவரை *329* விண்ணப்பங்கள் பெறப்பட்டு, *230* விண்ணப்பங்களுக்கு *30* நாட்களுக்குள் அனுமதி அளிக்கப்பட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) இதர விண்ணப்பங்கள் பரிசீலனையிலும் இருந்து வருகின்றன. இதனால் *15* ஆயிரத்து *895* நபர்களுக்கு புதியதாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டு மயமாக்கவும், வெளிநாட்டின் ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும் ஒற்றைச் சாளர அமைப்பாக “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு” ஒன்று உருவாக்க உத்தரவிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘Enchanting தமிழ்நாடு’ என்ற தமிழ்நாடு சுற்றுலாத் துறையின்



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தாரக மந்திரம், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஒட்டுமொத்தமாக ஈர்த்ததன் காரணமாக, நாட்டிலேயே அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிந்த முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், இந்தியா டுடே பத்திரிகை சுற்றுலாவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டைத் தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பான சூழல் இருப்பதும், பழமைவாய்ந்த கோயில்களும், புராதனத் தலங்களும், தமிழ்நாட்டின் கலாச்சாரமும் உலக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிறது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாடு திருக்கோயில்கள், வழிபாட்டிற்கு மட்டுமல்ல, கலை மற்றும் கலாச்சாரக் கருவூலங்களாகவும் திகழ்கின்றன. திருக்கோயில்களைப் பாதுகாக்கும் மகத்தான கடமையை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் பல்வேறு திட்டங்களை அறிவித்தும் செயல்படுத்தியும் வருகிறது. அந்த வகையில், சென்ற *2017*–*2018* ஆம் ஆண்டில் *765* திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த ஆண்டும் தொடர்ந்து குடமுழுக்குகள் நடத்தப்படும். இவ்வாறு பல்வேறு திருப்பணிகள் செய்து வருவதினாலும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளை நமது மாநிலம் அதிக அளவில் ஈர்த்துள்ளது.

*பிற்பகல் 12–25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.”

அதாவது, தன்னால் முடிந்த இடத்தில் எல்லாம் சிறப்பாகச் செயல்பட வேண்டும். இயலாத இடத்திலும் வேறு வழிகளை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப இருண்ட தமிழகமாக இருந்த நமது மாநிலத்தை மின்மிகை மாநிலமாக மாற்றியே தீருவேன் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) உறுதியோடு செயல்பட்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், தமிழ்நாடு இன்று மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்து சிறப்பான சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

இந்நிலை தொடர்வதற்கு ஏற்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரையில், எண்ணூர் சிறப்புப் பொருளாதார அனல் மின் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–3, எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம், உப்பூர் அனல் மின் திட்டம், உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–1, குந்தா நீரேற்று மின் திட்டம் என மொத்தம் 6,200 மெகா வாட் திறன்கொண்ட மின் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுமட்டுமின்றி, பசுமை எரிசக்தி முயற்சியில் 11,750 மெகா வாட் எரிசக்தி மின் நிறுவு திறனுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, பருவமழை பொய்த்து, மேட்டூர் அணை திறந்துவிட தாமதம் ஏற்படும்போதெல்லாம், இலட்சக்கணக்கான டெல்டா விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கு தொகுப்புத் திட்டத்தை அறிவித்து வருகிறது.

அதுமட்டுமின்றி, பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, 2016–2017 ஆம் ஆண்டில் அதிக அளவிலான காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை பெற்றதில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றது. அதாவது, கடந்த 2016–2017 ஆம் ஆண்டில் மட்டும் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து 3 ஆயிரத்து 526 கோடியே 78 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை ஒப்பளிக்கப்பட்டு, வேளாண் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, 2017–2018 ஆம் ஆண்டில் ஆயிரத்து 8 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை இதுவரை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் இதுவரை 16 இலட்சத்து 39 ஆயிரம் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டைவிட 2 இலட்சத்து 41 ஆயிரம் விவசாயிகள் கூடுதலாக இந்த ஆண்டு பதிவு செய்துள்ளனர் என்ற விவரத்தையும் இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் மிகப் பெரிய உணவுப் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு உணவு பதப்படுத்தும்



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கொள்கை ஒன்றினை மாண்புமிகு அம்மாவின் அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. இதுமட்டுமின்றி, கிராம அளவில் குறிப்பிட்ட விளைபொருட்களுக்கான உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறான பல்வேறு முயற்சிகளினால், தமிழ்நாடு இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் விதமாக, கடந்த 7 ஆண்டுகளில் 5 முறை உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னைக் கடந்து சாதனை புரிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசின் உயர் விருதான க்ருஷி கர்மான் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, பிற மாநிலங்களுக்கும் உணவு வழங்கி வருவது நமது டெல்டா மாவட்டங்கள்தான். அந்த டெல்டா மாவட்ட விவசாயிகள் நீராதாரத்தைப் பெறுவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவேரிப் பிரச்சினையில் நடத்திய சட்டப் போராட்டத்தில், கடந்த ஆண்டு மாண்பமை உச்ச நீதிமன்றம் தன்னுடைய இறுதித் தீர்ப்பை வழங்கியது. அத்தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டது. இது டெல்டா விவசாயிகளின் நிலம் மட்டுமல்ல, மனதையும் குளிரச் செய்தது என்றால் அது மிகையாகாது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரியில் உள்ள தமிழ்நாட்டின் உரிமை இதன்மூலம் நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரணமாக, மேட்டூர் அணை 4 முறை தன்னுடைய முழு கொள்ளளவினை எட்டியதுடன், (மேசையைத் தட்டும் ஒலி) 23–4–2018 முதல் 6–9–2018 வரையிலான காலத்தில், 30 நாட்கள் முழு கொள்ளளவிலேயே இருந்துள்ளது. காவேரி நீரினை முறையாக டெல்டா மாவட்ட பாசனத்திற்குப் பயன்படுத்துவதைக் கண்காணிக்க ஓர் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

பிற்பகல் 12–30

1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியின்மூலம் அத்திக்கடவு–அவிநாசித் திட்டத்தைச் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை–ராஜநேரி தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத் திட்டம், பெரம்பலூர் மாவட்டம், மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் ஆகிய பணிகள் இறுதிக்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

கட்டத்தை எட்டியுள்ளன. இதுதவிர, பல்வேறு அணைகளில் தூர்வாரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, அணைகளின் கொள்ளளவினை மீளப் பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ஏரிகள் மற்றும் அணைகளில் படிந்துள்ள வண்டல் மண், விவசாயிகளுக்கு தங்கள் மண் வளத்தினைப் பெருக்கிக்கொள்ள விலை இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

முன்னெப்போதும் இல்லாத அளவில், 2018 ஆம் ஆண்டில் மிக அதிகமாக, அதாவது 30 நாட்கள் காவேரியில் வெள்ள நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டது. இதன் காரணமாக, 182 ஆண்டுகள் பழமையான கொள்ளிடம் அணைக்கட்டின் மதகுகள் சேதமடைந்தன. சேதமடைந்த கொள்ளிடம் கதவணையை 24–8–2018 அன்று சக அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் நான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டேன். காவேரி ஆற்றில் பாசனத்திற்காக நீர் வெளியேற்றுவதை மீளப்பெற, கொள்ளிடம் ஆற்றில் மேலணையின் பாதிக்கப்பட்ட பகுதியில் தற்காலிக சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, காவேரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு நீர் வழங்கப்பட்டது. மேலும், புதிய கதவணையின் கட்டுமானத்திற்கு 2 ஆண்டுகள் தேவைப்படும் என்பதால், தற்போதுள்ள நீரொழுங்கியினைப் பலப்படுத்த சுமார் 39 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நீரொழுங்கி அமைக்கவும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைகள் கட்டுவது என 2017–2018 ஆம் ஆண்டு என்னால் அறிவிக்கப்பட்டது. இதில் 2017–2018 ஆம் ஆண்டில் 12 தடுப்பணைகள் 51.51 கோடி ரூபாய் மதிப்பிலும், 2018–2019 ஆம் ஆண்டில் இதுவரை 59 தடுப்பணைகள் 244.89 கோடி ரூபாய் மதிப்பிலும் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவி பெற்று பாசனம் மற்றும் குடிநீர்த் திட்டங்களைத் தயாரித்து நீர்வள ஆதாரங்களை மேலும் செம்மைப்படுத்த, "தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நதிகளைச் சீரமைத்தல் கழகம்" என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு அரசு முதன்மைச் செயலாளர் நிலையில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன.



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மத்திய அரசின் அணைப் பாதுகாப்பு மசோதாவினை மத்திய அரசு திரும்பப் பெற்று, தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. கேரள அரசு முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட உத்தேசித்துள்ள திட்டத்தைத் தடுத்து நிறுத்தி, தமிழ்நாட்டிற்கான உரிமை நிலைநிறுத்தப்படும் என்பதை உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேகதாதுவில் அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடகத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியைத் திரும்பப் பெறக்கோரி, மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். மாண்புமிகு அம்மாவின் அரசு கொடுத்த திடமான மற்றும் தொடர் அழுத்தத்தின் காரணமாக, மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் அனுமதியில்லாமல் மேகதாதுவில் கர்நாடகம் அணை கட்ட இயலாது என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, முல்லைப் பெரியாறு மற்றும் மேகதாது ஆகிய பிரச்சினைகளில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டவும், தமிழர்களின் நலனைக் கருத்தில்கொண்டும், சட்டரீதியான நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஊரகப் பகுதிகளில் இதுவரை 3 இலட்சத்து 20 ஆயிரம் பசுமை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டு வரை 40,000 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

புலம் பெயர்ந்த மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 1,000 வீடுகள் கட்டிக் கொடுக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2018–2019 ஆம் ஆண்டிற்கு ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்காக 1,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, முழு சுகாதார தமிழ்நாட்டை அடையும் விதத்தில், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல் போன்ற திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்தியமைக்கான இந்திய அரசின் பல்வேறு விருதுகளை தமிழ்நாடு இந்த ஆண்டு வென்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் கடந்த ஆண்டில் 15,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கடனாக ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/– வரை வழங்கப்பட்டு வருகிறது. உழைக்கும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின்கீழ் கடந்த 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 67,228 பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2018–2019 ஆம் ஆண்டிற்கான பயனாளிகளைத் தேர்வு செய்யும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வளர்ந்துவரும் சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்புகளை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்த சாலைகளும், மழைநீர் வடிகால் அமைப்புகளும், நடைபாதைப் பணிகளும், தெரு விளக்கு அமைக்கும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. வெளி நாட்டிலிருந்து நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, கூவம் ஆறுகளில் மிதக்கும் ஆகாயத் தாமரை மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டு, வெள்ள நீர் முறையாக வடிந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் மோட்டார் வாகனம் அல்லாத போக்குவரத்தை ஊக்குவிக்கும் பணிகள், நீர்நிலைகளை மேம்படுத்தும் பணி, பல அடுக்கு வாகன நிறுத்தம் கட்டும் பணி, புதிய பூங்காக்கள் அமைக்கும் பணி போன்ற பணிகள் முடிவுற்றும், முன்னேற்றத்திலும் உள்ளன. நகராட்சி நிருவாக ஆணையத்தின் கட்டுப்பாட்டில் 10 மாநகராட்சிகளில் சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பேரூராட்சிப் பகுதிகளில் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் இதுவரை 1,39,157 தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு ரூ.2,922.30 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 35 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1,824 கோடி மதிப்பீட்டில் 5 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் நிதியாண்டில் நெடுஞ்சாலைத் துறைமூலம் 9,554 கி.மீ. நீளத்திற்கு சாலைகள், 1,140 எண்ணிக்கையில் சாலைப் பாதுகாப்புப் பணிகள், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள், தாங்கு சுவர் அமைக்கும் பணிகள், 7 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் 80 ஆற்றுப் பாலங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 5,256 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 47 ஆற்றுப் பாலங்களும், 1 சாலை மேம்பாலமும், 9 இரயில்வே மேம்பாலங்களும், 1 நடை மேம்பாலமும் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 12,306 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 238 ஆற்றுப் பாலங்களும், 16 சாலை மேம்பாலங்களும், 68 இரயில்வே மேம்பாலங்களும், 2 நடை மேம்பாலங்களும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடச் சாலை, திருநெல்வேலி மேற்கு புறவழிச் சாலையை நான்கு வழித்தடமாக்கும் பணி ஆகியவற்றுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் தஞ்சாவூர்–திருக்காட்டுப்பள்ளி புறவழிச் சாலை அமைக்க நில எடுப்பு செய்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசிடமிருந்து தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், மாநில சாலைகளை மேம்பாடு செய்யவும், ரூ.3,462 கோடி நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் பழனி–தாராபுரம் சாலை, ஆற்காடு–திண்டிவனம் சாலை, வள்ளியூர்–திருச்செந்தூர் சாலை, கள்ளக்குறிச்சி–திருவண்ணாமலை சாலை, தஞ்சாவூர்–கோடியக்கரை சாலை ஆகிய 5 மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு வாழ்விடங்கள் அமைத்துத் தருவது முக்கியம் என்பதை நன்குணர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் குடிசைகளற்ற நகரங்கள் எனும் கனவினை நனவாக்க தொலைநோக்குத் திட்டம், *2023*–ஐ உருவாக்கித் தந்தார்கள். நகரப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு *13.91* இலட்சம் குடியிருப்புகள் தேவை என்பதை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கண்டறிந்துள்ளது. மேலும், மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசு ரூ.*21,604* கோடி மதிப்பில் *5* இலட்சத்து *17* ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்ட ஒப்புதல் பெற்று, பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்திய நாட்டில் இத்திட்டப் பணிகளை நிறைவேற்றும் மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதன்முறையாக உலக வங்கியின் உதவியுடன் சென்னை மாநகரப் பகுதிகளில் நீர் வழிகளில் வாழும் மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் ஏற்படுத்துவதற்காக ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும்.

"தவிதவிக்கிற ஏழைக்காக திட்டம் போடணும்,
பொருளை சரிசமமா பங்கு வைக்க சட்டம் போடணும்"

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடலுக்கேற்ப, நடுத்தர மற்றும் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாக அனுமதிக்கப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான தள பரப்பளவுக் குறியீட்டினை (FSI) *1.5*–லிருந்து *2* ஆக உயர்த்தி மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு உயர்த்தப்பட்ட தளப் பரப்பளவைக் கடைப்பிடிக்கும் வகையில், வரைவு விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் கட்டடப் பாதுகாப்பை உறுதி செய்யவும், விதி மீறல்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து அவற்றைத் தவிர்க்கும் வகையிலும் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. கட்டடம் மற்றும் மனைப் பிரிவுகள் அமைப்பதை நெறிமுறைப்படுத்த, தற்போது தனியாக உள்ள திட்ட அனுமதி மற்றும் கட்டட விதிகளை ஒருங்கிணைத்து, ஒரே தொகுப்பாக வரைவு விதி உருவாக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் விண்ணப்பிக்கும் முறைகள் எளிமையாக்கப்பட்டு, விரைவில் அனுமதி அளிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பிற்பகல் *12–40*

வருவாய்த் துறையை நாடி வரும் பொதுமக்களுக்கு விரைவான சேவையினை அளிக்கும் வகையில், மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து வகையான சான்றிதழ்கள் உட்பட *20* வகையான சேவைகள் இத்திட்டத்தின்மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை எளிமைப்படுத்திடவும், விவசாயிகள் அடங்கல் பதிவேட்டினை எளிதில் பார்வையிடவும், பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும், இ–அடங்கல் திட்டம் மற்றும் பட்டா மாறுதல் சேவைகள் பொதுமக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக இணையவழிப் பட்டா மாறுதல் திட்டமும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களைத் தவிர்த்து, பிற புறம்போக்கு நிலங்களில் *5* ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமணம் செய்துள்ள, தகுதியுள்ள ஏழையெளிய நபர்களுக்கு அதனை வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்க ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறையின் சேவைகள் எளிதில் கிடைக்க, இந்த ஆண்டு புதியதாக ஒரு வருவாய்க் கோட்டமும், *8* வருவாய் வட்டங்களும், ஒரு வருவாய் உள்வட்டமும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தனியார் பேருந்துகளுக்கு இணையாக *60* எண்ணிக்கையிலான அரசு சொகுசுப் பேருந்துகளும், *40* எண்ணிக்கையிலான நீண்டதூர குளிர்சாதனப் பேருந்துகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்துச் சேவை மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை, மாதவரத்தில் *95* கோடி ரூபாய் செலவில், ஒரு புறநகர்ப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மேலும், சென்னையில், மின்சாரம் மற்றும் மின்கலப் பேருந்துகள் இயக்கத்திற்கு வரவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் லண்டனில் உள்ள சி–*40* முகமைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குமிடையே கடந்த மார்ச் மாதம்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] *[2019 ஜனவரி 8*

கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) KfW வங்கியின் உதவியுடன் எரிபொருள் செயல்திறன்மிக்க பி.எஸ்.6 பேருந்துகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில், நீண்ட காலமாக வழங்கப்படாமல் இருந்த ஊழியர்களின் நிதி நிலுவைகளை வழங்கவும், விபத்து இழப்பீட்டுத் தொகை நிலுவைகளை வழங்கவும் போதுமான நிதியினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கி வருகிறது. மேலும், பல ஆண்டுக் காலமாக நிலுவையில் இருந்துவந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்களின் நிலுவைத் தொகைகள் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற பின்னர் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டதை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அந்தவகையில், 2017–2018 ஆம் ஆண்டில் மட்டும் 2,147 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல், உணவுப் பாதுகாப்புச் சட்டம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நான்கு அடுக்குகளாக நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அதில், 17,598 முதன்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கான 2 அடுக்குத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டத் தேர்தல் விரைவில் நடத்தப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதர சங்கங்களுக்கான தேர்தல் நீதிமன்ற வழக்குகளால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய மக்கள் ரம்ஜான் நோன்பு கஞ்சி தயாரிப்பதற்காக கடந்த ஆண்டு 5,292 மெட்ரிக் டன் பச்சரிசி வழங்கப்பட்டது. ஏழையெளியோர் பயன்படுத்தும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.



*2019 ஜனவரி 8]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இந்த ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து மாவட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் 1,000 ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் ஆணை வெளியிடப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–45*

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக இந்த நிதியாண்டில் 31–12–2018 வரை 9 இலட்சத்து 22 ஆயிரத்து 903 விவசாயிகளுக்கு 6 ஆயிரத்து 25 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழலை மேம்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு மாசற்ற தமிழ்நாட்டை உருவாக்கித் தரும் வகையில், இந்த மாதம் 1 ஆம் தேதி முதல் ஒரு முறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை மாண்புமிகு அம்மாவின் அரசினால் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கான நோக்கத்தினை நிறைவேற்ற வணிகர்களும், மக்களும் இத்திட்டத்திற்கு முழு ஒத்துழைப்புத் தரத் தொடங்கிவிட்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதொடர்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வோரிடமிருந்தும், அதை இருப்பில் வைத்துக் கொள்வோரிடமிருந்தும் பறிமுதல் செய்யப்படும். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவோருக்கு தகுந்த அளவில் எச்சரிக்கை செய்து, அதையும் மீறுவோர்மீது அபராதம் விதிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குத் திட்டம் 2023–ல் வழிகாட்டியுள்ளபடி, தமிழ்நாடு இயற்கை சார் வளங்களில் மிகுந்துள்ளதால், நில அமைப்பின் இயற்கைச்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு, மாநில சூழல் சுற்றுலாக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான மலையேற்றத்தை உறுதி செய்யும்பொருட்டு மாண்புமிகு அம்மாவின் அரசு புதிய மலையேற்ற விதிகளை வகுத்துள்ளது.

சுற்றுச்சூழல் விதிகளை மீறியதால், தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் காப்பர் ஆலையை நிரந்தரமாக மூட இந்த அரசு ஆணையிட்டது. ஆனால், இவ்வாணையை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை நிருவாகம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தது. மாநில அரசு தனது ஆட்சேபணைகளைத் தெரிவித்த பின்னரும், இந்த ஆலையைத் திறக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டதை எதிர்த்து, இந்த அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தை இறப்பு விகிதம், மொத்த கருவள விகிதம் மற்றும் தாய்மார்கள் இறப்பு விகிதம் போன்ற சுகாதாரக் குறியீடுகளில் முறையே ஆயிரத்திற்கு 17, 16 மற்றும் ஒரு இலட்சத்திற்கு 62 என்ற இலக்கினை எய்தி, நமது மாநிலம் மிகச் சிறந்த சாதனையைப் புரிந்துள்ள காரணத்தினால், நிதி ஆயோக்கினால் வெளியிடப்பட்டுள்ள 'சுகாதாரமான மாநிலம்—முற்போக்கு இந்தியா' என்ற அறிக்கையில், தமிழ்நாடு மூன்று முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், உடல் உறுப்பு தானம் வழங்குவதில் தமிழ்நாடு நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. (மேசையை தட்டும் ஒலி)

அனைவருக்கும் மருத்துவச் சேவை கிடைக்கும் வகையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு, குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசை வலியுறுத்தி மதுரை தோப்பூரில் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற எய்ம்ஸ் மருத்துவமனை அமைய மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலங்களின் உரிமையைப் பாதிக்கும் வகையில் கொண்டு வரப்படவுள்ள மத்திய அரசின் மருத்துவ



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஆணைய மசோதாவினை மாண்புமிகு அம்மாவின் அரசு கடுமையாக எதிர்த்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் உள்ள நிருவாக அமைப்புகள், மூன்று அடுக்கு நிருவாக அமைப்பாக மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் 322.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக, தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கை விகிதம் 99.86 ஆக உயர்ந்துள்ளது. இடைநிற்றல் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக, அரசுப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தங்கள் கற்றல் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் 3 ஆயிரம் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும், 6 ஆயிரத்து 29 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களும் அமைக்கப்படவுள்ளன.

விலையில்லா மடிக்கணினிகளை 2019–2020 ஆம் கல்வியாண்டு முதல், +1 வகுப்பில் இருந்தே மாணவர்களுக்கு வழங்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் முதன்முறையாக அரசுப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் பாடப் புத்தகங்கள் QR Code மற்றும் காணொலிக் காட்சியுடன் இணைக்கப்பட்டு ஆற்றல்மிகு பாடப் புத்தகங்களாக (Energized Text Books) உருவாக்கப்பட்டுள்ளதால், பாடக் கருத்துகளை மாணவர்கள் தேவைப்படும்பொழுதெல்லாம் எளிதாகக் கற்றிட இயலுகிறது. இதனால் அவர்களின் கற்றல் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் கல்வியாண்டில் 152 கோடி ரூபாய் செலவில் 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அரசு கலை மற்றும்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

அறிவியல் கல்லூரிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் காரணமாக, தமிழ்நாட்டில் உயர் கல்வியில் சேரும் மாணவர்கள் 49.1 சதவிகிதமாகவும், மாணவிகள் 48.2 சதவிகிதம் எனவும், ஆக, மொத்தம் 48.6 சதவிகிதமென உயர்ந்து இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நம் மாநிலத்தை அறிவுத் தலைநகரமாகவும், புதிய கண்டுபிடிப்புகளின் மையமாகவும் மாற்றுவதே நமது உயர் கல்வித் துறையின் நோக்கமாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மத்திய அரசின் இந்திய உயர் கல்வி ஆணைய வரைவு மசோதாவினைக் கைவிடவும், பல்கலைக்கழக மானியக் குழு என்ற அமைப்பு தொடர்ந்து செயல்பட வேண்டுமென்றும் மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கு அளித்துவரும் முக்கியத்துவத்திற்கு இணையாக, மாண்புமிகு அம்மாவின் அரசு சமூகநலத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகிறது. அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளின் சீரான வளர்ச்சி விவரங்களைச் சேகரித்துக் கண்காணிக்க 20 ஆயிரத்து 150 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு தொடுதிரை கைபேசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெண்களுக்கான பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், 24 மணி நேர கட்டணமில்லா தொலைபேசி எண் 181 சேவையும், கடந்த மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் நிரந்தர ஆதார் பதிவு செய்யும் வசதிக்காக 1,302 ஆதார் பதிவு செய்யும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் 43 ஆயிரத்து 205 சத்துணவு மையங்களில் 51.96 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர். இவை தவிர, மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவித் திட்டங்களின்மூலம் சென்ற ஆண்டு ஒரு இலட்சத்து ஆயிரத்து நூற்றுப் பத்தொன்பது பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தில் அனைத்து நலன்களும் ஒருங்கே பெற்று சம உரிமையுடன் வாழ வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் அவர்களது வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு 3 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக உயர்த்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சுயதொழில் தொடங்க அளிக்கப்பட்டு வந்த கடனுதவியை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும், அவர்களை தனியார் துறைகளில் பணியமர்த்த சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் உட்பட பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மூன்றாம் பாலினத்தவர்களின் நலனுக்காக, சொந்தத் தொழில் செய்ய வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக அரசுத் துறை பணிகளில் 9 மூன்றாம் பாலினத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற 1,000 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் உட்பட பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வளத்தின் செயல்திறனை மேம்படுத்த குறிப்பாக, பொறியியல் பட்டதாரிகளின் செயல்திறனை மேம்படுத்த, செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வுக் கூட்டம் 10–9–2018 அன்று என்னால் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு, தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை 2018–ஐ வெளியிட்டது. இது தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சிக்கும், புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்க்கவும் பெரிதும் பயன்படும்.

புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு மின் ஆளுமைப் பிரிவின் மூலமாக மக்களுக்கான சேவையை மேம்படுத்திடும் வகையில், தேசிய மின் ஆளுமைப் பிரிவின் உதவியோடு திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் ஒன்று மத்திய–மாநில அரசின் பங்களிப்போடு உருவாக்கப்படவுள்ளது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு தொழில்நுட்பத்துடன் கூடிய கட்டுப்பாடு மற்றும் கட்டளை மையம் ஒன்று நிறுவப்படும்.

அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சேவைகளை வெளிப்படைத் தன்மையுடன் செம்மையாகப் பெறும் பொருட்டு, மாநில குடும்ப தகவல் தொகுப்பு ஒன்று உருவாக்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தப்பட்டும், அவ்விடுதிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தியும் அவை சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மக்கள் வைத்த பல்வேறு கோரிக்கைகள் குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

வன்னியர் குல சத்திரிய சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை, எளிய மக்களின் கல்வி மற்றும் அவர்தம் முன்னேற்றத்தினை உறுதி செய்ய, தாராள மனம் கொண்ட கொடையாளிகள் வழங்கிய சொத்துக்களைப் பராமரிக்க மாண்புமிகு அம்மாவின் அரசால் சட்டம் இயற்றப்பட்டு, சொத்துக்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜெருசலேம் புனிதப் பயணம் செல்லும் கிறிஸ்தவ மக்களுக்கு மானியம் வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் உயர்த்துதல், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல் மற்றும் தர்காக்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்குதல் போன்ற திட்டங்கள் கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

இவை அனைத்தும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும், சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–55*

ஹஜ் பயணம் செல்ல கொடுக்கப்பட்டு வந்த மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், அதற்கு இணையான மானியத்தை



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் மாண்புமிகு அம்மாவின் அரசு செய்யும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார மேம்பாடு, கல்வியில் முன்னேற்றம் போன்றவற்றில் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு Pre–matric மற்றும் Post-Matric கல்வி உதவித் தொகைகள் இவ்வாண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் 26.63 கோடி ரூபாய் மதிப்பில் 23 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு, மாணாக்கர்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், 33.83 கோடி ரூபாய் செலவில் 29 விடுதிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இயங்கிவரும் 1,297 விடுதிகளில், 25.94 கோடி ரூபாய் மதிப்பில் மாணாக்கர்கள் பயன்பாட்டிற்காக லாக்கர் வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழங்குடியின மாணாக்கர்களுக்கு தரமான கல்வி வழங்க 7 ஏகலைவா மாதிரி உண்டி, உறைவிடப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், விழுப்புரம், தருமபுரி, நாமக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில், அரசுப் பழங்குடியினர் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் சுற்றுச் சுவர், கழிப்பிட வசதி, கூடுதல் வகுப்பறை, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் வழங்கும் பணிகள் 49.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு புதிய ஜவுளிக் கொள்கை வகுக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஜவுளித் தொழிலின் வளர்ச்சியை ஊக்குவிக்க கோயம்புத்தூர் நகரில் உள்ள ‘கொடீசியா’ அரங்கில் 2 கோடி ரூபாய் செலவில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி இம்மாதம் நடத்தப்பட உள்ளது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதில் தொழிலாளர் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்ய, பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்தாலோசனைகள்மூலம் முடிவெடுத்து, விரிவான ஒருங்கிணைந்த திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. பட்டாசுத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திட அவர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக 2018–2019 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு 200 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 60,000 இளைஞர்கள் இப்பயிற்சியினைப் பெற்று அதில் 40,000 இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்று பயனடைந்துள்ளார்கள். மேலும், 12,000 இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, சென்னையில் பணிபுரியும் பதிவு பெற்ற கட்டடத் தொழிலாளர்களுக்கு அம்மா உணவகங்களில் விலையில்லா உணவு வழங்கும் திட்டத்தை விரைவில் துவங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலனை மேம்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் அளித்து வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு, பதக்கங்களை வெல்லும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையை தொடர்ந்து வழங்கி வருகிறது. இதன் காரணமாக, முன் எப்போதும் இல்லாத வகையில், 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய, காமன்வெல்த் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அதிக பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

விளையாட்டுத் துறையில் அதிகமான இளைஞர்களை ஈர்த்து, மென்மேலும் சாதனைகள் படைக்க, அவர்களுக்கு தமிழ்நாடு



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில், குறிப்பிட்ட பதவிகளில், நிர்ணயிக்கப்படும் தகுதியின் அடிப்படையில், 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்துள்ளது. இதற்கான விதிமுறைகளை வகுப்பதற்கு தலைமைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவ்விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை நடைமுறைப்படுத்திட, வணிக வரித் துறை எடுத்த துரித நடவடிக்கையினால், வணிகர்கள் சிரமமின்றி, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் இதர வரிச் சட்டங்களிலிருந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு மாறுவதற்கு ஏதுவாக இருந்தது. ஜி.எஸ்.டி. வரியினை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால், குறைந்த அளவிலேயே இழப்பீடு பெறும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. இது தமிழ்நாட்டின் சிறந்த செயல்திறனைக் காட்டுகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, ஜி.எஸ்.டி. மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு, தெளிவாக எடுத்துரைத்த பல்வேறு காரணங்களினால், 53 பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான ஜி.எஸ்.டி. வரிகள் குறைக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 1–00

ஸ்டார் 2.0 புதிய ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் திட்டம்மூலம் சொத்து ஆவணப் பதிவு முறை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், ஸ்டார் 2.0, நிலை–2 சொத்துப் பதிவு தவிர, திருமணம், சங்கம், சீட்டு மற்றும் கூட்டுப்பங்காண்மை நிறுவனம் ஆகிய பதிவுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்சேவைகளினால் பொதுமக்கள் பெரிதும் பலனடைந்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோக் ஆயுக்தா சட்டம், 2018 இயற்றப்பட்டு, 13–11–2018 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. லோக் ஆயுக்தாவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகள் விரைவில் முடிவுற்று செயல்பாட்டிற்கு வரும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்–1, 1–A, 1–B பணியிடங்களுக்கு தற்போதுள்ள SC/ST/MBC/BC மற்றும் DNC ஆகிய பிரிவினர்களுக்கான வயது உச்சவரம்பு 35–லிருந்து 37 ஆகவும், இதர பிரிவினருக்கான தற்போதுள்ள வயது உச்சவரம்பு 30–லிருந்து 32 ஆகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய பங்கேற்பு ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக, பழைய ஓய்வூதியத் திட்டத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கை குறித்த சாத்தியக்கூறுகளை ஆராய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் திரு. டி.எஸ். ஸ்ரீதர் அவர்களின் தலைமையில் ஒரு நபர் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு, தனது அறிக்கையை 27–11–2018 அன்று அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு 7–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமல்படுத்தியது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. அதன் பிறகு, ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக ஒரு நபர் ஆணையத்தை அமைத்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உத்தரவிட்டது. அக்குழு தனது விசாரணையை முடித்து, அரசுக்குப் பரிந்துரை அறிக்கையை 5–1–2019 அன்று சமர்ப்பித்துள்ளது. அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கூடுதல் சிறப்பு அம்சங்களுடன் மேலும் 4 ஆண்டுகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசின் வருவாய் இனங்களை நிகழ் நேரத்தில் மின்னணு வருவாயாகப் பெறவும், 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடுகளை எளிமையான முறையில் பராமரிக்கவும், நிதி மற்றும் மனித வள மேலாண்மையை மேம்படுத்திடவும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தினை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் விரைவில் என்னால் தொடங்கி வைக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

15–வது நிதிக் குழுவின் ஆய்வு வரம்புகளில், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கீட்டினைப் பயன்படுத்தினால், தமிழ்நாட்டிற்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால், 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கீட்டின்படியே ஆய்வு வரம்புகள் இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது. 15–வது நிதிக் குழுவும் இந்தக் கோரிக்கையை ஏற்று, பாரபட்சமின்றி நிதிப் பகிர்வு பரிந்துரையை அளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க நிதி வழங்கப்பட்டதுபோல, தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களிலுள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை 1 கோடி ரூபாய் வைப்புத் தொகையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளார் பெயரிலும், தமிழறிஞர் அயோத்திதாச பண்டிதர் பெயரிலும் இரண்டு புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழுக்குப் பெருமை சேர்த்த 3 தமிழறிஞர்களது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

சமூக நீதிக்காகப் போராடிய திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களது திருவுருவப் படத்தை சட்டமன்றப் பேரவையில் வைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. அன்னாருக்குக் கடலூரில் மணிமண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் கட்டவும், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் பாரத மாதா ஆலயம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமூக நீதிக்காகப் பாடுபட்ட திரு. ராமசாமி படையாச்சியாரின் பிறந்த தினமான செப்டம்பர் 16 ஆம் நாளும், கலைத் துறைக்கு அளப்பரிய சேவை புரிந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பிறந்த தினமான அக்டோபர் 1 ஆம் நாளும்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடி, அவர்களைப் பெருமைப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் ஆணையிடப்பட்டு, கொண்டாடப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–05*

கலைத் துறையினருக்கான கலைமாமணி விருதுகளும், திரைப்படம் மற்றும் சின்னத்திரைக்கான விருதுகளும் விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் தொடங்கி கன்னியாகுமரி வரையிலான 32 மாவட்டங்களிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின்மூலம் 5,744 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3,214 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டும், 5,158 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 2,370 புதிய திட்டப் பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 568 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 492 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 46 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 446 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள அறிவிப்புகளில் 74 அறிவிப்புகளுக்கு ஆயத்தப் பணிகள் நடைபெற்றும் 2 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும் இருந்து வருகின்றன.

2011–2016 ஆம் ஆண்டுகளில் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மொத்தம் 1,055 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 1,039 அறிவிப்புகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, 754 பணிகள் நிறைவேற்றப்பட்டும், 301 அறிவிப்புகள் மீதான பணிகள் நடைபெற்றும் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2017–2019 ஆம் ஆண்டுகளில் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மொத்தம் 259 அறிவிப்புகள் என்னால் வெளியிடப்பட்டன. அவற்றில் 221 அறிவிப்புகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) 38 பணிகள் நிறைவேற்றப்பட்டும், 191 அறிவிப்புகளின் மீதான பணிகள் நடைபெற்றும் வருகின்றன. மீதமுள்ள 30 அறிவிப்புகளுக்கு ஆணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதயமான விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலமாக வெண்மைப் புரட்சி ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் இன்றுவரை 76 ஆயிரத்து 836 கிராமப்புறப் பெண்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தினசரி 2.66 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதுடன், 1.66 இலட்சம் கன்றுகளும் பிறந்துள்ளன.

பால் உற்பத்தியாளர்களின் சிரமங்களைக் குறைக்க ஏதுவாக நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு இடங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் துவக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே நாளில் 37 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு மாண்புமிகு அம்மாவின் அரசால் சாதனை படைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆவின் பால் மற்றும் பால் உபப் பொருட்கள் சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் இன்றுவரை 9 இலட்சத்து 13 ஆயிரத்து 579 பயனாளிகளுக்கு 36 இலட்சத்து 54 ஆயிரத்து 316 வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை 71 இலட்சத்து 33 ஆயிரத்து 690 குட்டிகளை அவை ஈன்றுள்ளன என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோழி அபிவிருத்தித் திட்டம் மூலம் 2 ஆயிரத்து 961 கறிக்கோழிப் பண்ணைகள், 18 ஆயிரத்து 545 நாட்டுக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது இத்திட்டம் மாநிலம் முழுவதும் 77 ஆயிரம் கிராமப்புற ஏழைப் பயனாளிகளுக்கு வாழ்வாதாரம் வழங்கும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

'ஒகி' புயலின்போது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய நிவாரணங்கள் உடனடியாக வழங்கப்பட்டன. இறந்த மற்றும் காணாமல் போன மொத்தம் 204 மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா 20 இலட்சம் ரூபாய் வழங்கியதுடன், அதில்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

தகுதியுள்ள 159 மீனவர்களது வாரிசுகளுக்கு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களது படகுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும் நிவாரணம் வழங்கி, அவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு இயற்கைச் சீற்றங்களின்போது, தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் ஆழ்கடல் தகவல் தொடர்புக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், செயற்கைக்கோள் தொலைபேசி மற்றும் 'நேவ்டெக்ஸ்' தொலைத்தொடர்புக் கருவிகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை ஊராட்சிக்குட்பட்ட பொழிகரை கிராமத்தில் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, கடல் சீற்றத்தினைக் குறைக்கும் வகையில், தூண்டில் வளைவு அமைக்கப்படும்.

'கச்சத்தீவை மீட்போம்' என்ற நமது இதய தெய்வத்தின் இலட்சியத்தை அடையும் வரை மாண்புமிகு அம்மாவின் அரசு, தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 60 ஏரிகளுக்கு தென் பெண்ணையாற்றில் எண்ணேகொல்புதூர் அணைக்கட்டிலிருந்து இருபுறமும் புதிய வழங்குக் கால்வாய்கள் அழியாளம் அணைக்கட்டின் வலதுபுறக் கால்வாயிலிருந்து ஒரு புதிய வலது கால்வாய் மற்றும் சின்னாற்றிலிருந்து பிரியும் சேர்தலால் கால்வாயிலிருந்து ஒரு புதிய வழங்குக் கால்வாய் அமைத்து உபரி நீரைக் கொண்டு செல்வதற்கு 3 திட்டங்களை புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் நான் அறிவித்தேன். இத்திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவில் துவங்கப்படும். இத்திட்டத்தினால் 4,837 ஏக்கர் நிலங்களுக்கான பாசன வசதி உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை நுண்ணறிவு இயந்திரக் கற்றல், Drones, மிகைத் தரவு, ஆளில்லா வான்வழி வாகனங்கள், மெய்நிகர் உண்மை Blockchain, பொருட்களின் இணையம் மற்றும் மெய்நிகர் உண்மை போன்றவை நாலாவது தொழில் புரட்சிக்கான புதிய தொழில்நுட்பங்களாகும். இயற்கைப் பேரிடர்களை முன்னதாகவே அறிந்துகொள்ள தாய்லாந்தில் உள்ள ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகைப் பேரிடர் முன்னறிவு மையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட இணையதள புவியியல் தகவல் முறை அமைப்பு மற்றும் TN Smart என்ற செயலி கடந்த அக்டோபர் மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இது இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இச்செயலிமூலம் குறுகிய காலத்தில் பேரிடர் எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டு, பெரும் அளவிலான உயிர்ச் சேதங்களைத் தவிர்க்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகங்களை நாட்டுடைமையாக்குவது பற்றி எல்லாம் சொன்னார், வரவேற்கிறேன். ஆனால், ஆராய்ச்சிக்கு உரியது, வரலாற்றை நிரூபிக்கக்கூடியது, திராவிட இனத்திற்கான கருத்துக்களுக்கு ஆதாரங்களை அள்ளித்தருவது, ஐராவதம் மகாதேவன் அவர்களுடைய நூல்கள். இதுபோன்ற நூல்களை யாரும் வியாபார நோக்கத்தோடு போடுவார்களா என்றால், போடமாட்டார்கள். ஆனால், இதுபோன்ற நூல்கள் பொக்கிஷம் போன்றவை, காப்பாற்றப்பட வேண்டும். இதுதான் வருங்காலத்திற்கு நமக்குச் சான்று. எனவே, அரசாங்கமே, அவருடைய கட்டுரைகள், புத்தகங்களை நாட்டுடைமையாக்கி வெளியிட்டால், அது மொழிக்கும், நாட்டிற்கும், இனத்திற்கும், வரலாற்றிற்கும் பெருமை சேர்க்கும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து கவனிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*[2019 ஜனவரி 8*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். இதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் முன்னோடித் திட்டங்களை இந்த அரசு திறம்படச் செயல்படுத்தி, பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளித்தல், அவர்களின் சுகாதாரத்தில் கவனம் செலுத்துதல், மாணாக்கர்களது கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, அவர்களை ஊக்குவித்தல், அவர்களது உயர் கல்விக்கு பல்வேறு திட்டங்களை வகுத்தல் போன்ற சமூகத்தில் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்லும் பணிகளில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அத்துடன் இல்லாமல், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில், அவர்களுக்குப் பல்வேறு பயிற்சிகளை அளிக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு ஏதுவாக, தொழில் வளர்ச்சி ஏற்பட தகுந்த சூழ்நிலையை உருவாக்கியும் வருவதால், தமிழ்நாடு அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி வளர்ச்சியடைந்துள்ளது. மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திவரும் திட்டங்களை இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள் பின்பற்றுவதையும், அகில இந்திய அளவில் பாராட்டுதல்கள் பெறுவதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 2030 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய இலக்குகளாக ஐ.நா. சபை நிர்ணயித்த பல்வேறு வளர்ச்சி இலக்குகளை அடைவதில், தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்வதாக (மேசையைத் தட்டும் ஒலி) சமீபத்தில் இந்திய ஆய்வறிக்கை வெளியிடப்பட்டு, sustainable development goal index 2018–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, வறுமை ஒழிப்பு, தூய்மையான மரபுசாரா எரிசக்தி வழங்குதல் மற்றும் ஒட்டுமொத்த செயல்பாட்டில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



*2019 ஜனவரி 8]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மேலும், பெங்களூருவிலுள்ள பொது விவகாரங்கள் மையம் என்ற அமைப்பு வெளியிட்ட 2018 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை அறிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு ஆளுநர் உரையில், இதுவரை நான் 11,286 கோப்புகளைப் பரிசீலித்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோப்புகளில் கையெழுத்திடுவது என்பதை ஒரு சாதனையாக நான் கருதவில்லை. அது முதலமைச்சர் என்ற முறையில் என் கடமையாகும். ஒவ்வொரு கோப்பும் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு ஒப்புதலாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வாகவும், ஒட்டுமொத்தத் தமிழ் சமுதாயத்திற்குப் பயன் தரும் நல்ல திட்டங்களாகவும் இருக்கின்றன என்பதுதான் எனக்கு மகிழ்ச்சியே தவிர, எண்ணிக்கையில் அல்ல என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் வேகமான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வந்தார்கள். அவர்கள் காட்டிய 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற தாரக மந்திரத்தினையும், அவர் வகுத்துத் தந்த கொள்கைகளையும் செவ்வனே பின்பற்றி வரும் இந்த அரசு மாநிலத்தின் பல்வேறு தேவைகளுக்கு விரைவாகவும், பொறுப்புணர்வுடனும் தீர்வு கண்டு வருகிறது. இதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்த அரசு சட்டம்–ஒழுங்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது. வலிமையான கட்டமைப்புகளை ஏற்படுத்தி, ஆரவாரமின்றி அமைதியாகவும், திடமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுவதால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு எடுத்துக்காட்டாக, சமீபத்தில் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'இந்தியா டுடே' விருது வழங்கும் விழாவில் சட்டம்–ஒழுங்கு பராமரிப்பில் விரைந்து முன்னேறிய மாநிலம், சுற்றுலாவில் சிறந்த மாநிலம் மற்றும் ஒட்டுமொத்த செயல்பாடுகளில் முதலிடம் என தேர்வு செய்து விருது வழங்கியது இதற்குச் சான்று என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜனவரி 8

எங்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையிலே சென்று, அவரது கொள்கைகளைப் பின்பற்றி, மக்கள் பணியை அமைதியாக ஆர்ப்பாட்டமின்றி செய்வதை எங்கள் கடமையாகக் கருதி செயல்பட்டு வருகின்றோம். அதேசமயம், தமிழ்நாட்டு மக்களின் நலனை என்றென்றும் மாண்புமிகு அம்மாவின் அரசு பாதுகாக்கும் என்பதையும் இங்கு உறுதிபட தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 176 (1)—ன்கீழ் பொதுத் தேர்தல் முடிந்த பிறகு, ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலும் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரையில் சென்ற ஆண்டின் அரசின் சாதனைகளும், முக்கியமான பிரச்சினைகளுக்கு அரசினுடைய நிலைப்பாடும், எதிர்காலத்தில் அரசு எப்படிச் செயல்பட வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையும் இருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இதைத்தான் பின்பற்றினீர்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் 23—6—2016 அன்று இந்தப் பேரவையில் உரையாற்றியபோது, ‘கவர்னர் உரை என்பது சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களைத் தொகுத்து வெளியிடுகின்ற பெரிய அறிக்கை அல்ல; கோடிட்டுக் காட்டுகின்ற அறிக்கை’ என்றார். உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், ஏன் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இதே நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆளுநர் உரையில் அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப, அடுத்து வரும் நிதிநிலை அறிக்கையிலும், ஒவ்வொரு துறையின் மானியக் கோரிக்கையிலும் அதற்குரிய நிதியொதுக்கீடு செய்யப்படும் என்ற கருத்தைத்தான் பாராளுமன்ற நடவடிக்கை குறித்து Kaul and Shakdher எழுதிய புத்தகத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நடைபெறும் விவாதத்தின்போது நானும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் தகுந்த விளக்கங்களைத் தெரிவித்திருக்கின்றோம். மேலும், எனது பதிலுரையிலும் அனைத்து விவரங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று தனது உரையை முடிக்கும்போது, அரங்கநாதன் என்ற ஒற்றை வார்த்தையை, எட்டு வரியில் விடுகதைப் பாடலாக ஒரு புலவர் சொன்னதாகவும், அதுபோன்றே மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையும், ஒன்றுமில்லை என்பதைச் சுற்றி வளைத்து 52 பக்கங்கள் கூறப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.



2019 ஜனவரி 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு” (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப ஒரு கருத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தெளிவுகொள்ள வேண்டும்.

பார்வையற்ற 5 பேர், ஒரு யானையைப் பார்க்கச் சென்றார்களாம். அதில் ஒருவர் காலைப் பிடித்துப் பார்த்து, யானை தடிமனாக இருக்கும் என்றும்; இரண்டாமவர் வாலைப் பிடித்துப் பார்த்து, யானை ஒல்லியாக இருக்கும் என்றும்; மூன்றாமவர் வயிற்றைப் பிடித்துப் பார்த்து, யானை பானைப் போல இருக்கும் என்றும்; நான்காமவர் காதைப் பிடித்துப் பார்த்து, யானை தட்டையாக இருக்கும் என்றும்; ஐந்தாமவர் தந்தத்தைப் பிடித்துப் பார்த்து, யானை கூர்மையாக இருக்கும் என்றும் சொன்னார்களாம். இதிலிருந்து தெரிவது என்னவென்றால், எதையும் முழுமையாகப் பார்த்து தெரிந்துகொள்ளாவிட்டால் அவரவர் நினைப்புபோலவே தோன்றும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தோன்றியிருக்கும் என்று கருதுகின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பூஜ்ஜியத்தில்தான் இந்த ராஜ்ஜியம் நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த அவையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். இதேபோன்றுதான், 16—2—2017 அன்று நான் முதலமைச்சராகப் பதவியேற்றபோது 10 நாட்கள்கூட இந்த அரசு தாக்குப்பிடிக்காது என்று சிலர் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 10 நாட்கள் அல்ல, 100 நாட்கள் அல்ல, 100 நாட்களுக்குமேல் 700 நாட்களையும் தாண்டி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வெற்றிகரமாக மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதன் பலனாக பல்வேறு விருதுகளையும், சிறப்புகளையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து எது பூஜ்ஜியம், யார் பூஜ்ஜியம் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—20

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல, பூஜ்ஜியத்தில் ஆரம்பித்த இந்த ராஜ்ஜியம், இரண்டு பூஜ்ஜிய இலக்க

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

நாட்களைத் தொட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மூன்று, நான்கு பூஜ்ஜிய இலக்கங்களை அடைந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு ஆளுநர் உரையை 'விடுகதை' என்றார். ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசைப்பற்றி மக்களுக்கு நன்கு புரிந்ததால்தான், மாண்புமிகு அம்மா அரசின் சாதனை தொடர் கதையாகத் தொடர்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவின் அரசு மேலும் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்களும், மாண்புமிகு உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரகுரு அவர்களும், விழுப்புரம் மாவட்டம் பெரிய மாவட்டமாக உள்ளதால் அதனைப் பிரிக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை வைப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள். இதனைப் பரிசீலித்து, விழுப்புரம் மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால், நிருவாக வசதிக்காக விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாகத் தோற்றுவிக்கப்படும் இம்மாவட்டத்திற்கு இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவர் விரைவில் தனி அதிகாரியாக நியமிக்கப்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு எனது உரையில் உரிய பதிலை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவ்வாறு ஏதேனும் அவர்களது கோரிக்கை விடுபட்டிருப்பின், அதனையும் அரசு கவனத்தில்கொண்டு விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த பதிலுரையை ஏற்றுக்கொண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுத்த திருத்தங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு,



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு சத்தம் போடுகிறீர்கள்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு பதிலுரை ஆற்றியிருக்கிறார்கள். அவருடைய பதிலுரையை ஆற்றுகிற நேரத்தில் ஸ்டெர்லைட் ஆலைப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணக்கூடிய வகையிலே பதில் ஏதேனும் இடம்பெறும் என்று நான் எதிர்பார்த்தேன்; நேற்றைக்குப் பேசுகிறபோது நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அதைப்போல, இன்றைக்கும் உச்ச நீதிமன்றத்திலிருந்து வந்திருக்கக்கூடிய செய்தியைக்கூட நினைவுபடுத்தி, 'அரசுக்கு இது தெரியுமா? இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?' எனக் கேட்டபோது, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்; ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவருடைய பதிலுரையிலே ஒன்று சொல்வார் என்று நான் எதிர்பார்த்தேன். உச்ச நீதிமன்றம் இந்த முடிவை எடுத்து இன்றைக்கு அறிவித்திருக்கின்ற சூழ்நிலையிலே, உடனடியாக இந்த அரசு அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி கொள்கை முடிவு எடுத்தால்தான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண முடியும். எனவே, அந்தக் கருத்தைத் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். நான் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள், பல பொது அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்கள்கூட இந்தப் பிரச்சினையைத்தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைத் தயவுசெய்து நிறைவேற்றித் தாருங்கள் என்று தொடர்ந்து நான் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், அந்தச் செய்தியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையிலே

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2019 ஜனவரி 8*

இந்த அவையிலே தெரிவிக்காத காரணத்தால் அதைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் அதற்கு சத்தம் போடுகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, வெளிநடப்பு செய்வதென்றால், அமைதியாகச் செல்ல வேண்டும். நீங்கள் எதற்கு சத்தம் போடுகிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீதிமன்றத்திலே இந்த வழக்கு வந்தது. ஸ்டெர்லைட் பற்றிய தற்போதைய நிலையைப் பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். 15–12–2018 ஆம் நாளைய தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவினை எதிர்த்து, தமிழ்நாடு அரசின் மேல்முறையீட்டு மனு 8–1–2019 அன்று மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் கொடுத்திருந்த மேல்முறையீட்டின்கீழ், திருவாளர்கள் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு நோட்டீஸ் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. தேசிய பசுமைத் தீர்ப்பாயம், 15–12–2018 அன்று ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கலாம் என்று அளித்திருந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்த திருமதி பாத்திமா பாபு என்ற தனியரின் மனுவின்மீது மாண்பமை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்ற உத்தரவிற்கு, மாண்பமை உச்ச நீதிமன்றம் தற்போது தடை வழங்கியுள்ளது. இதற்குத்தான் தடை வழங்கியிருக்கிறது. இருப்பினும், தமிழ்நாடு அரசு தொடுத்த மேல் முறையீட்டின்மீது மாண்பமை உச்ச நீதிமன்றம் எதிர் மனுதாரரான திருவாளர் 'ஸ்டெர்லைட்' நிறுவனத்திற்கு நோட்டீஸ் மட்டுமே வழங்க உத்தரவிட்ட நிலையில், வழக்கின் இறுதித் தீர்ப்பு வந்தால் மட்டுமே தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்வது குறித்துப் பரிசீலிக்கும். நீதிமன்றத் தீர்ப்பு வந்தபின் விரிவான அறிக்கை தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத்



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதுகுறித்துக் கேட்டார்கள். ஆனால், அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். அவர்கள் வருகின்றபோதே ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி வெளிநடப்புச் செய்யலாம் என்று வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் காரணம் காட்டி அவர்கள் வெளியிலே சென்றுவிட்டார்கள். இன்றைக்குத்தான் நீதிமன்றத்திலே அந்த வழக்கு வந்தது. அந்த வழக்கினுடைய தீர்ப்பு முழுவதும் வந்தால்தான் அரசால் அதை முழுமையாகத் தெரிவிக்க முடியும். ஏதோ, ஊடகங்களிலும், செய்திகளிலும் வந்தவற்றை வைத்து, அந்த ஆதாரங்களை வைத்து நாம் அதைச் சொல்ல முடியாது. ஏற்கெனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதற்கு முழுமையான விளக்கம் கொடுத்த பின்னர், தீர்ப்பினுடைய உண்மை விவரம் நமக்குக் கிடைத்த பின்னர், அது தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி 'ஸ்டெர்லைட்' ஆலையை மூட வேண்டுமென்று நாம் எல்லோரும் சொல்கிறோம். ஆனால், நேர்மாறாக அந்தப் பிரச்சினை இப்போது நடந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்திலே அந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்று தீர்ப்பு வந்ததாகச் சொல்கிறார்கள். இந்த நிலையில் நம்முடைய அரசு இதற்குரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்று நாங்கள் கருதுவதால், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்.

[2019 ஜனவரி 8

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளைச் செய்தார்கள். விழுப்புரம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பு வந்தது. அதிலேயே திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தென்காசி தனி மாவட்டமாக்கப்படும் என்ற அறிவிப்பு வருமென்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம். இதுவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்துப் பரிசீலிக்கவில்லை என்பது எங்களுக்கெல்லாம் மன வருத்தத்தைத் தருகின்றது.

அதோடு, தூத்துக்குடி மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே, எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசினுடைய கொள்கை முடிவை அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், அதற்கு உகந்த பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்காத காரணத்தால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் வழியிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். விழுப்புரம் மாவட்டம் தமிழகத்தில் 1,099 ஊராட்சிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய ஒரு மாவட்டமாகும். விஸ்தரிப்பிலும் பெரிய மாவட்டம். மக்கள்தொகையிலும் மிகப் பெரிய மாவட்டமாகும். குறிப்பாக, முழுமையாக விவசாயிகள் நிறைந்த மாவட்டம். பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற ஒரு மாவட்டமாக இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர்தான், ஒருங்கிணைந்த கடலூர் மாவட்டமாக இருந்த மாவட்டத்தைப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்தார்கள். இன்றைக்கு,



2019 ஜனவரி 8] [திரு. சி.வி. சண்முகம்]

அம்மா அவர்களின் வழியிலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்கி, விழுப்புரம் மாவட்ட மக்களுடைய, பிற்படுத்தப்பட்ட, விவசாய மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி பகுதியைச் சுற்றியுள்ள பொதுமக்கள் சுமார் 20 ஆண்டுக் காலமாக கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வைத்த கோரிக்கையை ஏற்று, கள்ளக்குறிச்சிப் பகுதியைச் சுற்றியுள்ள மக்களினுடைய 20 ஆண்டுக் கால கோரிக்கையை ஏற்றும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றும் வகையிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் இதனைப் பரிந்துரை செய்து இந்தத் தனி மாவட்டத்தை வாங்கிக் கொடுத்த மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், கள்ளக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், சங்கராபுரம் தொகுதி மக்களின் சார்பாகவும், ரிஷிவந்தியம் தொகுதி மக்களின் சார்பாகவும், திருக்கோவிலூர் தொகுதி மக்களின்

[திரு. இரா. குமரகுரு] [2019 ஜனவரி 8

சார்பாகவும், உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

**திரு. அ. பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுகுறித்து announcement செய்துவிட்டார்கள், நீங்கள் உட்காருங்கள், திரு. பிரபு. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நல்ல அறிவிப்பு வந்திருக்கின்றது. தேவையில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பிரபு பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், 68 சீர்மரபினர் என உள்ள மற்ற சாதியினரும் DNC என்ற வகுப்பிலிருந்து DNT வகுப்பிற்கு மாற்ற வேண்டும் என்று ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு குழுவை நியமித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதற்காக பிரமலைக் கள்ளர் சமுதாயம் மற்றும் 68 சமுதாய மக்களின் சார்பில் என்னுடைய அன்பான நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மாண்புமிகு அம்மா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2019 ஜனவரி 8] [திரு. கே.பி. அன்பழகன்]

அவர்களுடைய வழியில் ஆட்சி செய்வதை நிரூபிக்கின்ற வகையில் தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்கள் பயன்படுகின்ற எண்ணேகொல்புதூரிலிருந்து தும்பலஹள்ளி அணைக்கட்டு வரை கால்வாய் மூலமாக நீர் கொண்டு வருகின்ற திட்டத்தையும் அதேபோன்று அணையாளம் அணைக்கட்டிலிருந்து தூள்செட்டி ஏரி வரை நீர் கொண்டு வருகின்ற திட்டத்தையும் அதேபோல் ஜெர்தலாவ் கால்வாய் 5,000 மீட்டரிலிருந்து புலிக்கரை ஏரி வரை நீர் கொண்டு வருகின்ற திட்டத்தையும் ஆக, மிகப் பெரிய மூன்று திட்டங்களை, நீண்ட நெடிய நாட்களாக இரண்டு மாவட்ட மக்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிலே அறிவித்து, இன்றைக்கு நிலம் கையகப்படுத்துகின்ற வழிவகைக்கு ஏற்பாடு செய்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஆயத்தப் பணியைத் தொடங்குவதற்குண்டான அறிவிப்பை அறிவித்தமைக்கு இரண்டு மாவட்ட மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குத் தெரிவித்து அமர்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு–அவினாசி திட்டத்தில் இருந்த 70 ஆண்டுகாலப் பிரச்சினையில், மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது அரசாணை வெளியிடப்பட்ட அந்தத் திட்டத்திற்காக இன்றைக்கு நிதி ஒதுக்கி, ஒப்பந்தம் கோரியதற்கும், அதேபோன்று 50 ஆண்டுகாலத்தில் இல்லாத பல்வேறு வளர்ச்சியைத் தந்ததோடு, மெட்ரோ இரயில் திட்டத்தை கோவை மாநகரத்திற்கு அறிவித்து, ஆரம்பகட்ட வேலை நடக்கும் என்ற அற்புதமான அறிவிப்பைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் கோவை மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜனவரி 8

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பிடியில் பின்னிப் பிணைந்துகொண்டிருந்த கோவை, ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்திருக்கின்ற அனைவருடைய உள்ளங்களிலும் தைப் பொங்கல் பொங்குவதைப்போல் இந்த அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, ஆளுநர் உரையில் அறிவித்து இந்த மாத இறுதிக்குள் அதற்கான டெண்டர் விடப்படும் என்று தெரிவித்ததன் மூலம் அந்த மக்களுடைய உள்ளத்தில் பால் வார்த்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றி மலர்களை இந்தப் பகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த விவாதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையில் கிள்ளிக் கொடுப்பதற்கு மனம் இல்லாத அரசியல்வாதிகளுக்கு மத்தியில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிள்ளையாக அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அதற்குத் துணை நிற்கின்ற துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் உறுப்பினர்கள் இங்கே மனமுவந்து நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

என்னுடைய வருவாய்த் துறையிலும், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மைல் கல்லாக, ஓர் அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு வெளியிட்டு, ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். 32 வருவாய் மாவட்டங்களைக் கொண்டிருக்கின்ற தமிழக வரலாற்றில், புதிய அத்தியாயமாக, தலைமையிடத்தை மக்கள் எளிமையாக அணுகுவதற்காக, அவை வட்டங்களாக இருக்கட்டும், கோட்டங்களாக இருக்கட்டும், ஏன், மாவட்டத்தைக்கூட பிரித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு அறிவிக்கும் என்பதை எடுத்துக்காட்டும்



2019 ஜனவரி 8] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக்கொண்டு, புதிய மாவட்டத்தை உருவாக்கித் தந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வருவாய்த் துறையின் சார்பிலே கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த, சீர்மரபினரின் கோரிக்கையையேற்று குழு அமைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சார்பில் நானும் அதனை வழிமொழிந்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் கோரிக்கையையேற்று ஒரு கமிட்டி அமைத்ததற்கு நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இராஜன் செல்லப்பா அவர்கள், திரு. நீதிபதி அவர்கள், திரு. அலெக்சாண்டர் அவர்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவரின் சார்பிலும், எங்களுடைய பிரமலைக் கள்ளர் சமூகத்தினர் சார்பிலும், 68 சீர்மரபின சாதிகளின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்கின்ற நோக்கிலே, அனைத்துத் தரப்பு விவசாயப் பெருங்குடி மக்களையும் அழைத்து, ஒவ்வொரு நாளும் என்னென்ன பணிகளைச் செய்கிறோம் என்பதையெல்லாம் அவர்களுக்கு எடுத்துரைத்து, இன்றைக்கு அந்த அற்புதமான

[திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்] [2019 ஜனவரி 8

திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தினுடைய அனைத்துத் தரப்பு மக்களின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் உரையின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கும்போது, மத்திய அரசுமீது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கின்ற வகையில், மென்மையான வார்த்தைகளை ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கடுமையான அளவிற்கு மத்திய அரசை எந்த அரசும் எதிர்க்காத வகையில் கடும் விமர்சனங்களையெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதாக ஒரு தகவலை, கருத்தைத் தெரிவித்தார். மேலும் அவர், 'நான் பேசியதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்' என்றார். பின்னர் 'நான் பேசியதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்' என்று நான் சொன்னேன். அந்த அடிப்படையிலே, இன்றைக்கு அவர்கள் அவையில் இருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால், அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். ஆனால், நேற்றைக்கு 'நான் பொறுப்பேற்கிறேன்' என்று சொன்னதன் அடிப்படையில், நான் இந்த அவைக்கு வந்து பதில் அளிக்கின்றேன்.

நேற்றையதினம் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னவுடனேயே இதுகுறித்து அலசி, அலசி ஆராய்ந்து, கண்ணாடி போட்டும் படித்துப் பார்த்தேன்; கண்ணாடி இல்லாமலும் படித்துப் பார்த்தேன்; பூதக் கண்ணாடி வைத்தும் படித்துப் பார்த்தேன். ஆனால், அப்படிப்பட்ட எந்த வாசகமும் 1996–2001 வரையிலும், 2006–2011 வரையிலும் இல்லை. இந்தப் 10 ஆண்டுகளில் மென்மையான வார்த்தைகளைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும், நான் சொன்னது சரி என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்பதன் அடிப்படையிலேயும் இந்தக் கருத்தை இப்பொழுது நான் இங்கே பதிய வைக்கின்றேன்.



2019 ஜனவரி 8] [திரு. டி. ஜெயக்குமார்]

2006 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரை, பக்கம் 3, 4–ல், பத்தி எண் 3–ல், மாநில சுயாட்சி குறித்து அந்தக் கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது. வாய் கிழிய மாநில சுயாட்சி பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ள கருத்தைப் பாருங்கள்; "..திட்டங்களையும், உதவிகளையும், உரிமைகளையும் வாய்மையுடன் வாதாடிப் பெறும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே ஆண்டில், தென்னக நதிகளை இணைத்தல் குறித்து, "..விரைந்து செயல்படுத்துமாறு இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தும்" என்றும், அதே ஆளுநர் உரையில், 8–9 ஆம் பக்கத்தில், 14–வது பத்தியில், உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் குறித்துப் பேசும்போது, "..வேளாண் தொழில் பாதிக்கப்படாமல் பாதுகாக்க இவ்வரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும்" என்றும், 16–வது பக்கம், 31–வது பத்தியில் சுயமரியாதை திருமண சீர்திருத்தச் சட்டம் குறித்து, ". . .செயல்படுத்த மத்திய அரசிடம் இவ்வரசு வலியுறுத்தும்" என்றும், 23–வது பக்கத்தில், 51–வது பத்தியில், கூட்டுறவுச் சங்கத் தேர்தல் குறித்து, "குறைபாடுகளை அகற்ற சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில், 3–5 ஆம் பக்கங்களில், 5–வது பத்தியில், இந்திய அரசியல் சட்டம் குறித்து கூறும்போது, "..புதியதாக இயற்றப்பட மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது" என்றும், அதேபோன்று, 5 ஆம் பக்கத்தில், 6–வது பத்தியில், வரி விதிப்பு அதிகாரம் குறித்து, "..அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்துகிறது" என்றும், 9–வது பக்கம், 14–வது பத்தியில், தேசிய நதிநீர் இணைப்புத் திட்டம் குறித்து, "..உரிய நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–40

அதே ஆண்டு 25–26 ஆம் பக்கத்தில், 44–வது பத்தியில் இலங்கைத் தமிழர் குறித்து சொல்லும்போது, "அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது" என்று சொல்லிவிட்டு, பெண்களுக்கான சொத்துரிமை குறித்து ஆளுநர் உரையின் 26–27 ஆம் பக்கத்தில், 45–வது பத்தியில், "பெண்ணுரிமையினை நிலைநாட்ட வழி வகுக்கும்படி மத்திய

[திரு. டி. ஜெயக்குமார்] [*2019 ஜனவரி 8*

அரசை இவ்வரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, கிட்டத்தட்ட 1996–2001, 2006–2011 வரையிலுள்ள அனைத்து வருட ஆளுநர் உரைகளிலும் இதுபோன்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், Bonus ஆக 1996–2001–ல்கூட நான் சொல்லாதவற்றையும் எடுத்திருக்கிறேன். புத்தகங்களையெல்லாம் அலசி அலசிப் பார்த்து ஆராய்ந்தெடுத்த குறிப்புகள் இவை. மத்திய அரசை எதிர்த்தோ, கண்டித்தோ, கண்டனம் தெரிவித்தோ, எதிர்ப்பு தெரிவிக்கின்ற வகையிலோ, எந்த இடத்திலேயும் ஒரு வரிகூட குறிப்பிடப்படவில்லை. இதனை இந்த அவையில் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இதனைத் தெரிவித்தேன். தற்போது நான் தெளிவுபடுத்தியதால், மத்திய அரசுக்கு யார் சொம்பு தூக்குகிறார்கள், யார் கூஜா தூக்குகிறார்கள், யார் காவடி எடுக்கிறார்கள் என்று நாட்டு மக்களுக்குத் தெரியும்; உலக மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஸ்டெர்லைட் ஆலையில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்று தெரிவித்துவிட்டு, அவையிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். இந்த அவையில் அவர்களது ஆட்சிக் காலத்தில் ஸ்டெர்லைட் ஆலை சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகின்றேன். தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது, ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மாண்பமை சென்னை நீதிமன்றத்தில் 1996 முதல் 1998 வரை பல்வேறு தேதிகளில் கீழ்க்கண்டவர்களால் பொது நல வழக்குகள் தொடரப்பட்டன. (1) தூய சுற்றுச்சூழலுக்கான தேசிய அறக் கட்டளையிலிருந்து ஒருவர், (2) ம.தி.மு.க. பொதுச் செயலாளர், மரியாதைக்குரிய திரு. வைகோ அவர்கள், (3) திரு. கனகராஜ், செயலாளர், CITU, தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் வழக்கு தொடர்ந்தார்கள். ஸ்டெர்லைட் தொழிற்சாலை பாதுகாப்பு முறைகளைச் சரியாக அமைக்காததால் ஏற்படும் மாசு மற்றும் விபத்துகள் குறித்தும் மேற்கூறிய வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், எல்லாவிதமான விதிமுறைகளையும், சட்டங்களையும் பின்பற்றி தொழிற்சாலைப்



*2019 ஜனவரி 8*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பணிகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்த பிறகே அனுமதி வழங்கப்பட்டது என்ற தனது நிலைப்பாட்டை உயர் நீதிமன்றத்தில் எடுத்துரைத்தது. அப்போது ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசு, ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவாக இந்த நிலைப்பாட்டை எடுத்தது. 28–9–2010 அன்று வழங்கப்பட்ட மாண்பமை உயர் நீதிமன்றத் தீர்ப்பில் பக்கம் 8, பத்தி 6–ல் இதுகுறித்துக் குறிப்பிட்டுள்ளதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

“On the part of the Government of India and the State Government and also the Tamil Nadu Pollution Control Board, it has been contended that all the procedures contemplated under law have been duly followed while granting permission to the company and periodical checks are being conducted regarding the affairs and activities of the company.” ஆனால், மாண்பமை உயர் நீதிமன்றம் மேற்கூறிய வழக்குகளை ஒன்றிணைத்து விசாரித்து 28–9–2010 அன்று கீழ்க்கண்ட தீர்ப்பினை வழங்கியது: அப்போது தி.மு.க. ஆட்சியில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதில் ஸ்டெர்லைட் தொழிற்சாலை உடனடியாக மூடப்பட வேண்டும். தொழிலாளர்களுக்குரிய இழப்பீட்டை வழங்க வேண்டும். தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. மேற்கூறிய உயர் நீதிமன்ற ஆணைக்கு எதிராக தொழிற்சாலை நிருவாகம் 1–10–2010 அன்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. அதை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை உச்ச நீதிமன்றத்தில் மேல் மனு செய்தது. உச்ச நீதிமன்றம் 1–10–2010 அன்று உயர் நீதிமன்றத்தின் மூடுதல் ஆணையை நிறுத்தி வைத்தது. உச்ச நீதிமன்றம் இவ்வாறு ஆணை பிறப்பிக்க தி.மு.க. ஆட்சியில் தாக்கல் செய்த வாதுரைதான் காரணம். 14–10–1996 அன்று இந்த ஆலையை இயக்குவதற்கான இசைவாணையும், 20–5–1999 அன்று கூடுதல் பொருட்கள் தயாரிப்பதற்கான இசைவாணையும், 2–11–2006 அன்று ஆலையின் இரண்டாவது விரிவாக்கத்தை நிறுவுவதற்கான இசைவாணையும், 15–11–2006 அன்று ஆலையின் இரண்டாவது விரிவாக்கத்தை இயக்குவதற்கான இசைவாணையும், 19–1–2009 அன்று ஆலையைப் புதுப்பிக்க இசைவாணையும், 14–8–2009 அன்று ஆலையைப் புதுப்பித்தல் இசைவாணையும், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் வழங்கப்பட்டுள்ளன.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2019 ஜனவரி 8*

*பிற்பகல் 1–45*

